Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1325)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 05 செவ்வாய்க்கிழமை (17.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 200
















# அறிக்கைகள் மூலம் தீர்வுகாண முடியாது

## கூட்டமைப்பிற்கு அறிவுறுத்துகிறது அரசு



(கொழும்பு)

தமிழ் மக்களுக்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்குக் கூட்டமைப்பிற்கு உண்மையான அக்கறை இருக்குமேயானால், ஊடகங்களுக்குத் தேவையற்ற அறிக்கையை விடுவதனை விடுத்து, அரசுடன் பேச்சு நடத்த வேண்டுமென அமைச்சர் சுசில்பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, அரசாங்கத்தின் மீது பழி சுமத்துவது என்பது தமிழ்க் கூட்டமைப்பின் வழமையான ஒரு விடயம்.

இது இன்று தமிழ் மக்களுக்கும் நன்கு தெரியும். செய்திக்கு ஒன்றுமில்லாத பட்சத்தில் ஊடகங்கள் அரசுடனான பேச்சு எப்படி என்று கேட்க, அரசை வசைபாடி அறிக்கை விடுவது கூட்டமைப்பினரது வழமையானதொரு விடயம். அதனால் இது பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் அவர்களுக்கு உண்மையாகவே அக்கறை இருப்பின் அது குறித்து அரச தரப்புடனேயே பேசவேண்டும்.

19 ஆம் பக்கம் பார்க்க

### ஐ.நா. பணியாளரின் வீட்டின் மீது மட்டக்களப்பில் தாக்குதல்

ஐ.நாவின் மட்டக்களப்பு மாவட்டச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பான பொறியியலாளர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலினால் வீட்டின் கதவுகள், யன்னல்கள் சேதமாகியதாகவும் ஆயினும் இத்தாக்குதலில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு ஐ.நா. செயலகதத்தில் பொறுப்பு வாய்ந்த ஒரு அதிகாரியாகப் பணியாற்றும் இளங்கோவன் காண்டீபன் என்ற பொறியியலாளரின் வீடே மேற்படி குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியது. இந்தத் தாக்குதல் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கூட்டமைப்பின் மேதினப் பேரணி கிழக்கு எம்.பிக்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் மேதினத்தை நடாத்தவுள்ள கூட்டமைப்பின் முடிவிற்கு அக்கட்சியின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், நடத்தப்படவுள்ள மேதினப் பேரணியில் கலந்துகொள்ளப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாகக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளதாவது,

ஐ.தே.கட்சியுடன் இணைந்து கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ள மேதினப் பேரணியில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கூட்டமைப்பின் எம்.பிக்கள் கலந்துகொள்ள மாட்டார்கள். மாறாக மட்டக்களப்பில் இதுபோன்ற ஒரு பேரணியை நடாத்துவோம். அத்துடன் இதுபோன்ற ஒரு பேரணியை வவுனியா மற்றும் கிளிநொச்சியிலும் நடத்துவோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் மேதினப் பேரணியில், கட்சிக்குக் கட்டுப்பட்டு தான் கலந்துகொள்ளவுள்ளதாக, கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## இந்திய எம்.பிக்கள் குழுவினர் வருகை தேசிய அரசியலைப் பாதிக்கக்கூடாது

### அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

இந்திய நாடாளுமன்றக் குழுவினரின் வருகையானது எந்த வகையிலும் உள்நாட்டின் தேசிய அரசியலைப் பாதிப்பதாக அமைந்துவிடக்கூடாது. ஏனெனில் இந்தியாவிற்கு இலங்கை விடயங்களில் தலையிட உரிமையோ, அதிகாரமோ கிடையாது. இலங்கை ஒருபோதும் காஷ்மீர் விடயத்திலோ தமிழக அரசியலிலோ தலையிட்டது இல்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இந்திய மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் ஆறு நாள் பயணத்தை மேற்கொண்டு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று இலங்கைக்கு வந்த நிலையிலேயே ஜாதிக ஹெல உறுமய இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க, உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிட்டமையாலேயே இலங்கையில் போர் ஏற்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க

## நிலக்கண்ணி வெடித்து இரு இளைஞர் படுகாயம்

கிளாலிப் பகுதியில் தேங்காய் பிடுங்கச் சென்றவேளை நிலக்கண்ணிவெடி வெடித்ததில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொழும்புத்துறை மற்றும் நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## கோத்தாபயவிற்கு எதிராக சிறப்பு மீறல் விவகாரம்

### கிரியெல்ல தெரிவிப்பு



தான் தெரிவித்த கருத்துக்கு அரச சேவையாளரான பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ சவால் விடுத்தமைக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை மீறல் விவகாரத்தை எழுப்பவுள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினரான தான் கூறிய கருத்தை சவாலுக்குட்படுத்த கோத்தாபய ராஜபக்ஷவுக்கு உரிமை இல்லை என

19 ஆம் பக்கம் பார்க்க

## கடத்தியவரைக் கண்டதாகக் கூறும் பெண்ணின் பெயரைத் தாருங்கள்

### கிரியெல்லவுக்கு, கோத்தாபய சவால்



தனது மகன் கடத்தப்பட்டமை குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்றபோது, கடத்தலில் ஈடுபட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் கண்டதாக கூறும் பெண்ணின் பெயரைத் தருமாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார். பெண்ணொருவர் தன்னிடம் (கிரியெல்லவிடம்) வந்து தனது மகனை கடத்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## நலன்புரி நிலைய மக்களை சந்திக்க அனுமதி வேண்டும்

### இந்திய எம்.பிக்கள் கோரிக்கை

(புதுடில்லி)

இலங்கையில் இந்தியாவின் உதவியுடன் இடம்பெறும் புனரமைப்புப் பணிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடுவது முக்கியம் அல்ல. நலன்புரி நிலையங்களில் உள்ள ஈழத் தமிழர்களைச் சந்திப்பதே முக்கியம். அதற்காக வற்புறுத்தியுள்ளோம். இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் சுஷ்மா சுவராஜ தெரிவித்துள்ளார். இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று மாலை டில்லியில் இருந்து இலங்கைக்கு புறப்படத்தயாரான நிலையில், அவர்களிடம் வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மத்தாய்

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற் போயிருந்த நிலையில் முன்னாள் புலி உறுப்பினர் மீட்பு

கடந்த 5 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தாக கூறப்படும் புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கி விடுவிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் திருகோணமலை - அனுராதபுரம் சந்தியில் கை விடப்பட்டு சென்றிருந்த நிலையில் மீட்கப்பட்டதாக முதலிக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். முதலிக்குளம் டி .5 நாமால்வத்தை பிரதேசத்தில் வசித்து வரும் ராசா சுதர்ஷன் என்ற இளைஞரே இவ்வாறு காணாமல் போன நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# மீன்பிடித் துறைமுகங்கள் புனரமைப்பு ஐ.ஓ.எம். நிறுவனம் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு சேந்தாங்குளம் பகுதியில் மீன் பிடித்துறைமுகம் மற்றும். பாசையூர்ப் பகுதியில் மீன்பிடி இறங்குதுறை என்பனவற்றைப் புனரமைக்க 64 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் இப்புனரமைப்புப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பாசையூர்ப் பகுதியில் ஏற்கனவே யூனெப்ஸ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு நிதிப் பற்றாக்குறை காரணமாக கைவிடப்பட்ட மீன்பிடி இறங்குதுறை நிர்மாணப் பணியினை ஐ.ஓ.எம். நிறுவனம் 50 மில்லியன் ரூபா நிதிச் செலவில் மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் அந்நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது. ஏற்கனவே குறித்த பகுதியில் யூனெப்ஸ் நிறுவனத்தினால் கற்கள் போடப்பட்டதுடன் திட்டம் கைவிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கீரிமலை சேந்தாங்குளம் பகுதியில் மீன்பிடித் துறைமுகமொன்றை அமைக்கவும் ஐ.ஓ.எம். நிறுவனம் 14 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கியிருக்கின்றது.

இப்பகுதியில் மீன் ஏல விற்பனை நிலையம், பொது மண்டபம் மற்றும் மீன்பிடித்துறைமுகம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவற்றுக்கான பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## ஆலயத் திருப்பணிக்கு உதவுமாறு வேண்டுகோள்

(சுன்னாகம்)

தெல்லிப்பளை சிவகாமி அம்பாள் சமேத சந்திர் மௌலீஸ்வரர் தேவஸ்தானத்தில் பல திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றது இதனைப் பூரணமாக முடிப்பதற்கு பொதுமக்களிடம் இருந்து நிதி உதவி கோரி நிற்கின்றோம் எனவும், பண உதவியினை வழங்கி உதவுமாறும் ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (148)



## சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

யாழ்.இந்து சைவபோசன, மூன்று கிரகபாவம் 28 உடைய அரச உத்தியோகம் பார்க்கும் 34 வயதுடைய சுவாதி 4ஆம் பாதம் உடைய மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. முதல் தடவையில் சகல விபரத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு: விளம்பர இல: 05, மே/பா: தினமுரசு, 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/1554)

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1350)


## வீதிப் புனரமைப்பு நிறுத்தம் பயணிகள் கடும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் ஊரியானுக்குச் செல்லும் மூன்றாம் குறுக்கு வீதி, கொங்கிறீற் வீதியாகப் புனரமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டு தாமதமடைவதால் அப்பகுதியூடாக போக்குவரத்துச் செய்யும் மக்கள் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

குறித்த இரண்டு கிலோ மீற்றர் நீளமான வீதி இவ்வருட முற்பகுதியில் இருந்து புனரமைப்புச் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

குண்டும் குழியுமான பகுதிகள் கற்கள் நிரவி சீர்செய்யப்பட்டது. ஆயினும், கொங்கிறீற் இடும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதன்காரணமாக குறித்த வீதியின் வழியாகப் பயணிக்கும் மக்கள் வாகனங்களால் கிளறுப்படும் கற்கள், மண் போன்ற தூசிகளினால் பெரிதும் துன்பப்பட்டு வருகின்றனர்.

அத்துடன், வீதியும் உயர்தப்பட்டிருப்பதனால் இரவு நேரங்களில் பயணிப்போரும் சிரத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே குறித்த வீதியினை விரைந்து புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (பா)


## 92 ஆவது ஆண்டு நிறைவு விழா

(திருநெல்வேலி)

கல்வியங்காடு ஞானபாஸ்கரரோதய சங்கத்தின் 92ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சங்க மண்டபத்தில் செ.ப.துஷ்யந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினரர்களாக வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அ. உதயகுமார், யாழ்.மாவட்ட விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் மரியதாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (137)

# யாழ்.பொது நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்துக்கு தொடர்ந்தும் பல்வகை நூல்கள் அன்பளிப்பாக கிடைத்து வருவதாக யாழ்.பொது நூலகத்தின் பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் இந்நூலகத்தில் பார்வையிடக்கூடிய வகையில் சுமார் ஒரு இலட்சம் வரையான நூல்கள் வைக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தவிர மேலும் பழமையான நூல்களும் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும், இவற்றுக்கான கட்டட வசதியே தேவையாக இருப்பதாகவும் பிரதம நூலகர் குறிப்பிட்டார்.

அண்மையில் அவுஸ்ரேலிய நாட்டைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் 3700 ரூபா பெறுமதியான ஒரு தொகுதி நூல்களை நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்திருப்பதனையும் சுட்டிக்காட்டிய அவர் தொடர்ந்தும் பொது அமைப்புக்களிடம் இருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் நூல்கள் அன்பளிப்பாகக் கிடைத்து வருவதாகவும் தெரிவித்தார்.

வருங்காலத்தில் நூல் நிலையத்தில் உள்ள பழமையான நூல்களை நுண் சுருள் வடிவத்திற்கு மாற்றவும் (மைக்றோ பிலிம்) ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த நூலகத்தினை வயது வந்தோர் பயன்படுத்துவதைவிட மாணவர்களே பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

நூலகத்தினைப் பாவிப்போர் தொகை கடந்த வருடத்தினைவிட இவ்வாண்டு அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# குக்கர் வெடித்ததால் யுவதிக்கு எரிகாயம்

குக்கர் வெடித்து யுவதி ஒருவர் எரியுண்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் சமைத்துக் கொண்டிருக்கும் போது குக்கர் வெடித்துள்ளது.

இவ்விபத்தில் ஜீவராஜ் சசிகலா (வயது-18) என்ற யுவதியே காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)



## வேலணை கிழக்கு செட்டிப்புலம் காளவாத்துறை அருள்மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோவில்

### வருடாந்த அலங்கார உற்சவம் - 2012

17.04.2012 — காலை 9.00 மணிக்கு விநாயகர் பூசை, விஷேட திரவியாபிஷேகம்,
விஷேட பூசையுடன் அன்னதானமும் இடம் பெறும்.

18.04.2012 — மாலை பூர்வாங்க வழிபாடு, சாத்து வழிபாடு
யாக பூசைகள், மருந்து சாத்துதல்

19.04.2012 — * காலை 6.00 மணிக்கு கணபதி பூசை,
யாக பூசை, ஹோம வழிபாடு, தீபாராதனை

* காலை 7.21 முதல் 8.30 வரையான சுபமங்கள முகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் அடியார்கள் யாவரும் பக்தி சிரத்தையோடு வரும் வேளையில் உங்களால் இயன்ற பால், தயிர், இளநீர், கற்பூரம், எண்ணெய், பூ, பூ மாலை போன்ற சிவத்திரவியங்களைக் கொண்டு வந்து ஐயன் அருள் பெறுக.

(C/1446) ஆலய பரிபாலகர்கள்

## Tender Notice

**Palmyrah Research Institute Kaithady - Jaffna**
**Palmyrah Development Board**
**Ministry of Traditional Industries and Small Enterprise Development**

Invites bids from reputed manufactures/dealers/suppliers for the Palmyrah Research Institute (PRI).

Following are the packages requested for,

| Package | Bid title |
|---|---|
| 01. | Supply of office furniture |
| 02. | Supply of computers, Printers, Photo copy machine, fax machine and Scanners |
| 03. | Supplying & Fitting of sign Board |
| 04. | Supply of tipping trailer |
| 05. | Supply of Water bowser |
| 06. | Supply of air conditions |
| 07. | Supplying & Fitting of intercom facility |
| 08. | Supplying of plastic coated wire mesh |
| 09. | providing security services |

Specifications, particulars and requirement details of the above can be collected from the Head office, palmyrah Development Board, N.H.D.A building, Kandy road, Jaffna from 23/04/2012 to 30/04/2012.

The last date for submission of sealed tender document is 3.00 pm of 02/05/2012. Tenders will be opened immediately thereafter, the same day.

Please note that the package number quoted in the cage should be clearly mentioned on the top of the left hand corner of the postal cover.

**Chairman,**
palmyrah Development Board,
N.H.D.A building, - 1st Floor,
Kandy road, Jaffna

Tel : 0212222034
Fax : 0212224154

(C/1445)

நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயல்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது. - காரல் மார்க்ஸ் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மற்றவர்களிடம் ‘சரி’ இருக்காதா?

பாண்டவர்களின் வனவாசத்தின் போது, ஒரு குளத்தைக் காத்து நிற்கும் யட்சன், தன் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் படி கேட்க, தங்கள் வீரத்தை நம்பி அவனை அலட்சியப்படுத்தும் வீம, அர்ச்சுன, நகுல, சகாதேவர்களை குளத்தினுள் மூழ்கடித்து விடுகிறான்.

தம்பியர் யாரும் திரும்பி வராததைக் கண்ட தருமன் அக்குளத்திற்கு வருகிறான். யட்சனின் கேள்விகளுக்குப் பதிலைச் சொல்கிறான். அதற்காகத் தருமனை மெச்சிய யட்சன், “உன் தம்பியரில் யாராவது ஒருவனின் உயிரைத் திருப்பித் தரலாம். யார் வேண்டும் கேள்” என்கிறான்.

அப்படியானால் சகாதேவனைப் பிழைக்கச் செய்யுங்கள் என்கிறான் தருமன். “இது என்ன ஆச்சரியம்! உன் சொந்தத் தம்பியரான வீமன், அருச்சுனனை விட்டுவிட்டு சகாதேவனைக் கேட்கிறாயே” என்கிறான் யட்சன்.

“ஆம், எங்கள் தாயான குந்திக்குப் பிறந்தவர்களில் நான் பிழைத்திருக்கிறேன். அதுபோல் மற்ற தாயாரான மாத்ரிக்குப் பிறந்தவர்களில் யாராவது மிஞ்ச வேண்டாமா? அதனால்தான் சகாதேவனைக் கேட்டேன்” என்கிறான். இதுகேட்ட யட்சன் மகிழ்ந்து எல்லோரையும் பிழைக்க வைக்கிறான்.

மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்கும் இந்த அற உணர்வை நாம் தொலைத்துவிட்டிருப்பதும் நம் அவலங்களுக்குக் காரணம் என்று தோன்றுகிறது. நமது துன்பங்களைப் பற்றியே தான் நாம் யோசிக்கிறோம். அதுமட்டுமல்ல, மற்றவர்களும் நம் துன்பத்தைப் பற்றியே யோசிக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறோம்.

இதனால்தான் நமக்குச் சார்பாகப் பேசாதவர்கள், நம் சார்பு நிலையை எடுக்காதவர்கள் எல்லோரையும் உடனடியாகவே பகையாளிகள் லிஸ்டில் சேர்த்து விடுகிறோம். அவர்களது தேவை என்ன என்றோ அவர்களது பிரச்சினை என்ன என்றோ நாம் கவனத்தில் எடுப்பதில்லை.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான தேவையிருக்கும் என்பதை உணர மறுக்கிறோம். அவர்களுக்குத் தேவையிருக்கும் போது அவர்கள் நமக்குச் சார்பாக இருப்பார்கள்; அந்த நிலை மாறுகையில் நம்மைக் கண்டுகொள்ளாமலுமிருப்பார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளத் தவறுகிறோம். நம்மைக் கைவிட்டு விட்டதாகக் கோபப்படுகிறோம். எதிரிகளாக்கிக் கொள்கிறோம்.

தவிரவும், குறுகிய நோக்கில் நமது அரசியல் இலாபங்கள் இருக்குமென்றால், அதற்கும் எதிரிகள் எப்போதும் தேவைப்பட்டபடியே இருக்கிறார்கள். இதற்காகவும் ஏதிரிகளை உருவாக்கியபடியே இருக்கிறோம். இப்போது நம் அரசியல் என்பது ஒருவர் மாற்றி ஒருவரை எதிரியாக்கிக் கொண்டிருத்தல் என்று ஆகிவிட்டது.

ஈழத்தமிழர்கள் இன்று நண்பர்களாகக் கருதிக்கொள்ள யாரிருக்கிறார்கள் என்பதை ஒருகணம் யோசித்துப் பார்ப்பது நல்லது. இந்தப் பரந்த பூவுலகில் இப்போது நம் கடைசி நண்பனாகச் சொல்ல முடிந்திருப்பது யாரை? அமெரிக்காதான் அது என்ற முடிவுக்கு நாம் வந்துவிட்டோமா?

எப்படி இந்த நிலைக்கு வந்து சேர்ந்தோம் என்று நாம் யோசித்துப் பார்க்க மாட்டோமா? சரி, அமெரிக்காதான் நண்பன் என்றால் அந்த நாடு சொல்கிறபடி நம்மால் நடந்து கொள்ள முடியுமா? நமக்கு யார் சொல்லும் நியாயத்தை நாம் சரி என்று எடுத்துக் கொள்வோம்? நம்மைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பிழை என்பதுதான் நம்முடைய நியாயமா?

உலகத்தை விட்டுவிடுவோம். நம்முடைய சரியை சரி என்று சொல்லக் கூடிய, இந்த நாட்டிலுள்ள ஏனைய தரப்பு மக்களுடன் நாம் பேசினோமா? நம்முடைய சரியை நிறுவுவதற்கான பயணத்தை நாம் எங்கிருந்து தொடங்குவது? - ஆசிரியர்

– கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் –

# மீள்குடியேறி இரண்டரை வருடங்கள்; மின்சார வசதி வழங்கப்படவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப்பகுதியிலுள்ள திருநகர் மயான வீதிப் பகுதியில் மீள்குடியேற்றம் இடம் பெற்று இரண்டரை வருடங்களை எட்டியுள்ள நிலையிலும் இதுவரை பொதுமக்களுக்கு மின்சார வசதிகள் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

புகையிரதப் பாதையிலிருந்து திருநகர் மயானம் வரை செல்லும வீதிப்பகுதியில் உள்ள மக்களுக்கே இதுவரை மின்சார வசதிகள் வழங்கப்படவில்லை.

இப்பகுதியில் 2009 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் மக்கள் மீள்குடியமர்ந்து தற்காலிக வீடுகளில் குடியிருந்து தற்போது நிரந்தர வீடுகள் அமைத்து குடியேறி வருகின்றனர். இந்த நிரந்தர வீடுகளும் அமைக்கப்பட்டு சுமார் ஒரு வருடங்கள் கடந்துள்ளன.

இந்த வீதியில் மின்சாரக் கம்பங்கள் நாட்டப்பட்டு நீண்ட நாட்கள் கடந்துள்ள நிலையில் மின்சாரக் கம்பிகள் இணைக்கப்படவில்லை. இப்பகுதியில் வாழும் மக்கள் மின்சார இணைபபிற்கான விண்ணப்பத்தை மின்சார சபையிடம் சமர்ப்பித்து நீண்ட நாட்கள் கழிந்த நிலையிலும் மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

ஏ - 9 வீதியிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் ஆரம்பிக்கும் இந்தப் பகுதியில் அரச சார்பற்ற நிறுவனம், தொழில் நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் பெருமளவான நிரந்தர வீடுகள், இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மின்சார வசதி எதுவுமில்லாததால் கடந்த இரண்டரை வருடங்களாக பாதுகாப்பற்ற மண்ணெண்ணெய் விளக்கையே மக்கள் பயன்படுத்தி வருவதுடன் கல்வி பயிலும் மாணவர்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மக்கள் மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது மின் இணைப்பை வழங்கும் பணி ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டு விட்டதாகவும், அவர்கள் இப்பணியை பூர்த்தி செய்யாது வேறு ஒப்பந்தப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி கிளிநொச்சி நகரில் மாவட்ட செயலகத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் அமைந்துள்ள இப்பகுதிக்கு மின்சாரம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# புத்தாக்க முயற்சி ஆலோசனை சிறந்த ஆக்கத்திறனை வெளிப்படுத்தும்

## –ஆரம்பப்பிரிவு கல்விப்பணிப்பாளர் குகதாஸன்

(யாழ்.நிருபர்)

ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே சிறந்த ஆக்கத்திறன்களை வெளிக்கொண்டு வருவதற்கு ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும். தினசரி வகுப்பறைக் கற்பித்தலின் போது புத்தாக்க முயற்சிகளுக்கான ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

இவ்வாறு கோண்டாவில் இந்து மகா வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர்களின் புத்தாக்கக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய யாழ்.கல்வி வலய ஆரம்பப்பிரிவு கல்விப் பணிப்பாளர் பூ.குகதாஸன் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் சு.சண்முககுமார் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற இந் நிகழ்வில் உதவிக்கல்விப்பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில

இங்கு மாணவர்கள் தாம் கற்ற பாடங்களில் அலகு ரீதியிலான செயற்பாட்டு ஆக்கங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஆக்கங்கள் செயற்பாட்டு ரீதியான கற்றலுக்கு உதவுவதோடு கற்பித்தல் உபகரணங்களையும் தயாரிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளமை பாராட்டத் தக்கதாகும்.

இங்கு பயன்படுத்த முடியாத கழிவுப் பொருட்களைக் கொண்டு பாவனைக்கேற்ப புத்தாக்கங்கள், அழகுசாதனப் பொருட்கள் என்பவற்றை உருவாக்கியுள்ளனர். இத்தகைய முயற்சி எதிர்காலத்தில் நல்ல கண்டுபிடிப்பாளர்களை இனங்காணவும் புத்தாக்கங்கள் பல உருவாகவும் உறுதுணையாக அமையும்.

இங்கு மாணவர்களை பாட நூலகளோடு மட்டுமே உறவாடும் புத்தகப் பூச்சிகளாக வளர்க்காது ஆகத்திறன் மிக்க நவீன கண்டுபிடிப்பாளர்களாக உருவாக்க ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் முன் வரவேண்டுமெனவும் குறிப்பிட்டார். ஆரம்பப் பிரிவின் பொறுப்பாசிரியை திருமதி நா.சண்முகரத்தினம் நன்றி நவின்றார். (10)

# 400 கல்விசார் இறுவட்டுக்கள் பொது நூலகத்திற்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்திற்கு “சிங்கப்பூர் இன்ரநஷனல பவுண்டேசன்” நிறுவனம் 400 சிறுவர் கல்விசார இறுவட்டுக்களை (சி.டி) வழங்கியிருப்பதாக யாழ். பிரதம நூலகர் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கான கதைகள், பாடல்கள், விளையாட்டுக்கள், காட்டூன், என்பன இவ் இறுவட்டுக்களில் அடங்குவதாக தெரியவருகின்றது.

தற்சமயம் கொழும்பு வந்து சேர்ந்திருக்கும் இவ் இறுவட்டுக்கள் இன்னும் சில நாட்களில் யாழ்நூலகம் வந்து விடும் எனத் தெரிய வருகின்றது.

இவை வந்து சேர்ந்ததும் தரம் பிரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்குவது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளதாக யாழ்.நூலகத்தின் பிரதம நூலகர் தெரிவித்துள்ளார்.

தற்போது மாணவர்களிடையே கணினி அறிவு அதிகரித்துச் செல்லும் சூழலில் வெளிநாட்டு நிறுவனத்தின் இத்தகய அன்பளிப்பு மாணவர்களின் அறிவுசார் விருத்திக்கு வழிகோலுமெனவும் சுடடிக் காட்டப்படுகின்றது. (பா)

# பிரான்ஸ் விமான சேவை தமிழுக்கு முன்னுரிமை

(கொழும்பு)

எயார் பிரான்ஸ் ( Air France) விமான சேவை நிறுவனம், பயணிகளுக்கான தனது விரிவாக்க சேவையில், தமிழ் மொழிக்கு முக்கிய இடத்தினை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எயார் பிரான்ஸ் விமான சேவையானது, பிரான்சின் Charles De Gaulle பிரதான விமான நிலையத்தில் தனது சேவையினை விரிவாக்கம் செய்யவுள்ளது. எயார் பிரான்ஸ் விமான சேவையில், தமிழ்ப் பயணிகளின் போக்குவரத்து அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள எயார் பிரான்ஸ் இதனைக் கருத்தில் கொண்டே, பயணிகளுக்கான சேவை விரிவாக்கத்தில் தமிழ் மொழிக்கு முக்கிய இடத்தினை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டில் இந்த விரிவாகம் முழுமையடையவுள்ள நிலையில், தமிழ்ப் பயணிகளுக்கான இலகு படுத்தப்பட்ட பயணத்தினை உறுதிசெய்ய, தமிழ் மொழியிலான சேவையினை உள்ளடக்கவுள்ளதாகவும், இதற்காக தமிழர்களைச் வேலையில் அமர்த்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எயார் பிரான்ஸ் பயணிகளுக்கான சேவையினை விரிவாக்கத்தில் சீன மொழியும் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருநாவுக்கரசர் குருபூசை விழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை - தெக்கணபபாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினரும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா இன்று செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்கு வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

இந்து சமய கலாசார உத்தியோகத்தர் உதயபாலனும், சங்கானை பிரதேச உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே உண்மையான அரசியல்வாதியின் கடமை

## வலி.கிழக்கு ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஐங்கரன்



(கொழும்பு)

மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே உண்மையான அரசியல்வாதியினுடைய கடமையாகும் என வலி.கிழக்குப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச அமைப்பாளருமாகிய இராமநாதன் ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பிரதேச மக்கள் சபையின் மாதாந்தக் கூட்டமும் கூரைத்தகடு வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் கோப்பாய் அரசியல் அலுவலக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தலைமைதாங்கி உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


மக்களின் கஷ்ரங்களை அறிந்து திட்டமிட்டுச் செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலையாகும். அந்த வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை இனங்கண்டு அதனை நிறைவேற்றி அவர்களுடைய எதிர்காலம் மிகவும் சிறப்பாகவும், சந்தோசமாகவும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக இரவு, பகல் பாராது அயராது உழைத்து வருகின்றார்.

அவருடைய பாதையிலே நாங்களும் சென்று எமது மக்களுடைய தேவைகளையும் அவாகளுடைய பிரச்சினைகளையும் இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு மக்கள் சபையினராகிய நீங்கள்தான் முன்வந்து உழைக்க வேண்டும்.

அமைச்சரின் பணிப்புரைக்கமைய ரூபா 3200 பெறுமதியான கூரைத்தகடினை வழங்கியிருக்கின்றேன் என்றார்.

மக்கள் சபையினுடைய சென்ற மாதக் கூட்டத்தில் உரும்பிராய் தெற்கு, யோகபுரம் அண்ணா சன சமூக நிலையத் தலைவரும, எமது மக்கள் சபை உறுப்பினருமாகய கனகு சுகந்தன் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க அவர்களுடைய முன்பள்ளி சுற்றுவேலி புனரமைப்பதற்கு ரூபா 20000 வழங்கியிருக்கின்றேன் என்றார்.

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த கருணாகரன் ரஜனி என்ற பயனாளிக்கு மக்கள் சபைத் தலைவரும், வலி.கிழக்குப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமாகிய இ.ஜங்கரனும், மக்கள் சபைச் செயலாளர் அ.றஜீவனும் இணைந்து கூரைத்தகட்டினை வழங்கி வைத்தனர். (135)



**கிளிநொச்சியில் ஏ-9 வீதியில் நீதிமன்றத்திற்கு அருகில் மக்கள் வங்கிக் கட்டடம் துரிதகதியில் அமைக்கப்பட்டு கம்பீரமாக உயர்ந்து வருகிறது.**

**நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததும், மக்கள் பூரணமாக வங்கிச் சேவையை பெறமுடியும். (படம் :ஜெ.கலையகன்)**

# காசநோய் விழிப்புணர்வு

(குருநகர்)

குருநகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் யாழ்.மாநகர சபையின் பிரிவிற்குட்பட்ட பகுதியில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளும், காசநோய் தொடர்பான வீடியோ படக் காட்சிகளும் காட்சிப்படுத்தப்பட்டன என குருநகர் பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜோ.பேடினஸ் தெரிவித்தார்.

குருநகர் சனசமூக நிலையம், ஆவே மரியா முன்பள்ளி, கியுமெடிக்கா முன்பள்ளி, புனித யாகப்பர் ஆலயம், யூபிலி மகப்பேற்று நிலையம், குருநகரில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பொஸ்கோ பாடசாலை ஆகிய இடங்களில் இந்த நடவடிக்கை இடம்பெற்றது என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி, மாநகர சபை உறுபபினர்கள், சுகாதாரப் பாதுகாவலர் ஆகியோர் பங்கெடுத்துக் கொண்டனர்.

# டெங்கு ஒழிப்புச் செயற்பாடு குருநகர் பகுதியில் தீவிரம்

(குருநகர்)

குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பகுதிக்குட்பட்ட மத்திய கிழக்கு வீதி, சென்.பற்றிக்ஸ் வீதி, புதிய கடற்கரை வீதி, குருநகர் சனசமூக நிலையத்தை அண்டியுள்ள பகுதிகளில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் இணைந்து பொலிஸார், மாநகர சபை உறுப்பினர்கள், சுகாதாரப் பாதுகாவலர் ஆகியோரும் பங்கெடுத்துக் கொண்டனர்.

வீடுகளில் டெங்கு பரவக்கூடியதாக சூழலை வைத்திருந்தவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

## துரித கதியில் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

பாசையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கத்துக்கான புதியகட்டடம் துரிதமாக அமைக்கப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் நிரந்தரக் கட்டடம் இல்லாது பங்குப் பணிமனையின் தனியறையில் சங்கச் செயற்பாடுகள் நடைபெற்று வந்தது.

தற்போது சங்கத்துக்கு என தனிக் கட்டடம் துரித கதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

அழகையா முத்தமிழ் அரங்கு அமைந்திருந்த இடத்தை அண்டியதாக கடற்கரையோரமாக மிக அழகான வடிவமைப்பில் இக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (21)

# வவுனியா வடக்கு வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(வவுனியா)

(தொடர்ச்சி...)

வவுனியா வடக்குக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக் கிடையிலான தமிழ்த் தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**பிரிவு -II நடனம்**

ச.டனோஜா - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி, சி.ஜென்சி - கிடாசசூரி அ.த.க.பாடசாலை, ம.தர்சிகா குமாரி - கோயில்புளியங்குளம் முத்தமிழ் வித்தி.

**பிரிவு -III நடனம்**

ஜெ.சங்கீதா - கோயில்புளியங்குளம் முத்தமிழ் வித்தி, ஸ்ரீ.றஜீமதி - தரணிக்குளம் கணேஸ் வித்தி, பி.தரணிகா - கல்மடு ம.வி.

**பிரிவு -IV நடனம்**

த.துஷானி - புதுக்குளம் ம.வி.

**பிரிவு -V நடனம்**

செ.லக்ஷாயினி - கல்மடு ம.வி.

**பிரிவு -I நடனம் குழு**

சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி, புளியங்குளம் இந்துக் கல்லூரி, கல்மடு ம.வி.

**நாட்டார் பாடல்**

கிடாச்சூரி அ.த.க.பாடசாலை, நொச்சிக்குளம் க.உ.வித்தி.

**இலக்கியம் நயத்தல்**

புளியங்குளம் இந்துக் கல்லூரி, கல்மடு ம.வி, தரணிக்குளம் கணேஸ் வித்தி.

**வில்லுப்பாட்டு**

புதுக்குளம் ம.வி, தரணிக்குளம் கணேஸ் வித்தி.

**விவாதம்**

சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி, நெடுங்கேணி ம.வி, கல்மடு ம.வி.

**வினா விடை**

புதுக்குளம் ம.வி, கல்மடு ம.வி, கனகராயன்குளம் ம.வி.

**சிந்துநடைக் கூத்து**

புதுக்குளம் ம.வி, கிடாச்சூரி அ.த.க.பாடசாலை.

**இசைநாடகம்**

தரணிக்குளம் கணேஸ் வித்தி.

**விசேட கூத்து**

கல்மடு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் பெற்றுக் கொண்டன. (12) (முற்றும்)

# சுன்னாகம் நகர்ப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி

(சுன்னாகம்)

சுன்னாகம் நகரின் மத்தியில் பெரும் போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்றது. அதிகளவு வாகனங்கள் வீதியின் இரு பக்கங்களிலும் தினமும் நிறுத்தப்படுவதனாலும் போக்குவரத்து மற்றும் வீதிச் சமிக்கை விதிமுறைகளை மீறி சாரதிகள் செயற்படுவதாலுமே இந்நெரிசல் நிலை உருவாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கே.கே.எஸ்.வீதியில் சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் இருந்து மருதனார் மடம் சந்தி வரை பகல் வேளைகளில் இத்தகைய நிலைமை கூடுதலாகக் காணப்படுகின்றது.

உரியவர்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் விபத்துக்கள் ஏற்படாவிடத்து தவிர்ப்பதற்கும் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (148)

## பாவனையற்ற சனசமூக நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஈச்சமோட்டை சனசமூக நிலையம் தற்போது எதுவித பாவனையுமற்றுக் காணப்படுகின்றது.

இரவு நேரங்களில் ஆடு, மாடுகள் தங்கி நிற்பதற்கு வசதியாக அதன் கதவுகள் திறந்து காணப்படுகின்றன. முன்னைய காலங்களில் சிறப்பாக இயங்கி வந்த இச் சனசமூக நிலையம் தற்போது பத்திரிகைகள் எதுவுமின்றி ஆடு, மாடுகளின் எச்சங்கள் நிறைந்து காணப்படுகின்றன. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைச் சீர்செய்யும்படி ஆர்வலர்கள் கேட்டுநிற்கின்றனர். (21)

# ஏழாலை மகா வித்தியாலயத்திற்கு சுற்றுவேலி அமைக்கக் கோரிக்கை

(சுன்னாகம்)

பல அறிஞர்களையும், புத்திஜீவிகளையும் உருவாக்கிய வரலாற்றுப் புகழ்மிக்க ஏழாலை மகா வித்தியாலயத்தின் தற்போதைய நிலைகண்டு பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனா.

தற்போது பாடசாலையின் நிலையானது சுற்றுவேலி அற்ற ஒரு திறந்த வெளியாகவே காணப்படுகின்றது. பாடசாலைக்கு மாணவர்கள் எந்த வழியாலும் உள்நுழையவோ அல்லது வெளியேறவோ முடியும் என்ற சூழலிலேயே பாடசாலையின் சுற்றுவேலி நிலைமை காணப்படுகின்றது. நீண்ட காலமாக தீர்க்கப்படாது காணப்படும் இந்த நிலைமைக்கு தீர்வுகாண முன்வரவேண்டுமென நலன் விரும்பிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (148)

# க.பொ.த.(உ/த) வகுப்புக்களில் மாணவர்களை இணைப்பதில் நெருக்கடி

யாழ்.நகரிலுள்ள பிரபல பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகப் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வெளியான க.பொ.த.(சா/த) பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் உயர்தர வகுப்புக்களில் அனுமதி பெறுவதற்கு மாணவர்கள், பெற்றோர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வலிகாமம் வலயத்தில் குறிப்பாக சிறிய பாடசாலைகளில் கிராமப் புறங்களில் கல்விகற்ற மாணவர்கள் உயர்தரம் கற்பதற்காக நகரப் பாடசாலைகளில் அனுமதி பெறும் போது பல நிபந்தனைகளை எதிர்கொள்வதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலான பாடசாலைகளில் எதிர்வரும் இரண்டாம் தவணைக்காக பாடசாலை திறக்கப்படும் போது உயர்தரத்திற்கான வகுப்புக்கள் ஆரம்பமாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (148)

# மரக்கறி விலைகளில் வீழ்ச்சி; விவசாயிகள் பெரும் கவலை

குடாநாட்டில் அண்மைக் காலமாக மரக்கறி விலைகளில் ஏற்பட்டுள்ள வழ்ச்சி நிலை காரணமாக விவசாயிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். தொடர்ச்சியான எரிபொருள் விலையேற்றம், மின்சாரக் கட்டண உயர்வு என்பவற்றுக்கு மத்தியிலும் உற்பத்தி செய்து சந்தைக்கு வரும் மரக்கறிகளின் விலை குடாநாட்டுச் சந்தைகளில் பெரும் வீழ்ச்சிப் போக்கைக் காட்டுகின்றது. கோவா கிலோ 5 ரூபா, கத்தரிக்காய் கிலோ 15 ரூபா, மிளகாய் கிலோ 15 ரூபா, வாழைக்காய் கிலோ 10 ரூபா, பயிற்றங்காய் கிலோ 15 ரூபாவுக்கும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன. இதனால் விவசாயிகள் தமது உற்பத்திச் செலவினைக் கூட பெறமுடியாத சூழ்நிலை உருவாகியிருப்பதாக கவலை வெளியிட்டுள்ளனர். (148)

# இறால் பிடியில் ஈடுபடும் மீனவர்கள் சுதந்திரமாக தொழில்புரிய ஏற்பாடு

(இயக்கச்சி)

கடந்த காலங்களில் இறால் பிடியில் ஈடுபட்ட அனைத்து மீனவர்களும் சுதந்திரமாக தொழிலில் ஈடுபடமுடியும். இதற்கு இடையூறு விளைவித்து மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு பாதிப்பை ஏற் படுத்த முனைபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இறால் பிடியில் மீனவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக இயக்கச்சியில் நேற்று முன்தினம நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினதும் வடமாகாண ஆளுநர் றி.ஏ சந்திரசிறி அவர்களினதும் முயற்சியினால் ஆனையிறவு கடல் நீரேரியை அண்டிய பகுதி களில் சுமார் 39 இலட்சம் வரையான இறால் குஞ்சுகள் விடப்பட்டன. என்றார்.

இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், கிளிநொச்சி மாவட்ட உதவிப்பொலிஸ்மா அதிபர் நீல்தழுவத்த, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன், மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன், கிளிநொச்சி மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் கேதீஸ்வரன் எஸ்.பி அட்வட் மகேந்திர, மருதங்கேணி பொலிஸ் அதிகாரி திலகரட்ண, கொடிகாமம் பொலிஸ் அதிகாரி பண்டார மற்றும் நீரியல் வளத்துறை உதவி பணிப்பாளர் கணேசமூர்த்தி, ஈ.பி.டி.பி. யின் வடமராட்சி அமைப் பாளர் சிறீரங்கேஸ்வரன்; கடல்வள மேற்பார்வை யாளர் சலீபன் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மற்றும் சங்க உறுப்பினர்கள் கரைச்சி வடக்கு கடற்தொழிலாளர கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொதுமுகாமை யாளர் கணேசபிள்ளை மற்றும் புலோப்பளை, கிளாலி, அறத்திநகர், சங்கத்தார்வயல், சுண் டிக்குளம், கேவில் ஆகிய மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளும் ஏனைய மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.



# பண்ணை - ஊர்காவற்றுறை வீதி மழை நீர் தேங்கும் நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணையிலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் புனரமைக் கப்பட்ட வீதியில் மழை நீர் தேங்கி வீதியை சேதப் படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மை நாட்களாக யாழ்.நகரைச் சுற்றி திடீர் திடீரென கன மழை பெய்து வருகின்றது. இந்த மழை காரணமாக அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ்.பண்ணையிலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் வீதியில் ஒரு கிலோ மீற்றர் நீளமான பகுதிகளில் இடையிடையே மழை நீர் தேங்கி நின்று வீதியினை அரித்து சேதப்படுத்துகின்றது. இதனால் பயணம் செய்யும் வாகனங்களினால் அவ் வீதியின் பகுதிகளில் குழிகளும் ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகளின் பின்னர் காப்பெற் இடும் பணிகள் மேற்கொள்ளப்படாமையே இதற்கு காரணம் எனவும் சுட்டிக்காட்டப் படுகின்றது.

எனவே பெருமளவு நிதி செலவு செய்து புனரமைப்புச் செய்யப்படும் இவ் வீதியின் தரத்தை மேலும் பேணவேண்டியதன் அவசியம் ஏற்பட்டிருப்பதாக மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(பா)

# புகையிரதத்தில் மன்னாருக்கு பயணம் செய்யும் வாய்ப்பு விரைவில்

(கொழும்பு)

மன்னார் தீவகத்தின் அழகினைக் கண்டுகளிக்க, வெகு விரைவில் புகையிரதமூடாக, மன்னார் செல்வதற்கான வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கவுள்ளதாக புகையிரதத்திணைக்களம் தெரிவித்துள்ளது. மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையான புகையிரத வீதி யுத்தகாலத்தில் முற்றுமுழுதாக சேதமாக்கியதை யடுத்து அப்பிரதேசத்திற்கான புகையிரதப் போக்குவரத்து தடைப்பட்டது. இதனால் மன்னார் உட்பட மடு தேவஸ்தானத்திற்கு வழிபாடுகளுக்குச் செல்லும் மக்கள், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனையடுத்து 106 கிலோ மற்றர் நீளமான இந்த புகையிரத வீதியைப் புனரமைப்பதற்கான வேலைத் திட்டமொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இதற்கு 266 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்படவுள்ளதாகவும் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இதற்கான புனரமைப்புப் பணிகள் இரண்டு கட்டங்களாக இடம்பெறும் முதல் கட்டமாக மதவாச்சி, புகையிரத நிலையத்திலிருந்து மடுப் பிரதேசம் வரையான வீதி புனரமைக் கப்படவுள்ளது. இரண்டாம் கட்டமாக மடுப் பிரதேசத்திலிருந்து தலைமன்னார் வரையான புகையிரத வீதி புனரமைக்கப்படவுள்ளதாகவும் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ஒடுங்கி வருகின்றது ஏழாலை சிவகுரு வீதி

(சுன்னாகம்)

ஏழாலை மத்தியில் பிரதான போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றான சிவகுரு வீதி அகலம் குறைந்து ஒடுங்கி வருகின்றது.

இந்த வீதி ஏழாலை வடக்கு, குப்பிளான் போன்ற பகுதிகளிலிருந்து வரும் விவசாயிகள், பொது மக்கள், மாணவர்கள் சுன்னாகத்தை சென்றடைவதற்கான குறுக்கு வழியாக காணப்படுகின்றது.

பல வருடங் களுக்கு முன்னர் பாரிய கனரக வாகனங்கள் இவ் வீதியூடாக ஏழாலை மத்தியில் அமைந்திருந்த வயல் பிரதேசத்திற்கு சென்று வந்தன. ஆனால் தற்போது உழவு இயந்திரம் கூட செல்ல முடியாத அளவிற்கு இவ் வீதி அகலம் குறைந்து காணப்படுகின்றது.

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட இவ் வீதி இந்நிலைமைக்கு வருவதற்கு காரணமானவர்களை கண்டறியவேண்டியவர்கள் மௌனமாக இருப்பது குறித்து பயணிகளும் அவ்வூரவர்களும் கவலை தெரிவிக்கின்றனர். உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (148)

# முரசின் இன்றைய பலன்

(17.04.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 05 ஆம் திகதி. ஏகாதசி காலை 8.41 வரை. நட்சத்திரம் சதயம் பிற்பகல் 4.43 வரை. மரண யோகம். ஏகாதசி விரதம்.
இராகுகாலம் 3.03 - 4.33 வரை. சூலம் 10.33 - 12.03 வரை.
எமகண்டம் 9.03 - 10.33 வரை. குளிகைகாலம் 12.03 - 1.33 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சுக வாழ்வு, உதவிகள் தாமதமாகும், புத்திரரால் சிறப்பு, கணவன் மனைவி யிடையே ஒற்றுமை. |
| ரிஷபம் | அதிகார மோகம், கடன்கள் நிவர்த்தியாகும், நெருங்கமானவர்களை அனுசரிக்கவும், பெரியோர்நட்பு. |
| மிதுனம் | ஞாபக மறதி, எதிர்பாராத இடமாற்றம், உயரதிகாரிகள் ஆதரவு, பேச்சில் நிதானம். |
| கடகம் | பயணம் தவிர்க்கவும், உறவினரை அனுசரிக்கவும், முற்கோபம் தவிர்க்கவும், சுப காரியங்கள். |
| சிம்மம் | கவலைகள் தீரும், கொடுக்கல் வாங்கலில் இழுபறி, பயண அனுகூலங்கள், முயற்சியில் வெற்றி. |
| கன்னி | குடும்ப சுகம், நிதானமாக செயற்படவும், மேலதிகாரிகள் ஒத்துழைப்பு, மறைமுக எதிர்ப்பு. |
| துலாம் | நண்பரால் செலவு, பேச்சில் நிதானம் வேண்டும், குடும்பத்தில் மருத்துவச் செலவு, மனக்குழப்பம். |
| விருச்சிகம் | புத்திர மேன்மை, பேச்சில் அவதானம் நன்று, அனாவசிய பயணங்கள், வரவுக்கு மீறிய செலவுகள். |
| தனுசு | சுப நன்மைகள், சரளமான பற்று வரவுகள், புதிய முயற்சி அனுகூலமாகும், அரச உதவிகள். |
| மகரம் | செலவு அதிகரிப்பு, குடும்பத்தில் கருத்து வேறுபாடு, சொத்துப்பிரச்சினைகள் தீரும். |
| கும்பம் | பொன்பொருள் சேர்க்கை, தொழில் துறைகளில் ஸ்திரம், கிடைக்க வேண்டியவை கிடைக்கும். |
| மீனம் | வாழ்க்கையில் உயர்வுகள், குழந்தைகளால் செலவு, மேலதிகாரிகள் ஆதரவு, சுப காரியங்கள். |

# கலைப் பொருட்களைக் காக்கும் விழிப்புணர்வு அவசியம்

## -கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்

(யாழ்.நிருபர்)

கலைப்பொருட்களைக்காப்பது பற்றிய விழிப்புணர்வு நம்மத்தியில் ஏற்பட வேண்டும். கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்டுக் கோவில்களை அமைக்கும் நாம் அதனைப்பாதுகாப்பதற்கான வழிமுறைகள் பற்றிச் சிந்திக்கின்றோமா? என கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் கோப்பாய் வீரபத்திரர் கோவில் முன்றலில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்.

கோவில்களில் இரவுப்பாதுகாப்பு சேவையின் தேவை உணரப்பட்டிருக்கிறது. எனவே பாதுகாப்புச் சேவை வழங்கும் நிறுவனங்களின் உதவியுடன் எமது கலைப் பொக்கிஷங்களைக் காப்பதற்கு நாம் திட்டங்களை வகுக்க வேண்டும்.

ஆலயங்களைப் புனர்நிர்மாணம் செய்வதில் காட்டும் ஆர்வத்தை அவற்றை பாதுகாப்பதிலும் காட்ட வேண்டும். எந்த ஒரு கோவிலிலும் தனிப்பட்ட ஒருவருடைய உழைப்பில் அமைக்கப்படுவதில்லை. ஒரு கிராமத்தினுடைய அல்லது சமூகத்தினுடைய கூட்டு உழைப்பினாலேயே எமது பிரதேச ஆலயங்கள் எழுச்சி பெற்றுத் திகழ்கின்றன. எனவே பாதுகாப்பிலும் இக் கூட்டு றொறுப்பு ஏற்பட வேண்டும்.

தற்போது ஆலயங்களில் கலைப்பொருட்கள் மற்றும் தெய்வ விக்கிரகங்களைத் திருடுவதென்பது இந்து சமய நம்பிக்கைகளை கேலிக்குரியதாக்கும் முயற்சியாகவும் கருதவேண்டியுள்ளது. இவற்றைத் தடுப்பதற்கு வலி.கிழக்கு சைவ சமய அருள் நெறிமன்றம் போன்ற அமைப்புக்கள் முன்வரவேண்டும். நல்லை ஆதீனம் இவர்கள் எல்லோரையும் ஒன்றிணைக்கும் சக்தியாக விளங்க முடியும் என்றார்.

நிகழ்வில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய வழிபாட்டுக் கோலங்கள் என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. சைவத் திருப்பணியில் முதன்மை பெற்றுத் திகழும் கலாநிதி வைத்தீஸ்வரக்குருக்கள், தொழிலதிபர் இ.ச.பே. நாகரத்தினம் எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சைவப்புலவர் இ.ஸ்ரீதரன், சிற்பக்கலைஞர் க.இராசலிங்கம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கான கௌரவங்களை வட மாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் ஐயர், பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் மா.வேதநாதன், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் மேற்கொண்டனர். சிறப்பு நிகழ்வாக உ.இராதாகிருஷ்ணன் குழுவினரின் வயலின் சோலோ இடம்பெற்றது. (10)

# கொதிக்கும் பலகார எண்ணெயில் கையை விட்ட குழந்தை

(கொழும்பு)


பாதுகாப்பற்ற அடுப்புப் பாவனை புத்தாண்டு காலப்பகுதியில் சிறுவர்கள் அனர்த்தங்களுக்கு இலக்காவதற்கு காரணமாக அமைந்துள்ளதென சுகாதார தரப்பு குறிப்பிடுகின்றது.

இவ்வாறு அனர்த்தங்களுக்கு இலக்கான சிறுவர்கள் சிலர் கடந்த சில தினங்களில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரத்னசிறி ஹேவாகே தெரிவித்தார்.

பலகாரம் தயாரிக்கும் கொதித்த எண்ணெய்ப் பாத்திரத்தில் கையை விட்ட குழந்தையொன்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எனினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை இத்தகைய அனர்த்தங்கள் குறைவடைந்துள்ளதாக சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எதிர்காலத் தலைமுறையினை ஆன்மீகத்திலும் வளர்ப்பது அவசியம்



(கொழும்பு)

நாட்டின் பௌதிக அபிவிருத்தியைப் போன்று எதிர்காலத் தலைமுறையை ஆன்மீக ரீதியிலும் அபிவிருத்தி செய்வது அவசியம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாகுலுகமுவ வெவ்தன்த நவகெலகம புராணரஜ மகாவிகாரையில் தர்ம போதனை மண்டபத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முதியவர்களை மதிக்கும், எம்மைப் பற்றிய தெளிவு கொண்ட, நற்பண்புகள் மிக்க எதிர்காலத் தலைமுறையை நாட்டில் உருவாக்கவில்லையானால் நாம் பெறும் அபிவிருத்தியால் பலன் இல்லை.

மதத் தலைவர்களைப் போன்று அரசியல் பிரதிநிதிகளுக்கும் இதற்கான பெரும் பொறுப்பு இருக்கின்றது.

இந்நாட்டை சுதந்திரம் அடையச் செய்யும் போராட்டமே கடந்த காலத்தில் இருந்தது. நாம் பயங்கரவாதத்தை ஒழித்து அந்தச் சுதந்திரத்தைப் பெற்றோம். புலிகள் அமைப்பின் இளைஞர், யுவதிகளை புனர்வாழ்வில் ஈடுபடுத்தி அவர்களைச் சமூகத்துக்கு பலன்மிக்க பிரஜைகளாக நாம் உருவாக்கினோம்.

இருந்தும் கூட இன்று உலகில் இருந்து எமது தாய்நாட்டைப் பற்றிய பல்வேறு அபி[illegible]ராயங்களைக் கொண்டு [illegible] அதன் மூலம் நாட்டைச் சீர்குலைக்க புலி ஆதரவாளர்கள் முயற்சி மேற்கொள்கின்றனர்.

இந்த விடயமாக நாம்அனைவரும் தெளிவாக செயற்பட வேண்டும். இந்த நாட்டைப் பிரித்து, வேறாக்க இடமளிக்க முடியாது. இது ஒரே நாடு. இன்று சகல மக்களும் சமாதானத்துடனும், ஐக்கியத்துடனும் ஒரே நாட்டில் வாழ்கின்றனர். இனங்களுக்கு இடையில் நம்பிக்கை, ஐக்கியம் உருவாக்கப்பட்டு உள்ளது. மாகாண சபை, பிரதேச சபை உட்பட சகல நிறுவனங்களையும் ஒன்றுபடுத்தி நாட்டின் அபிவிருத்தியும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது என்றார்.

# மின்னல் தாக்கி 11 பேர் பலி

(கொழும்பு)

இடி மின்னல் தாக்கம் காரணமாக இந்த வருடத்தில் இதுவரை குறைந்த பட்சம் 11 பேர் பலியாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிதுள்ளது.

மின்னலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களை, வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாட்டில் உள்ளக பருவப்பெயர்ச்சி காணப்படும் நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு மனைவியால் இலங்கையருக்கு ஏற்பட்ட அவலம்

(கொழும்பு)

சவுதி அரேபியா - ரியாத்தில் வசித்து வரும் இலங்கை ஆண், தனது மொரக்கோன் நாட்டு மனைவியின் தாக்குதலுக்கு இலக்காகி ஞாபக மறதி ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளதாக ரியாத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. ரியாத்தில் சுமார் 10 வருடங்களுக்கு மேல் வாழ்ந்து வரும் 54 வயதுடைய பியல் ரத்னபால என்ற இலங்கையர் 29 வயதுடைய சயிம் என்ற மொரக்கோன் நாட்டு பெண்ணை திருமணம் முடித்து கடந்த 5 வருடங்களாக ரியாத்தில் வாழ்ந்து வந்துள்ளார்.

குடும்பத்தில் ஏற்படும் தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக ரத்னபால தனது மொரக்கோன் நாட்டு மனைவியிடம் சமயலறைக கத்தியால் பல தடவைகள் குத்து வாங்கி காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இந்த நிலையில் மனைவி மேற்கொண்ட கடும் தாக்குதலில் பாதிக்கப்பட்ட ரத்னபால வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று ஞாபக மறதி ஏற்பட்ட நிலையில் தற்போது ரியாத் இலங்கை தூதரக பாதுகாப்பில் உள்ளார்.

சில விடயங்களை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துள்ள ரத்னபால, கேள்விகள் கேட்டால் அதற்கு பதில் கூற பல விடயங்களை மறந்துவிடுகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணை . கைது செய்து ரியாத் பொலிஸார் விசாரித்த போது தாக்குதல் நடத்தப்பட்டமையை உறுதி செய்த அப்பெண், தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தனக்கு என்ன நடந்தது என்றே தெரியாதெனக் கூறியுள்ளார்.

இந்த நிலையில் தனது மனைவி தண்டனைக்கு உட்படுத்தப்படக்கூடாது எனவும் அவர் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் ரத்னபால குறிப்பிடுவதாக ரியாத் இலங்கை தூதரக அதிகாரி அநுர முத்துமால தெரிவித்துள்ளார். ஆனால் அவர் கூறுவதன் படி சட்டம் செயற்படாதென முத்துமால தெரிவித்துள்ளார்.விவாகரத்து செய்ய வேண்டுமானால் தனக்கு 100,000 சவுதி ரியால் நட்டஈடாக வழங்க வேணடும் என மொரக்கோன் மனைவியுடன் ரத்னபால ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளதாக சவுதி தகவல்கள் தெரிவிக்கின்றன.

# காலியில் குழு மோதல்; வீடுகள் பல தீக்கிரையாகின

(கொழும்பு)

காலியில் உள்ள திலிதுற தோட்டத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள் சில தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதுடன் அங்கிருந்து பல பெறுமதி வாய்ந்த பொருட்களும் திருடப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் சிலர் காயமடைந்துள்ளனர். நிலைமை நேற்று முன்தினம் வழமைக்குத் திரும்பியது.

காலை 10.00 மணியளவில் திலிதுற தோட்டத்துக்கு சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னை 'சேர்' என அழைக்க மறுத்த இளைஞனை அவருடைய வீட்டுக்குள் புகுந்து கடுமையாகத் தாக்கியுள்ளார். இதனையடுத்து அருகில் இருந்த தமிழ் இளைஞன் ஒருவர் அவ்விடத்திற்கு வந்து ஏன் அடிக்கிறீர்கள் எனக் கேட்டுள்ளார். இதன் போது குறித்த இடத்திற்கு திடீரென வந்த 25 - 30 இளைஞர்கள் இவ்விருவர் மீது தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்த 7 வீடுகளை தீயிட்டு எரித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாது முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் போன்றவற்றிற்கும் தீ வைத்து எரித்துள்ளனர். மேலும் வீட்டில் இருந்து தங்க நகை, பணம் மற்றும் வாகன உரிமம், தொலைகாட்சி என்பவற்றை களவாடிச் சென்றுள்ளனர். இந்தத்தாக்குதல் சம்பவத்தில் சுமார் 90 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். தாக்குதல் சம்பவம் குறித்து எல்பிட்டி பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் அங்கு விரைந்துள்ளனர்.

பொலிஸார் அவ்விடத்திற்கு சென்றுநிலைமையை சமாதானம் செய்ய அதிக முயற்சி செய்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு இளைஞர்களை பொலிஸார் கைது, செய்ததோடு மேலும் சில இளைஞர்களை பெயர் குறிப்பிட்டு தேடியுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது காயமடைந்த இராணுவச்சிப்பாய் வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகை வலம் வரும் முயற்சி

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் சர்வதேசத்தின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் . இரா. சம்பந்தன் தலைமையிலான குழு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பயணங்களை மேற் கொள்ளவுள்ளது.

அரசியல் தீர்வு தொடர்பில் சர்வதேசத்தின் ஆதரவைத் தேடும் பயணங்களாக இந்தப் பயணங்கள் அமையும் எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.கூட்டமைப்புக் குழுவினர் தலைவர் சம்பந்தன் தலைமையில் மே மாத இறுதியில் இந்தியாவுக்கு பயணமா கின்றனர். அங்கு அவர்கள் இந்திய அரசியல் தலைமைகளைச் சந்தித்து இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுகளில் ஈடுபடவுள்ளனர். தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்துவது தொடர்பில் இந்தப் பேச்சுகளில் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# உறவுகளை மீட்க உதவுங்கள்

(கொழும்பு)

சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் உறவினர்கள் தமது உறவுகளின் விடுதலைக்கு உதவும்படி கோரும் மகஜர் ஒன்றை இலங்கை வந்திருக்கும் இந்திய நாடாளுமன்றக் குழுவினரிடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.


அந்த மகஜரின் விபரம் வ்ருமாறு, சிறைகளில் வாடும் எமது பிள்ளைகள் மற்றும் உறவுகளின் விடுதலைக்காக அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். கடந்த காலம் எமது நாட்டில் நடைபெற்ற யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து சமாதானத்தை நிலைநாட்டியுள்ளதாக அரசாங்கம் கூறிவருகிறது.

அத்தோடு யுத்தத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட பலரை புனர் வாழ்வு அளித்து சமூக மயப் படுத்தி வருகின்றனர். இவை வரவேற்கத்தக்கது. ஆனால் பயங்கரவாதம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கானவர்கள் இலங்கையில் பல்வேறு சிறைகளில் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து வரும் தொடக்கம் பதினெட்டு வருடங்கள் வரை எவ்வித முடிவுகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இளைஞர்கள், பெண்கள், வயோதிபர்கள் மற்றும் சிறாரகள் என பெரும் துயரங்களையும் வேதனைகளையும் அனுபவித்து வருகின்றார்கள். எனவே பாரத தேசத்திலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருக்கும் நீங்கள் எங்கள் பிள்ளைகளின் விடுதலைக்காக அரசாங்கத்தை வலியுறுத்துவீர்கள் என்று நம்புகிறோம்.

தொப்புள் கொடி உறவாகிய நீங்கள் பல முறை எங்களுக்காக குரல் கொடுத்து வருகிறீர்கள். அதை நாம் மறந்துவிடவில்லை.அதுபோல் இன்று என்ன நடக்கும் நாளை என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு அச்சுறுத்தல் உள்ள சூழ் நிலையில் நாம் வாழ்ந்து வருகிறோம். யுத்தத்தில் நாம்பட்ட துயரங்களோடும் எங்கள் பிள்ளைகள் இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருப்பது எங்களுக்கு மிகுந்த வேத னையைத் தருகிறது. எனவே! இப்படி இருக்கும் போது எப்படி இனஒற்றுமை ஏற்படும்?

புதிய நந்தன வருடம் எமக்கு சிறப்பாக அமைவதற்கு எங்கள் பிள்ளைகளின் விடுதலை. நீங்கள் வந்திருப்பதனூடாக சாத்தியமாகட்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பலஸ்தீன ஜனாதிபதி முஹமட் அபாஸ் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து பேச்சு நடத்தினார். இதன்போது, பலஸ்தீன ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு புத்தகத்தைத் தடை செய்தல்

**2006ஆம்** ஆண்டு தொடங்கி ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரான ஜெய்ப்பூரில், வருடம்தோறும் சர்வதேச இலக்கிய விழா நடைபெற்று வருகிறது. ஆசியாவில் நடைபெறும் மிகப்பெரிய இலக்கிய விழா இதுவே. இந்த ஆண்டு, சல்மான் ருஷ்டி தொடர்பான சர்ச்சைகளால் கூடுதல் கவனத்தைப் பெற்றது.

இலக்கிய விழாவில் கலந்து கொள்ள ருஷ்டி வந்தால் ஃபத்வா நிறைவேற்றப்படும் என்று சிலர் மிரட்டல் விடுத்ததைச் சுட்டிக்காட்டி காவல்துறை எச்சரித்தது. பயந்து போன ருஷ்டி, தன்னுடைய இந்தியப் பயணத்தை ரத்துச் செய்தார். குறைந்த பட்சம் வீடியோவிலாவது அவரைத் தோன்றவைக்கலாம் என்று விழா ஏற்பாட்டாளர்கள் முயற்சி செய்தனர். அதுவும் பலிக்கவில்லை.



இதைத் தொடர்ந்து பிரபல எழுத்தாளர்களான ருச்சிர் ஜோஷி, ஹரி குஞ்சரு, ஜீட்-தயீல் மற்றும் அமிதவ்குமார் ஆகியோர் தடை செய்யப்பட்ட சாத்தானின் வேதங்கள் நூலில் இருந்து சில பகுதிகளை வாசித்துக் காட்டினர். இதனால் இவர்கள் கைது செய்யப்படலாம் என்று பேச்சு அடிபட, நால்வரும் ஜெய்ப்பூரை விட்டுவெளியேறினார்கள்.

இந்த சர்ச்சை நீங்குவதற்குள், கொல்கத்தாவில் நடைபெற்ற 36ஆவது புத்தகக் கண்காட்சியில் தஸ்லிமாநஸ்ரினின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியிடப்படக் கூடாது என்று மிரட்டல்கள் கிளம்பின. இறுதியில், அரங்குக்கு வெளியில் வைத்து புத்தகம் வெளியிடப்பட்டது. "மத வெறியர்கள் என் புத்தகத்தை அல்ல, என்னையே தடை செய்திருக்கிறார்கள்." என்று வெடித்தார் தஸ்லிமா நஸ்ரின்.

### புத்தகத்தைத் தடை செய்யலாமா?

எல்லா நாட்டுச் சட்டங்களும் கருத்துச் சுதந்திரத்துக்கும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிப்பது உண்மை. அதே சமயம், எதை வேண்டுமானாலும் ஒருவர் எழுதிவிடவும் முடியாது. ஒரு சாராரின் மத நம்பிக்கைக்கு குந்தகம் ஏற்படுத்துகிறது என்றோ, தேச விரோதமானது என்றோ, ஒருவருடைய மதத்தைஅவதூறு செய்கிறது என்றோ, ஆபாசமானது என்றோ கருதப்படும் ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டுவிட முடியாது. அவ்வாறு செய்வது குற்றமாகும்.

### எப்படித் தடை விதிப்பது?

"புத்தகத்தின் ஓரிரண்டு வரிகளை மட்டும் படித்துவிட்டு, தேசவிரோதமானது, மத நம்பிக்கைக்கு எதிரானது என்ற முடிவுக்கு வரக்கூடாது!" Shivaji: Hindu King in Islamic India என்ற புத்தகத்தின் மீதான தடையுத்தரவை நீக்கி இந்தியாவின் உச்ச நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பில் இடம்பெற்ற வாசகம் இது.

ஒரு புத்தகத்தின்மீது அரசாங்கத் தடை விதிக்கப்பட்டால், தடை செய்யப்பட்ட புத்தகத்தை வைத்திருப்பவரோ, நூலாசிரியரோ அல்லது வெளியீட்டாளரோ சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தை அணுகி, அரசாங்கத்தின் தடை உத்தரவு செல்லாது என்று மனு தாக்கல் செய்யலாம்.

உயர் நீதிமன்றத்தின் விசாரணையின் அடிப்படையில் தடை நீக்கப்படலாம். ஆனால், பணத்தைச் செலவழித்து, நீதிமன்றத்தை அணுகி, பல காலம் காத்திருக்கவேண்டியிருக்கும். இதற்குத் தயங்கி, தடை செய்யப்பட்ட நூல்களைச் சிலர் இணையத்தில் வெளியிட்டு விடுகிறார்கள். காரணம், இணையத்தில் வெளியாகும் புத்தகங்களைத் (e-books) தடை செய்வதற்கு இன்னும் போதுமான சட்டங்கள் இயற்றப்படவில்லை.

எந்த ஒரு அரசாங்கமும் ஒரு புத்தகத்தைப் பறிமுதல் செய்வதற்கான உத்தரவை வெளியிடுவதற்கு முன்னர், அந்தப் புத்தகம் எதற்காக எழுதப்பட்டது, அந்தப் புத்தகத்தை எழுதியவரின் நோக்கம் என்ன, புத்தகத்தின் மொழிநடை எப்படிப்பட்டது, புத்தகம் தெரிவிக்கும் கருத்து என்ன ஆகிய அனைத்தையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று சட்டம் சொல்கிறது.

### இந்தியாவில் தடை செய்யப்பட்ட புத்தகங்கள்:

கடந்த 100 ஆண்டுகளில் பத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் (அனைத்தும் ஆங்கில மொழியில் வெளிவந்தவை) இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளன. பட்டியல் வருமாறு:

1. ரங்கீலா ரசூல் (Rangeela Rasool) - தடை செய்யப்பட்ட வருடம் 1927. இராமாயண சீதையைத் தரக்குறைவாகச் சித்தரித்து வந்த பிரசுரத்துக்குப் பதிலடியாக, ஆரிய சமாஜைச் சேர்ந்த குமார் பிரசாத் பிரீத் எழுதியது.
2. அங்காரே (Angaray) - தடை செய்யப்பட்ட வருடம் 1932 - புத்தகத்தை எழுதியவர் ஷஜத்சாகிர்.
3. Nine Hours to Rama – தடை செய்யப்பட்ட வருடம் 1962. எழுதியவர் Stanley Wolpert. மகாத்மா காந்தி கொல்லப்படும் சமயத்தில், அவருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியவர்கள் எவ்வாறு கவனக் குறைவுடன் இருந்தனர் என்று தெரிவிக்கும் புத்தகம்.
4. Unarmed Victory – தடை செய்யப்பட்ட வருடம் 1963. எழுதியவர் பெர்ட்ரண்ட் ரஸல். சீனா இந்தியா யுத்தத்தைப் பற்றியது.
5. Understanding Islam through Hadis – தடை செய்யப்பட்ட வருடம் 1982. எழுதியவர் ராம்ஸ்வரூப்.
6. Smash & Grab – தடை செய்யப்பட்ட வருடம் 1984. சுதந்திரமாக இருந்த சிக்கிம் பகுதியை இந்தியா எப்படி தன்னுடன் சேர்த்துக் கொண்டது என்பதைப் பற்றிய புத்தகம். எழுதியவர் சுனந்தா தத்தா ராய்.
7. The Satanic Verses – தடை செய்யப்பட்ட வருடம் 1988 எழுதியவர் சல்மான் ருஷ்டி.
8. Soft Target – தடை செய்யப்பட்ட வருடம் 1989. இந்திய உளவுத் துறை எப்படி கனடா நாட்டில் நுழைந்தது என்பதை விவரிக்கும் புத்தகம். எழுதியவர்கள் Zuhair Kashmeri, Brian McAndrew.
9. லஜ்ஜா - தடை செய்யப்பட்டவருடம் 1993.எழுதியவர் தஸ்லிமாநஸ்ரின்.
10. The True Furqan – தடை செய்யப்பட்ட வருடம் 1999 - குர்ஆனுக்கு கிறித்துவ வடிவம் கொடுத்த புத்தகம் - எழுதியவர்கள் Al Saffee, Al Mahdee.
11. Islam – A concept of Political world Invasion – தடை செய்யப்பட்ட வருடம் 2007 - எழுதியவர் R.V.Bhasin.
12. Great Soul: Mahatma Gandhi and his struggle with India – குஜராத்தில் தடை செய்யப்பட்ட வருடம் 2011. எழுதியவர் Joseph Lelyveld. காந்தி ஓரினச் சேர்க்கையாளர், இன வெறியர் என்பதாகச் சொல்லும் சில பகுதிகள் இடம்பெற்றன என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில் தடை செய்யப்பட்டது.

## லஜ்ஜாவின் கதை




**தஸ்லிமா** நஸ்ரின் தன் வாழ்க்கை வரலாற்றைத் தொடர் பாகங்களில் எழுதிக் கொண்டிருக்கிறார். அந்த வரிசையில் அச்சுறுத்தலுக்கு உள்ளான Nirbasan (அகதி என்று பொருள்) ஏழாவது நூல்.

1993இல் வெளிவந்த லஜ்ஜா, அவர் வாழ்வை அடியோடு மாற்றியமைத்தது.

1992இல் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, அதன் தாக்கம் இந்தியாவில் மட்டுமின்றி அருகிலிருந்த வங்கதேசத்திலும் உணரப்பட்டது. லஜ்ஜா இந்தப் பின்னணியுடன் தொடங்குகிறது. இந்துக்களான தத்தாவும் அவர் குடும்பத்தினரும் திடீரென்று தங்களை அந்நியர்களாக அங்கே உணர ஆரம்பிக்கிறார்கள். இந்தியாவைப் போலன்றி இந்துக்கள் அங்கே சிறுபான்மையினர் என்பதால் அச்சமும் அவநம்பிக்கையும் வருத்தமும் அவர்களைக் கவ்விப் பிடிக்கிறது. கலவரத் தீ பரவிய போது, இஸ்லாமியர்களால் தாங்கள் பழிவாங்கப்படலாம் என்று தத்தா குடும்பத்தினர் சந்தேகப்படுகின்றனர். சந்தேகம் பயமாக உருமாறுகிறது.

அடைக்கலம் தேடி ஒளிந்துகொள்ளலாமா என்று யோசிக்கிறார்கள். ஏன் வங்கதேசம் திடீரென்று நம்மைக் கைவிட்டுவிட்டது என்று தவிக்கிறார்கள். அவர்களது தவிப்பையும் ஏக்கத்தையும் வன்முறை உண்டு செரித்து விடுகிறது.

லஜ்ஜா வங்கதேசத்தில் உடனடியாகத் தடை செய்யப்பட்டது. தொடர்ந்து இந்தியாவின் சில மாநிலங்களிலும் தடை செய்யப்பட்டது.

## சாத்தானின் வேதங்கள் : என்ன கதை?




**சமகால** இங்கிலாந்தில் வசிக்கும் ஜிப்ரீல் ஃபரிஸ்தா, சலாதின் சம்ச்சா இருவருமே நடிகர்கள். இந்திய முஸ்லிம்கள். ஃபரிஸ்தா, இந்து தெய்வங்களின் வேடத்தில் நடித்து சூப்பர் ஸ்டார் அந்தஸ்து பெற்றவர். சலாதின் சம்ச்சா இந்திய வேர்களை இழந்து, இங்கிலாந்தில் பின்னணிக் குரல் கலைஞராக இருப்பவர்.

நாவலின் தொடக்கத்தில் இவர்கள் இருவரும் பயணம் செய்யும் விமானம் கடத்தப்படுகிறது. நடுவானில் வெடித்துச் சிதறுகிறது. அதன் பிறகு கதை, மாய யதார்த்தத்தளத்துக்கு நகர்கிறது.

அந்த விபத்தில் அவர்கள் இருவரும் தப்பித்து விடுகிறார்கள். ஃபரிஸ்தா ஒரு தேவதையாகி விடுகிறார். சம்ச்சா சாத்தானாகி விடுகிறார். ஃபரிஸ்தாவின் மாற்றத்தை மனநோயின் ஓர் அங்கமாக யதார்த்தத்தளத்தில் எடுத்துக்கொள்ளலாம். சம்ச்சா சட்ட விரோதமாகக் குடியேறியவராக காவல் துறையால் கைது செய்யப்படுகிறார். ஃபரிஸ்தா தன்னுடைய இழந்த காதலியைக் கண்டடைய முயற்சி செய்கிறார். ஆனால், அவருடைய மனநோய் அந்த உறவைச் சிதைத்துவிடுகிறது. எதிர்பாராதவிதமாக மனித உருவை அடையும் சம்ச்சா, விமானத்தில் மேலே இருந்துசேர்ந்துவிழுந்து, தப்பிக்க முயன்றபோது ஃபரிஸ்தாகைவிட்டதற்காகப் பழிவாங்கத்துடித்துக் கொண்டிருக்கிறார். ஃபரிஸ்தாவின் பொறாமையைத்தூண்டிவிட்டு காதலியுடனான உறவை முறியச்செய்கிறார். ஒரு கட்டத்தில் ஃபரிஸ்தாவுக்கு சம்ச்சா செய்த கெடுதல் தெரியவருகிறது. ஆனால், மன்னிப்பதோடு அவனது உயிரையும் காப்பாற்றுகிறார்.

இருவரும் இந்தியா திரும்புகிறார்கள். மனநோய் பாதிப்பில் இருந்து மீளாத ஃபரிஸ்தா, தன் காதலியைக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்துகொள்கிறார். ஃபரிஸ்தாவால் காப்பாற்றப்பட்ட சம்ச்சா தன் தந்தையுடன் சமாதானமாகி, இந்திய அடையாளத்தை ஏற்றுக்கொண்டு இந்தியாவிலேயே இருக்க முடிவெடுக்கிறார்.

"கதைக்குள் கதை" பாணியில் எழுதப்பட்ட இந்த நாவலில் கனவுத் தொடர்கள் இடையிடையே இடம்பெறுகின்றன. இந்தக் கனவுத் தொடர்களில்தான் முஹம்மது நபி, இஸ்லாம் பற்றிய சர்ச்சைக்குரிய விஷயங்கள் இடம்பெறுகின்றன.

ஜிப்ரீல் ஃபரிஸ்தாவின் மன நோய் சார்ந்த பாதி கனவு பாதி மாயம் கலந்த தொடர்களாக நாவலில் அவை இடம் பெறுகின்றன. அதில் ஒன்றில்தான் முஸ்லிம்களை கொதித்தெழச் செய்த விஷயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அது முஹம்மது நபியின் வாழ்க்கையை மறுபார்வையில் முன்வைக்கிறது. அதன் மையத்தில் சாத்தானின் பாடல்கள் இருக்கின்றன. அதில் முஹம்மது நபி பழங்கால அராபியப் பெண் தெய்வங்களுக்கு ஆதரவாகத் தன் தரிசனங்களை முன்வைக்கிறார். ஆனால், பின்னர் அவற்றை சாத்தானின் தூண்டுதலால் சொல்லப்பட்டவையாக அவர் நிராகரித்து விடுகிறார்.

பாகிஸ்தானில் இந்தப் புத்தகத்துக்கு எதிராக எழுந்த கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து ஈரானியத் தலைவரான அயதுல்லா கொமேனி, சல்மான் ருஷ்டிக்கு ஃபத்வா (மரண தண்டனை) விதித்தார். இந்த ஃபத்வாவைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசு ருஷ்டிக்குப் பாதுகாப்பு கொடுத்தது. 1998இல் ஈரான் அரசு தன் கெடுபிடியை கொஞ்சம் தளர்த்த முன்வந்தது. ருஷ்டியும் தலைமறைவு வாழ்க்கையை முடித்துக் கொள்ளப் போவதாகச் சொன்னார்.

ஜப்பானிய மொழியில் இந்நாவலை மொழிபெயர்த்த ஹிடோஷி இகராஷி ஜூலை 1991இல் படுகொலை செய்யப்பட்டார். இத்தாலியில் மொழிபெயர்த்த எட்டோர் கேப்ரிலோ அதே மாதம் நடந்த தாக்குதலில் படுகாயமடைந்தார். நோர்வே வெளியீட்டாளர் அக்டோபர் 1993இல் நடத்தப்பட்ட தாக்குதலில் மயிரிழையில் உயிர் தப்பினார். துருக்கியில் மொழிபெயர்த்த அஜீஸ் நேஸினைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து நடந்த வன்முறைச் சம் பவங்களில் 37 பேர் உயிரிழந்தனர்.

# பிரதேச மட்ட கரப்பந்து மட்டுவில் ஐங்கரன் சம்பியன்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணி சம்பியனாகியது.

இப்போட்டித் தொடர் கடந்த சனிக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரில் பல அணிகள் பங்குகொண்டபோதும் அரையிறுதி ஆட்டங்களுக்கு மட்டுவில் வளர்மதி, மீசாலை சீமா, மட்டுவில் ஐங்கரன் போன்ற அணிகள் மோதின.

மட்டுவில் வளர்மதி மற்றும் மீசாலை சீமா அணிகள் மோதின அரையிறுதிப் போட்டியில் சீமா அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஐங்கரன் அணியும் சீமா அணியும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தி மட்டுவில் ஐங்கரன் அணி போட்டி நிறைவடையும் வரை அதேவேகத்தில் ஆடி ரசிகர்களை பரவசப்படுத்தியது. இறுதியில் 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியனாகியது.


அத்துடன் அடுத்து நடைபெறவுள்ள மாவட்ட மட்டப் போட்டிக்கு தென்மராட்சிப் பிரதேசம் சார்பாக மட்டுவில் ஐங்கரன் அணி பங்குபற்ற தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (118)



வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் வலயச் சம்பியனான மருதானார்மடம் இராமநாதன் கல்லூரி அணித் தலைவி விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டபோது....

## விளையாட்டுச் செய்திகள்

# யாழ். சென்றல் 72 ஓட்டங்களால் வெற்றி



சிறப்பாக பந்து வீசி நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்திய விமல்காந்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் லீக் ஆட்டமொன்றில் யாழ். சென்றல் அணி 72 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை வருடா வருடம் நடாத்தி வரும் அழைக்கப்பட்ட நான்கு அணிகளுக்கிடையிலான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் ஆறாவது தகுதி காண் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் யாழ். சென்றல் அணியும், கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். சென்றல் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய யாழ். சென்றல் றஜீவ்குமாரின் அதிரடியான துடுப்பாட்டத்தின் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். சென்றல் அணி 47 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வி. றஜீவ்குமார் 55, சுதர்ஸன் 39, சலிஸ்ரன் 31, றொகான் 26, கபில்தேவ், அன்றூ தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றம்மிய ராகுலன் மூன்று, யனுதாஸ், கிருபவன், சாம்பவன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 243 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணி விமலகாந்தின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது திணறியதுடன் விக்கெட்டுக்களை விரைவாகவும் இழந்தது. இறுதியில் கே.சீ.சீ.சீ. அணி 39.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இ[illegible] ராகுலன் 44, உத்தமன் 32, யனு[illegible] 25, சாம்பவன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விமலகாந் நான்கு, சலிஸ்ரன், றொகான் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை இப்போட்டியில் யாழ். சென்றல் அணி வெற்றிபெற்றதன் மூலம் இத்தொடரில் மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 2013ஆம் ஆண்டு நடைபெறும் சுற்றுப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். (07)

## நாளைய விளையாட்டு

(பருத்தித்துறை)

புதுவருடத்தை முன்னிட்டு பருத்தித்துறை பொலிஸாரும், பொதுமக்களும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா நாளை புதன் கிழமை காலை 7.00 மணி முதல் திக்கம்முனை விளையாட்டுத் திடலில் இடம்பெறவுள்ளது.

இவ்விளையாட்டு நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்கள் உட்பட பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் குழு தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி அபயக்கோன் தலைமையில் இடம்பெறும் இவ்விளையாட்டு நிகழ்வில் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரா, காங்கேசன்துறைப் பொலிஸ் அதிகாரி காமினி பெரேரா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு பருத்தித்துறையில் உள்ள வங்கிகள், வர்த்தக நிலையங்கள், சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அனுசரணை வழங்குகின்றன.

இவ்விளையாட்டு நிகழ்வில் இப்பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர், யுவதிகளை பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்துமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (116)

# பிரதேச மட்ட பெண்கள் பூப்பந்து சம்பியனானது மட்டுவில் வளர்மதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணி சம்பியனானது.

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பூப்பந்தாட்டப் போட்டி கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டி ஆண்கள், பெண்கள் என இருபாலாருக்குமிடையில் நடைபெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்து அணியும், மட்டுவில் வளர்மதி அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய மட்டுவில் வளர்மதி அணி 2-0 என்ற செட் அடிப்படையில் வெற்றி பெற்று பிரதேச மட்ட சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான போட்டியில் பிரதேசத்திலுள்ள முன்னணி அணிகள் பல பங்கு கொண்டன.

இருப்பினும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும், சாவகச்சேரி இந்து அணியும் மோதின. இதில் அபாரமாக ஆடிய ஐங்கரன் அணி 2-1 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணியும், சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணியும் மோதின. இதில் வளர்மதி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இதன் மூலம் இறுதிப் போட்டியில் வளர்மதி அணியை எதிர்த்து ஐங்கரன் அணி மோதவுள்ளன.

இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (118)





சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அச்சுவேலி பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் பல விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டது. அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தியாகராசா தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டு நிகழ்வில் பெருமளவான வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர். சைக்கிளோட்டம், மரதனோட்டம், சிறுவர்களுக்கான பலூன் ஊதி உடைத்தல், பணிஸ் சாப்பிடுதல், யானைக்கு கண்வைத்தல், பெரியவர்களுக்கான முட்டி உடைத்தல், சறுக்கு மரம் ஏறுதல், கயிறு இழுத்தல் கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் நடைபெற்றன. கடந்த செவ்வாக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் பலூன் உடைத்தல் மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகளைக் காணலாம்.

## கனிஷ்ட மெய்வன்மை

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட கனிஷ்ட மெய்வன்மைப் போட்டி அடுத்த மாதம் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகளை பதிவு செய்யக் கோரப்பட்டுள்ளது. பதிவுகளை நேரடியாகவோ அல்லது யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகத்தினூடாகவோ மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# முதன் முறையாகச் சம்பியன்

(ஷாங்காய்)

பார்முலா, 1 கார்ப் பந்தயத்தில் ஜேர்மனியின் நிக்கோ ரோஸ்பெர்க் முதல் முறையாக கோப்பை வென்று அசத்தினார்.

முன்னணி வீரர்கள் பங்கேற்கும் பார்முலா,1 கார்ப் பந்தயம் பல்வேறு நாடுகளில் நடந்து வருகிறது. இந்தாண்டின் 3ஆவது போட்டி சீனாவின் ஷாங்காய் நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

கடந்த 2 பந்தயங்களில் கோப்பை வென்ற பிரிட்டனின் ஜென்சன் பட்டன், ஸ்பெயினின் பெர்ணான்டோ அலோசன்சா மற்றும் ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டல், 7 முறை உலக சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மனியின் சூமரக்கர் ஆகியோர் பங்கேற்றனர். இதில், அபாரமாக செயற்பட்ட ஜேர்மனியின் நிக்கோ ரோஸ்பெர்க் 56 சுற்றுகள் கொண்ட போட்டித் தூரத்தை 1 மணி நேரம் 36 நிமிடம் 26 வினாடிகளில் கடந்து, தனது வாழ்நாளில் முதல் பார்முலா,1 கோப்பையை வென்றார்.

இதுவரை பார்முலா-,1இல் ரோஸ்பெர்க் 111 ரேசில் கலந்து கொண்டுள்ளார். மெர்சிடஸ் அணி சார்பாக பங்கேற்று முதன் முறையாக கோப்பை வென்ற ரோஸ்பெர்க்குக்கு சக அணி வீரர்கள் பாராட்டினர். பிரிட்டனின் ஜென்சன் பட்டன் 1 மணி நேரம் 36 நிமிடம் 47 வினாடிகளில் போட்டித் தூரத்தை கடந்து 2ஆவது இடத்தையும், பிரிட்டனின் லீவிஸ் ஹாமில்டன் 1 மணி நேரம் 37 நிமிடம் 13 வினாடிகளில் போட்டித் தூரத்தை கடந்து 3ஆவது இடத்தையும் பிடித்தனர். ஸ்பெயினின் அலோன்சா 9ஆவது இடத்தையும், ஹெச்ஆர்டி கோஸ்வொர்த் அணி சார்பில் பங்கேற்ற இந்தியாவின் நரேன் கார்த்தியேகன் 22ஆவது இடத்தையும் பிடித்தனர். சூமாக்கர் காரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பாதியிலேயே வீலகினார். அடுத்த ரேஸ் பஹ்ரைனில் வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதிலும் நிக்கோ ரோஸ்பெர்க் சாதிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.




## இறுதிப் போட்டிக்குத் தகுதி

ஏ.டி.பி. கிளே கோர்ட் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டிக்கு இக்ஷனர், ஜூவான் மொன்கோ ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் ஏ.டி.பி. கிளே கோர்ட் சம்பியன்ஷிப் ரென்னிஸ் போட்டி நடக்கிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில், அமெரிக்காவின் ஜான் இக்ஷனர் 6,7, 7,6, 6,3 என்ற செட்களில் ஸ்பெயினின் பிலிசியானோ லோபசை வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். இறுதிப் போட்டியில் இஷனர்,ஆர்ஜென்டினாவின் ஜூவான் மொனகோவுடன் மோதவுள்ளார்.

## பஞ்சாப் வெற்றி

(கொல்கத்தா)

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிரான பரபரப்பான ஆட்டமொன்றில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். ருவென்ரி -20 கிரிக்கெட் தொடரின் 17ஆவது ஆட்டம் நேற்று கொல்கத்தாவில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம். சிங் 38, டேவிட் ஹசி 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நரைன் 19 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் தாஸ் 35 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பி. சௌலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



# மோசமான ஆட்டமே தோல்விக்குக் காரணம்

(கொல்கத்தா)

தோல்வியை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. நடுவரிசை வீரர்களின் மோசமான ஆட்டமே தோல்விக்குக் காரணம் என கொல்கத்தா அணியின் கப்டன் கௌதம் கம்பீர் தெரிவித்தார்.

பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசி 134 ஓட்டங்களுக்குள் பஞ்சாப் அணியை கட்டுப்படுத்தினார்கள். எங்களது நடுவரிசையில் களமிறங்கிய வீரர்கள் ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. வீரர்கள் தங்களுக்குள்ள பொறுப்பை உணர வேண்டும். யூசுப் பதானின் ஆட்டம் கவலை அளிக்கும் வகையில் உள்ளது. எங்கள் அணிக்கு அவர் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வீரர் ஆவார். அவர் மீது அதிகமான நம்பிக்கை வைத்துள்ளேன். இனிவரும் போட்டிகளில் அவர் ஓட்டங்களைக் குவிப்பார் என்று நம்புகிறேன். ஆடுகளத்துக்கு ஏற்ற வகையில்தான் சிறந்த வீரர்களைத் தேர்வு செய்கிறேன்.

வீரர்கள் மோசமாக ஆடினால் கடுமையான முடிவை மேற்கொள்ள வேண்டிவரும். அதற்கான நேரம் வந்துவிட்டதாக நினைக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொல்கத்தா அணி இது வரை 2 வெற்றி, 3 தோல்வியுடன் 4 புள்ளிகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நடுவர்கள் சந்தேகம்

ஐ.பி.எல் போட்டியில் புனே வாரியர்ஸ் அணியில் விளையாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் சாமுவேல்ஸ் பந்துவீச்சு குறித்து நடுவர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

புனேவில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற சென்னை சூப்பர் கிங்சுக்கு எதிரான ஆட்டத்தின் போது அவர் சில பந்துகளை வீசிய முறை கிரிக்கெட் விதிமுறைகளுக்கு புறம்பாக இருந்ததாக கள நடுவர்கள் அலீம்தார், புரூஸ் ஆக்ஸன்போர்டு, மூன்றாவது நீடுவர் வினீத் குல்கர்னி ஆகியோர் புகார் தெரிவித்துள்ளனர்.

இனிவரும் போட்டிகளில் அவர்இது போன்ற தவறுகளை செய்யும்பட்சத்தில் ஐ.பி.எல் விதிமுறைப்படி எஞ்சிய போட்டிகளில் அவர் பந்துவீசுவதற்குத் தடை விதிக்கப்படும் என்று ஐ.பி.எல். அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாமுவேல்ஸின் பந்துவீச்சில் கடந்த சில நாட்களாகவே சந்தேகம் எழுந்தது. சுழற்பந்து வீச்சாளரான சாமுவேல்ஸ், மும்பை வீரர் சூர்யகுமாரை போல்டாக்கிய போது வேகப்பந்து வீச்சைக் கையாள்வது தெரிந்தது.

சென்னை சூப்பர் கிங்சுக்கு எதிரான ஆட்டத்திலும் ஒரு ஓவரை 122 கி.மீ வேகத்தில் அவர் வீசினார். இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர்களான பிரவீண் குமார், வினய் குமார் போன்ற வீரர்களே 122 கி.மீ. வேகத்தில்தான் பந்துவீசி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தங்கம் வெல்வதே இலக்கு

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்வதே எனது தற்போதைய இலக்கு என சேர்பியாவின் ரென்னிஸ் வீரரும், முதல் நிலை வீரருமான ஜோகோவிச் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு எனக்குச் சிறப்பான ஆட்டாக அமைந்திருந்தது. அதேபோன்று இந்த ஆண்டும் அவ்வாறே அமையும் என எதிர்பார்க்கின்றேன். உடற்தகுதியும், ஆட்டத் திறனையும் தொடர்ந்து பேணி கடந்த ஆண்டைப் போன்று இந்த ஆண்டும் பல வெற்றிகளைப் பதிவாக்கிக் கொள்ள முயற்சிபம்பன். லண்டன் ஒலிம்பிக்போட்டியில் தங்கம் வெல்வதே எனது தற்போதைய இலக்கு. அதற்காக கடும் போட்டியிருக்கும் என்பதும் தெரிந்த விடயம் தான். அதற்கான பயிற்சிகளை நான் முழு வீச்சில் மேற்கொண்டு வருகின்றேன் எனத் தெரிவித்தார்.



# ஆமை வேகத்தில் ஆஸி.

(கரிபியன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஆமை வேகத்தில் ஆடி வருகின்றது.

மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முத லில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி ஆமை வேகத்தில் ஆடி வருகின்றது. நேற்று முன்தினம் நிறைவடைந்த முதல் நாள் ஆட்டம் நிறைவில் அவுஸ்ரேலிய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் வட்சன் 56, கிளார்க் 45, வோனர் 29, கௌன் 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது ஹசி 26 மற்றும் வைட் 11 ஓட்டங்களுடன் இருந்தனர். பந்து வீச்சில் றோச் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# ராஜஸ்தான் அபார வெற்றி

(பெங்களூர்)

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை 59 ஓட்டங்களால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீழ்த்தியது.

5ஆவது ஐ.பி.எல் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரின் 17ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதுகின்றன.

முதலில் ஆடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கிய ராவிட்டும், ரஹானேவும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். மோசமான பந்துகளை மட்டுமே இருவரும் பவுண்டரிக்கு அனுப்பினர். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை மெதுவாக உயர்ந்து இருந்தது.இதனைத் தொடர்ந்து ரஹானாவின் அதிரடி ஆட்டம் தொடர்ந்தது. இவரைக் கட்டுப்படுத்த பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முயன்றும் முடிவில்லை. இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஹானா 60 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், 15 பவுண்டரிகள் அடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் ஐந்தாவது ஐ.பி.எல். ருவென்ரி 20 தொடரில் முதல் சதம் கண்ட வீரர் என்ற சிறப்பையும் ரஹானா பெற்றுக் கொண்டார்.

பதிலுக்கு 196 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கி பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

அகர்வால் 34, ஹோலி 22 ஓட்டங்களைப் பெற்றனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக ரஹான தெரிவா- னார்.





நிரந்தரமான சமாதானத்துக்கும் சமூக நீதிக்கும் சகவாழ்வுக்காகவும் நேர்மையாக உழைக்கவும், தியாகங்களையல்ல சிறிய சிறிய விட்டுக்கொடுப்புக்களுக்குத் தயங்குகின்ற அல்லது மறுதலிக்கின்ற இவர்களை மறுபடியும் தேர்தலில் வெற்றிபெறச் செய்யும் மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. "ஆட்டா ஆடு" என்று ஆட்டிவைக்கப் பார்க்கிறார்கள். இவர்களும் அலுத்துக் கொள்ளாமல் ஆடுகிறார்கள் நிர்வாணமாக.


புலம்பெயர்ந்த புண்ணியவாளர்களில் பலர் தமிழ் தேசியத்தின்பால் ஈர்க்கப்பட்டு புலிகளின் பாசிசத்தால் கட்டுண்டு சமரசங்களோடு தமது கடமையை இனிதே நிறைவேற்றினார்கள். வளமான எதிர்காலத்தை தமதாக்கிக் கொண்டார்கள். பிள்ளைகளின் எதிர்காலத்தை நல்லமுறையில் அமைத்துக்கொள்ள படாதபாடு படுகிறார்கள். இதற்குள் அடங்கிவிட மறுத்தவர்கள் சிலர் பேனாவும் கையுமாக வீறுகொண்டு எழுந்தார்கள்.

இது எதுவுமே தவறில்லை.

ஆனால் இவர்கள் தாயகத்திலிருக்கும் தாம்சார்ந்த சமூகத்துக்காக கண்ணீர் சிந்துவதைத்தான் தாங்க முடியவில்லை. (உள்ளுணர்வோடும் உண்மையாகவும் செயற்படுபவர்களையும் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தனியாகவும் கூட்டாகவும் இலங்கைக்கு சென்று தமிழருக்காக உழைப்பவர்களை இங்கு நான் குறிப்பிடவில்லை)

இவர்கள் எல்லோரையும் இணைத்துக்கொண்டு செயற்படப் போவதாக அவ்வப்போது மிரட்டுவார்கள். இது அனேகமாக கோடை கால விடுமுறைகளில்தான். கூட்டங்களும் சந்திப்புக்களும் வாதப்பிரதிவாதங்களும் முன்நகர்வதான சில செயற்பாடுகளும் நடைபெறும். "நம்பிக்கை வரும் ஆனால் வராது" ஏனெனில் கட்சிக்காரர்கள் இயக்கக்காரனை ஒதுக்க இயக்கக்காரர்கள் கட்சிக்காரரை ஒதுக்க இவர்கள் இரண்டுபேரும் சேர்ந்தால் "அரசாங்கத்தின்ர ஆள்" என ஒதுக்க ஒரே ஒதுக்கலாகத்தான் இருக்கும். இறுதியில் ஒவ்வொருவராக ஒதுக்கப்படுவார்கள் அல்லது ஒதுங்குவார்கள்.

# கோடைக்கால போக்கிடம்!



- அர்வின்ஜீ கட்டுரையிலிருந்து.

விடுதலைப் புலிகள் இருந்த காலகட்டத்தில் பல சிறந்த மனிதர்கள் படுகொலை செய்யப்பட்டு வந்தார்கள். இவர்களுக்கான இரங்கல் கூட்டங்கள் அவ்வப்போது லண்டனிலும் வேறு சில புலம்பெயர் நாடுகளிலும் நடைபெற்றன. இக்கூட்டங்களுக்கு சிலரின் பிரசன்னமே இருந்தது. முன்னர் முற்போக்காக செயற்பட்ட பலரின் தலைக்கறுப்பு தெரியாது. வேலைப் பளு - தனிப்பட்ட வழு காரணங்களுக்காக இவர்கள் தலைகாட்டுவதில்லை. அப்படியிருக்க

இதற்கு சிறந்த உதாரணமாக லண்டனில் வாழ்ந்துவரும் முற்போக்கு சிந்தனையும் சிறந்த செயற்பாட்டாளராகவும் இருக்கும் ஒருவர் ஊடகத்துறை சாந்த ஒரு தொழில் முதலீட்டுக்காக, நான் மேலே குறிப்பிட்டவர்களுக்கு ஒரு பரந்துபட்ட அழைப்பை விடுத்தார். என்னே ஆச்சரியம் அனைவரும் பிரசன்னமாகியிருந்தனர். ஆச்சரியத்திலும் ஆச்சரியம் அவர்களின் சிலரின் பிள்ளைகளும் பிரசன்னமாயிருந்ததுதான்.

இந்த தொழில் முதலீட்டுக்கு தாமும் தம் வாரிசுகளையும் அழைத்து வந்தது இந்தக் கூட்டம். இந்தக் கூட்டத்துக்குள் நானும் அடக்கம்.

இக்கூட்டம் விழுந்தடித்ததற்கு "முதலீடு" என்பது மட்டுமல்ல காரணம். அழைப்பு விடுத்தவரிலுள்ள நம்பிக்கையும் காரணம். ஏனெனில் அவர் தன்னந்தனியாக, நின்ற ஒரு பத்திரிகையை பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நடத்திக் காட்டியவர். இக்கூட்டம் அவரை நம்பியதில் வியப்பில்லை. ஆனால் இவர் எப்படி இக்கூட்டத்தை நம்பினார் அதை அவரிடம்தான் கேட்க வேண்டும். "அண்ண எப்படி இந்தக் கூட்டத்த நம்புறியள்?"

கண்கள் சிறுத்து, இதழ்கள் விரிந்து பற்கள் தெரிய சிரிக்கிறார். என்ன பதிலளிப்பது என்று சிந்திக்கிறார் போலும். நானும் அவருடைய பதிலை அப்படியே எழுதுவேன். நீங்கள் என்னை உயிரோடோ அல்லது எழுதும் மனநிலையில் விட்டால்...

## ஹிலாரியின் வாழ்த்து: அச்சம் தரும் முன்னறிவிப்பு!




சிங்கள மற்றும் தமிழ் பிரஜைகளுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இலங்கையின் தேசிய நல்லிணக்கத்திற்கும், அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அமெரிக்க பிரஜைகள் சார்பில் தாம் வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாழ்த்துச் செய்தி தெற்காசியாவில் கேட்பாரற்றுக் கிடக்கும் நிராகரிக்கப்பட்ட நாடான இலங்கையில் அச்சம் தரும் அமரிக்காவின் நேரடித்தலையீட்டின் இன்னொரு முன்னறிவிப்பு.

- நன்றி: இனியொரு

## கடைசிப் பாடல்க[illegible]ர்!



"உறவுகள்" என்ற படத்துக்காக "கால்சலங்கை ஒலியில் அழகுக் கவிதை பிறக்கும் புதுமை" என்று தொடங்கும் பாடலை கவிதா ஹோட்டலில் வைத்து கவியரசு கண்ணதாசன் எழுதினார். அப்போதே அவர் உடல்நிலை சரியில்லாதிருந்தது. மிகவும் சோர்வாக இருந்தார். சில தினங்களுக்குப் பின் திகதி பாடல் பதிவு செய்யப்பட்ட சமயத்தில், கவிஞர் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்தார். தனது முடிவுகாலம் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை கவிஞர் எண்ணினாரோ என்னவோ தெரியவில்லை. அவர் அந்தப்பாடலின் இடையே இந்த வரிகளையும் சேர்த்து எழுதியிருந்தார். "இனி ஒரு சுகமேது- என் வீணை ஒலிக்காது- இறைவன் அழைப்பான் விரைவில் என்னை."

அதேபோல் அமெரிக்காவுக்குப் போவதற்கு சில நாட்களுக்கு முன்பு இளையராஜா இசையமைப்பில் நான்கு பாடல்களை எழுதித்தருவதாக ஒப்புக் கொண்டிருந்தார். மூன்றாம் பிறை படத்திற்காக பிரசாத் ஸ்டுடியோவில் மூன்று பாடல்களை எழுதி முடித்தார். அத்தோடு கிளம்பிவிட்டார். அப்போது காரில் திரும்பும்போது "இளையராஜா கொடுத்து வச்சவன். அமெரிக்கா போய் திரும்பினால், அதன்பிறகு நான் பாட்டு [illegible]ழுத மாட்டேன்" என்று கூறினார். கவிஞர் சொல்லியபடியே அவர் அமெரிக்காவிலிருந்து தி[illegible]ம்பி வரவுமில்லை. கவிதைகள் எழுதவுமில்லை. அமெரிக்காவிலேயே மரணத்தைத் தழுவினார் கண்ணதாசன்.

## மீன்கள் கொடுக்கும் மின்சார அதிர்ச்சி!

மத்திய தரைக் கடலிலும், வேறு சில கடல் பகுதிகளிலும் வாழும் "ஸ்கேட்ஸ்" என்ற மீன் வகை உள்ளது. இவற்றை "டார்பிடோ ரேஸ்" என்றும் அழைப்பார்கள். இம்மீன்கள் நீந்தும் போது அமைதியாகவும் மெதுவாகவும் நீந்தும். இவற்றின் அருகே வேறு சிறு மீன்களோ, நண்டுகளோ, பிற கடல்வாழ் உயிரிகளோ வந்துவிட்டால் "சுரீர்" என்று மின்சார அதிர்ச்சி கொடுக்கும். அதில் அவை துடித்து மடியும். பின்னர் அவற்றை




இந்த மீன்கள் உணவாக எடுத்துக் கொள்ளும்.


இந்த மீன்கள் தோற்றுவிக்கும் சக்தி, மின்சாரம் என்பது அக்கால ரோமானியர்களுக்குத் தெரியவில்லை. இவை ஏதோ விஷத்தன்மையுள்ள பொருட்களை வெளியிட்டுத் தான் தமது இரையைக் கொல்கின்றன என்று நம்பினர். தங்கள் மருத்துவச் சிகிச்சைகளுக்காக இம்மீன்களை பெரிய தொட்டிகளில் வைத்து வளர்த்தார்கள்.

"ஸ்கேட்" மீன்களைப் போலவே மின்சக்தியை வெளிப்படுத்தும் மற்றொரு மீன் வகை, "ஈல்" என்பதாகும். ஆனால் இவை நன்னீரில் வாழ்பவை.

இந்த மீன்கள் இரவில் மட்டுமே வெளியே வந்து தம் இரையைத் தேடும். தென் அமெரிக்காவில் உள்ள அமேசன் நதியின் ஆழமற்ற பகுதிகளில் இம்மீன்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை வெளிப்படுத்தும் மின்சக்தி, பெரிய மீன்களைக் கூட செயலற்றுப் போகச் செய்யும் அளவுக்குப் பலமானது. இதனால் அந்தப் பகுதிகளில் வாழும் பூர்வீகக் குடிமக்கள் அந்நதியில் இறங்கி நடக்கவே அஞ்சுகிறார்கள்.




இந்த மீன்களின் உடலிலிருந்து தோன்றும் மின்சாரத்தின் அளவு எவ்வளவு தெரியுமா? சாதாரணமாக நம் வீடுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் மின்சாரத்தின் அளவு 220



வோல்ற் ஆகும். ஆனால் ஈல் தோற்றுவிக்கும் மின்சாரத்தின் அளவு சுமார் 600 வோல்ற்!

இவ்வளவு மின்சக்தியை அந்த மீன் பெற்றுள்ளது. அது வாழும் நன்னீர் சூழலுக்கு ஏற்றதே ஆகும். நன்னீர், மின்சாரத்தை கடத்தும் பண்பு கொண்டதில்லை.

கடல்நீரில் வாழும் ஸ்கேட் மீன் தோற்றுவிப்பது 60 வோல்ற் மின்சாரம் என்றாலும் கடல்நீர் மின்சாரத்தைக் கடத்தும் பண்பு உடையது. ஆகையால் இக்குறைந்த அளவு மின்சாரம் அம்மீனுக்குப் போதுமானது.

மீன்கள் எவ்வாறு அவற்றின் உடலில் இருந்து மின்சாரத்தைத் தோற்றுவிக்கின்றன? அதற்குப் பயன்படுவது அவற்றின் உடலில் உள்ள நரம்பு முனைகளும், தசைகளும்தான். நரம்பு முனைகள்தான் மின்காந்தத் தகடுகளாக அமைகின்றன. இந்தத் தகடுகள் தொகுதி தொகுதியாய் அமைந்துள்ளன. ஒரு தொகுதியில் உள்ள தகடுகள் தொடர் அடுக்கில் இணைந்துள்ளன. ஆனால் தொகுதிகள் எல்லாம் தங்களுக்குள் பக்க அடுக்கில் அமைந்துள்ளன. சாதாரணமாக, மின்சாரத்தைத் தோற்றுவிக்கும் உறுப்பு, எலும்புடன் இணைந்து தசையுடன்தான் அமைந்திருக்கும்.

நரம்பால் உண்டாகும் தூண்டுதலின் போது இந்த எலும்புத் தசை சுருங்கும். அப்போது மின் தூண்டல் ஏற்படுகிறது. அந்த மீன் தூண்டல் தசையிலிருந்து நரம்பு முனையை அடையும் போது ஒரு சிறப்பு இரசாயனப் பொருள் அங்கு சுரக்கப்படும். அதன் விளைவாகவே தசைகள் சுருங்கும். ஆனால் மின் உற்பத்தி உறுப்பால் தசைகள் சுருங்கிக் கொள்வதில்லை. அதற்குப் பதிலாக அவை மின் தூண்டலைத் தோற்றுவிக்கும் உறுப்புகளாக இயங்குகின்றன.

சாதாரணமாக இப்படித் தோன்றும் ஒவ்வொரு சிறு மின் தூண்டலும் சுமார் 150 மில்லி வோல்ற் திறன் கொண்டதாகும்.

# சோகம் ஏற்படுத்தும் உடலியல் பாதிப்புகள்

தன் துணையை இழந்த மறு விநாடியே உயிர் துறந்து இறந்து போகுமாம் அன்றில் பறவை. இது ஒருவர் மற்றவர் மீது வைத்திருக்கும் உள்ளார்ந்த அன்பு அல்லது காதல் எவ்வளவு உண்மையானது, வலிமை யானது என்பதை உணர்த்த சுட்டிக் காட்டப்படும் உதாரணங்களில் ஒன்று. இந்த உன்னதமான பண்பு பறவை இனத்துக்கு மட்டுமல்லாது மனிதர்களுக்கும் உரியது.



உதாரணமாக காதலர்களில் ஒருவர் இறந்த துக்கம் தாளாமல் மற்றொருவர் இறந்து போவது அல்லது கணவன் மனைவி இருவரில் ஒருவர் இறந்தால் மற்றொருவர் இறந்து போவது குறித்த செய்திகளையும் சினிமாக் காட்சிகளையும் நாம் பார்த்திருப்போம்.

இந்தக் கூற்று எவ்வளவு உண்மையானது, இதற்கான அறிவியல் ரீதியிலான காரணங்கள் என்ன, ஒருவரின் இழப்பு மற்றொருவரின் உயிரைப் பறிக்கக் கூடிய அளவிற்கு வலிமையானதா போன்ற பல்வேறு சந்தேகங்களும் கேள்விகளும் நம்மில் பலருக்கும் இருக்கக் கூடும். அவற்றுக்கான விடைகள்தான் தெரிந்திருக்கவில்லை.

ஆனால், இந்தக் கேள்விகளுக்கான விடையைத் தேடி ஆய்வுகளை மேற்கொண்ட இங்கிலாந்து நாட்டின் பேர்மிங்காம் பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கு ஆச்சரியமான ஆனால் ஆதாரபூர்வமான ஒரு மருத்துவ உண்மை தெரிய வந்திருக்கிறது.

அது என்னவென்றால், அன்புக்குரிய ஒருவரை இழப்பதால் ஏற்படும் துக்கமானது உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியின் குறிப்பிட்ட பாகங்களை செயலிழக்கச் செய்து விடுகிறது. இதனால் பக்டீரியா தொற்றுகளை எதிர்த்துப் போராடும் உடலின் நோய் எதிர்ப்புத் திறன் குறைந்து விடுகிறது. விளைவு, பல்வேறு தொற்று நோய்கள் ஏற்பட்டு உடல் நலிந்து மரணம் நிகழ்கிறது என்று விளக்குகிறார் ஆய்வாளர் பேராசிரியர் ஜெனட் லோர்ட்.

இரத்தத்தில் உள்ள நியூட்ரோபில் எனப்படும் ஒருவகை வெள்ளை இரத்த அணுக்கள் பக்டீரியா தொற்றுகளான நிமோனியா போன்றவற்றை எதிர்க்கும் வேலையைச் செய்கின்றன. ஆனால் ஒருவருடைய இழப்பினால் உண்டாகும் துக்கம் ஏற்படுத்தும் மன உளைச்சலும், மனச்சோர்வும் நியூட்ரோபில்களின் செயற்பாட்டினைப் பாதிக்கின்றன. இதனாலேயே பக்டீரியா தொற்றுகளுக்கு எதிரான உடலின் நோய் எதிர்ப்புத் திறன் குறைந்து விடுகிறது.

முக்கியமாக, இந்த வகையான துக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் வயதானவர்களை அதிகமாகப் பாதிக்கிறதாம். ஏனென்றால், பொதுவாக துக்கத்தினால் உண்டாகும் விளைவுகளைச் சரிப்படுத்தும் திறனுள்ள ஒரு ஓமோனை நமது உடல் உற்பத்தி செய்கிறது. ஆனால், இந்த ஓமோனை உற்பத்தி செய்யும் திறன் வயதாக வயதாக குறைந்து போகிறது. இதனாலேயே வயதானவர்கள் ஆரோக்கியமானவர்களாக இருந்தாலும் கூட துக்கத்தின் விளைவுகள் அவர்களை மிகவும் அதிகப்படியாக பாதிக்கிறது என்கிறார் பேராசிரியர் லோர்ட்.

இந்த ஆய்வுக்காக 65 வயதுக்கு மேற்பட்ட வயதுடைய 48 ஆரோக்கியமான மனிதர்களின் நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் ஓமோன் அளவுகள் பரிசோதிக்கப்பட்டன.

இவர்களில் பாதிப் பேர் ஆய்வுக்கு முந்தைய 12 மாதங்களில் தங்களின் ஆருயிர்துணைகளை இழந்த வர்கள். ஆய்வின் முடிவில் ஆரோக்கியமானவர்களுடன் ஒப்பிடுகையில், துணையை இழந்தவர்களின் இரத்தத்தில் உள்ள நியூட்ரோபில்களின் பக்டீரியா எதிர்ப்பு திறன் வெகுவாகக் குறைந்திருந்தது தெரியவந்தது.

இது ஒருபுறமிருக்க, இடுப்பு முறிவினாலும் இம்மாதிரியான ஓமோன் பிரச்சினைகள் ஏற்படுகிறது என்பதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. இதன் மூலம் 80 வயதுக்கு மேலானவர்கள் இடுப்பு முறிவினால் பாதிக்கப்பட்ட ஒரு வருடத்திற்குள் இறந்து போவதற்கான காரணம் கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நாலு எண்ணுக்கு நன்றி!



கி.பி. 1316-87ஆல் ஜேர்மனியை ஆண்ட நான்காம் சாள்ஸ் மன்னருக்கு 4 என்ற எண்ணிக்கையில் அபார மோகம் இருந்தது. அவர் தினமும் 4 முறை உணவு உண்பார். அதில் 4 வகை பண்டங்கள் இருக்கும். 4 வகை மதுபானங்கள் அருந்துவார். தினமும் 4 மாளிகைகளில் தங்குவார். ஒவ்வொரு மாளிகையிலும் 4 அறைகள், 4 வாயில்கள், 4 சரவிளக்குகள் உண்டு. தினமும் 4 வண்ணங்களில் ஆடை உடுத்துவார். மன்னருடைய மகுடத்தில் 4 முகப்புகள் இருக்கும். நாட்டை 4 மாநிலங்களாகப் பிரித்தார். தன் சேவைகளையும் 4 பிரிவுகளாக்கினார். ஆட்சிப் பொறுப்புக்கு 4 டியூக், 4 கவர்னர், 4 ஜெனரல்களை நியமித்தார். அவர் மரணப்படுக்கையில் இருந்தபோதும் 4 வைத்தியர்கள் பணிவிடை செய்தனர். இறுதியில் குறிப்பிட்ட தினம் மாலை 4 மணி 4 நிமிடங்கள் ஆனதும் 4 ஆம் சாள்ஸ் இயற்கை எய்தினார்.

## தெரிந்து கொள்ள...




▶ **இங்கிலாந்து :** முதலாம் அரசி எலிசபெத் காலத்தில் (கி.பி. 1558- 1603) அரச குடும்பத்தினர் மட்டுமே வெல்வெட் ஆடைகளை அணியும் உரிமை பெற்றிருந் தனர்.

▶ **சுவிற்சர்லாந்து :** சுவிஸ் பள்ளத் தாக்கின் தெற்குப் பகுதியில் யாருக்கும் வீடுகள் இல்லை. காரணம், இங்கு சூரிய ஒளியே கிடையாது.

▶ **ஜேர்மனி :** டாக்ஸி ஓட்டுநர்கள் டாக்ஸியை ஓட்டும்பொழுது பயணிகளிடம் பேசக்கூடாது. இது ஜேர்மனியில் இன்றும் நடைமுறையில் உள்ள சட்டம்.


▶ **அமெரிக்கா :** இங்கு கடிகாரக் கடைகளில் விற்பனைக்கு இருக்கும் கடிகாரங்களில் நேரம் 10 - 10 என்று சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கும். ஏன் இப்படி? அமெரிக்க ஜனாதிபதி லிங்கன் கொல்லப்பட்ட நேரத்தை நினைவுகூறும் வண்ணம் அவ்வாறு வைக்கப்பட்டிருக்கும்.



▶ **லிபியா :** வெறும் பச்சை நிறத்துணிதான் லிபியா நாட்டின் தேசியக்கொடி.

▶ **நோர்வே :** இங்கு மக்கள் தங்கள் வீடுகளின் கூரைகளில் புற்களைப் பயிரிடுகின்றனர்.

▶ **துருக்கி :** உலகின் மிகப் பழமையான சுரங்கப் பாதை துருக்கியில் உள்ளது. இங்கு சாமோஸ் என்ற இடத்தில் சுண்ணாம்புக் கல் மலை ஒன்று உள்ளது. இம்மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட சுரங்கப்பாதைதான் உலகின் மிகப் பழமையான சுரங்கப்பாதை. இது 1000 மீற்றர் நீளமும், 2 மீற்றர் உயரமும், 2 மீற்றர் அகலமும் கொண்டது.




▶ **லெபனான் :** இங்கு எப்போதும் கிறிஸ்தவர்களிடமிருந்து ஜனாதிபதியும், முஸ்லிம்களிடமிருந்து பிரதமரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

▶ **கோவா :** இதன் தலைநகர் பஞ்சிம். அங்குள்ள இரண்டு வீதிகளின் பெயர்கள்: ஜுன் 18ஆம் திகதி தெரு, ஜனவரி 31ஆம் திகதி தெரு.

## மன்றோவின் புகைப்படம்!

அமெரிக்காவில் உள்ள பெவர்லி ஹில்சில் ஏலம் விடப்பட்ட, மர்லின் மன்றோவின் புகைப்படம் ஒன்று, மூன்றரை இலட்சம் டொலருக்கு விற்பனையாகியுள்ளது. மறைந்த ஹொலிவுட் நடிகையான மர்லின் மன்றோ திரைப்பட நடிகையாகி விட வேண்டும் என ஆசைப்பட்டு முயற்சித்துக் கொண்டிருந்த 1946இல், எடுக்கப்பட்ட புகைப்படம் அது.

படத்தில் நடிப்பதற்காக வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்த மன்றோவின் தலைமுடி, பிரவுன் வண்ணத்தில் இருந்தது. அவரது முக அழகுக்கு, கோல்டன் வண்ண தலைமுடி தான் பொருத்தமாக இருக்கும் என கருதிய பிரபல புகைப்பட நிபுணர் நார்மா ஜீன், மன்றோவின் தலைமுடிக்கு, தங்க வண்ணடை அடித்து எடுத்த அந்த புகைப்படம் தான், மர்லின் மன்றோவுக்கு, "ட்வன்டியத் செஞ்சரி பொக்ஸ்" திரைப்பட நிறுவனத்தில் நடிக்க வாய்ப்பு பெற்றுத் தந்தது. அதைத் தொடர்ந்து, அவர் உலகப் பிரசித்தி பெற்ற நடிகையானார்.



இந்தப் புகழ் காரணமாகவே இப்புகைப்படம், மூன்றரை இலட்சம் டொலருக்கு விற்பனையாகியுள்ளது.

யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்!

இங்கிலாந்தைச் சேர்ந்த இளம் பெண் விக்கி அண்ட்ரூஸ். வயது 25. இவருக்கு குழந்தைகள் மீது கொள்ளை ஆசை. எப்போதும் குழந்தைகளுடன் இருப்பதையே விரும்புவார். மூன்று ஆண்டுகளுக்கு முன், இவரைப் பரிசோதித்த டாக்டர்கள், கருப்பையில் குறைபாடு இருப்பதாகவும், இதனால், இவரால் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்தனர். அண்ட்ரூவால் இதை ஜீரணிக்கவே முடியவில்லை. ஆயிரக்கணக்கில் செலவழித்து வைத்தியம் பார்த்தும், "வாய்ப்பில்லை" என, உதட்டைப் பிதுக்கி விட்டனர் டாக்டர்கள்.

## 50 இலட்சத்திற்கு பொம்மைகள்!



கவலையை மறப்பதற்காக, குழந்தையைப் போன்று வடிவமைக்கப்பட்ட பொம்மைகளை வாங்கி, அவற்றுடன் கொஞ்சி விளையாடினார். நாளடைவில், பொம்மைகளே, அவரின் முழுநேர பொழுது போக்காகி விட்டது. கையில் கொஞ்சம் காசு சேர்ந்தாலும், உடனடியாக ஓடிச் சென்று, குழந்தை பொம்மைகளை வாங்கிவிடுவார்.

நேரில் பார்த்தால், அசல் குழந்தை போலவே தோற்றமளிக்கும் இந்தப் பொம்மைகள், அதிக விலை உடையவை. இதுவரைக்கும், பொம்மைகளை வாங்குவதற்காக, 50 இலட்சம் ரூபா செலவிட்டுள்ளார். வீட்டை விட்டு வெளியில் சென்றால் கூட, பொம்மைகளையும் கூடவே எடுத்துச் செல்கிறாராம்.

# வலிகாமம் வடக்குப் பகுதியில் மீள்குடியேற்ற கலந்துரையாடல்



(வலிகாமம்)

வலிகாமம் வடக்கு பகுதியில் பொதுமக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது முன்னிலையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலின் போது வலி வடக்குப் பகுதியில் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாத மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பிலும் ஏற்கனவே மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் தேவைகள் தெடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பல்வேறு விடயங்கள் அவதானத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக் கலந்துரையாடலில் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் ஸ்ரீ.மோகனன் அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அதிவேக வீதியில் 15 விபத்துக்கள்

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தின் போது தெற்கு அதிவேக வீதியில் 15 இற்கும் அதிகமான விபத்துக்கள் பதிவானதாக தெற்கு அதிவேக வீதியின் செயற்திட்டப் பணிப்பாளர் ரி.கே.ரணசிங்க தெரிவித்தார்.

அதிக வேகத்தில் வாகனம் செலுத்தியதன் காரணமாகவே இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

மழை காலங்களில் தெற்கு அதிவேக வீதியில் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. தெற்கு அதிவேக வீதி திறக்கப்பட்ட தினத்தில் இருந்து இன்றுவரை 150இற்கும் மேற்பட்ட விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவின் பயணம் பயனுள்ளதாக அமைய வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் இலங்கைப் பயணம் பயனுள்ளதாக அமையவேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஊடகச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை-இந்திய உறவைப் புதுப்பிக்கும் முனைப்புடனேயே இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கொழும்பு வருகின்றது. மாறாகத் தமிழர்கள் மீதுள்ள பாசம் காரணமாக அல்ல.

இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை மீறியே எமக்கு எதிராக ஜெனிவாவில் செயற்பட்டது. இந்தியா இவ்வாறு செயற்படவேண்டும் என உறுதியாக அழுத்தம் கொடுத்தவர் ஜெயலலிதாதான். மத்திய அரசை எமக்கு எதிராகத் திருப்பிவிட்டதன் பின்னணியில் இவரே நின்று செயற்பட்டார்.

இலங்கை வரும் இந்திய நாடாளுமன்றக் குழுவில் தனது கட்சி உறுப்பினர்கள் உள்ளடங்கினால் அது தனது கௌரவத்துக்கு மதிப்புக்கு களங்கத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தைக் கருத்திற்கொண்டே தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழக முதல்வர் தடுத்துள்ளார்.

ஜெனிவா விவகாரத்தால் விரிசல் அடைந்தது எனக் கூறப்படும் இலங்கை-இந்திய உறவைப் புதுப்பிக்கும் நோக்கிலேயே டில்லி நாடாளுமன்றக் குழு இங்கு வருகின்றது. தமிழர்களின் பிரச்சினைகளை மையப்படுத்தி இந்த விஜயம் அமையவில்லை. இலங்கையில் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசுக்கு இந்தியா உதவவேண்டும் என்றார்.

# தொடர்ந்தும் சிகிச்சை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன பிரித்தானியாவில் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவருவதாக அந்தக் கட்சியின் இங்கிலாந்து லண்டன் அலுவலகத்தின் முன்னாள் தலைவர் ரொஜர் சிறிநிவாசன் தெரிவித்தார்.

அவரது உடல் நிலை தேறிவருகின்ற போதிலும் வைத்தியசாலையிலிருந்து வெளியேறுவதற்கு அவருக்கு அனுமதியளிக்கப்படவில்லை.

இங்கிலாந்திற்கு விஜயம் செய்திருந்த ஜயலத் எம்.பி. கடந்த 13ஆம் திகதி கெட்விக் விமான நிலையத்தில் திடீரென மயக்கமுற்றார். இதனையடுத்து அவர், விமான நிலையத்திலிருந்து அழைத்துச் சென்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றார்.

# உண்மையான தகவல் வழங்கினால் குற்றவாளிகளுக்கு சட்ட நடவடிக்கை

## பாதுகாப்புச் செயலர்

(கொழும்பு)

உண்மையான தகவல்களை யார் வழங்கினாலும் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடத்தல் சம்பவமொன்று தொடர்பில் முறைப்பாடு செய்ய சென்ற தாய் ஒருவர் பற்றி கிரியல்ல கருத்து வெளியிட்டிருந்தார்.

கடத்தல் குறித்து காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற போது கடத்தலகாரர்கள் அங்கு இருந்ததனை குறித்த தாய் கண்டு அதிர்ச்சியடைந்தார் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது நியாயமற்றது என கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உண்மையில் குறித்த சம்பவம் இடம்பெற்றிருந்தால் அது பற்றிய தகவல்களை வழங்குமாறு அவர் கிரியல்லவிடம் கோரியுள்ளார்.

தகவல்கள் வழங்கப்பட்டால் குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

லக்ஸ்மன் கிரியல்ல ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச சமூகத்தின் தாளத்திற்கு ஏற்ப ஆட்டம் போடுகின்றார் என கோத்தாபய குற்றம் சுமத்தியுள்ளார்.

1987-1988ஆம் ஆண்டுகளில் இலங்கையில் மிக மோசமான அளவில் கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணியான லக்ஸ்மன் கிரியல்ல, பிரேம்குமார் குணரட்னம் விவகாரத்தில் அடிப்படைச் சட்ட அறிவு கூட இன்றி கருத்து வெளியிட்டுள்ளமை வருத்தமளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

உண்மை நிலைமைகளை அறிந்து கொள்ளாமலேயே லக்ஸ்மன் கிரியல்ல கருத்து வெளியிடுள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை - திவுல் கமுவ பிரதேசத்தில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலம் நேற்றுக் காலை திஸ்ஸமஹாராமை - கதிர்காமம் வீதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அம்பாந்தோட்டை - கிரிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நான்கு சமூகமும் ஒன்றிணைந்தாலே கல்வியில் மறுமலர்ச்சி காணமுடியும்

## வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா

(வவுனியா)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் என்ற நான்கு சமூகமும் ஒன்றிணைந்தாலே நாம் கல்வியில் மறுமலர்ச்சியை காணமுடியும் என வவுனியா தெற்கு கல்வி வலயப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தெரிவித்தார்.

பசுமையை நோக்கிய சாரணர் சமூகம் என்ற தொனிப்பொருளில் மரநடுகை செயற்றிட்டம் வவுனியா மாவட்ட திரி சாரணர்களால் கடந்த 14ஆம் திகதி வவுனியா-தாண்டிக்குளம் பிறமண்டு வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் மாகாண மட்டத்தில் ஆளுநரின் பணிப்பின்பேரில் வினாடிவினாப் போட்டி இடம்பெற்றது. அதற்கு எமது வலயத்தில் இருந்து இரு குழுக்கள் தெரிவு செய்யபட்டார்கள். அவர்களில் கனிஷ்ட குழுவுக்கு எமது வலயத்தில் உள்ள ஆசிரிய ஆலோசகர்களின் மேற்பார்வையின் கீழ் தொடர்ச்சியாக பயிற்சி அளித்ததன் விளைவாக அக்குழு முதலாவது இடத்தினையும் சிரேஸ்ட குழு மூன்றாவது இடத்தினையும் பெற்றது. இதில் இருந்து நான் உணர்ந்து கொண்டது என்னவென்றால் சிரேஷ்ட மாணவர்களில் இதைவிட தரமான மாணவர்கள் எம்மிடையே இருக்கின்றார்கள். அண்மையில் கூட அகில இலங்கை ரீதியில் இரசாயனவியல் வினாவிடைப்போட்டிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து சென்று முதலாமிடம் பெற்ற மாணவர்கள் இருக்கின்றார்கள். இதில் இருந்து நாம் அறிந்த கொள்ளகூடியது என்னவென்றால் எமக்கு அக்கறைதேவை, பயிற்சி தேவை, கவனிப்பு தேவை. எம்மிடையே தரமான மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்களை ஊக்குவிக்க கூடிய மனப்பாங்கு எம்மிடம் இல்லை. அதுவே நான் அறிந்து கொண்ட உண்மை.

இணைப்பாடவிதானங்களிலதான் பின்தங்கி உள்ளார்கள் என நினைத்தால் கல்விநிலையில் கூட 65 வீதத்தில் இருந்து 62 வீதமாக குறைந்துள்ளோம். கடந்த வருடத்தில் இருந்து 2 வீதமான வீழ்ச்சி எம்மிடம் உள்ளது. அண்மையில் இடம்பெற்ற மாகாண கல்வி அமைச்சின் கூட்டத்தில் மாகாணக் கல்வி பணிப்பாளரும் அமைச்சின் செயலாளரும் கேட்டார்கள் உங்களிடம் என்ன வளம் இல்லையென. நகர்ப்புறத்தில் உள்ள உங்களுடைய பாடசாலைகளின் கல்வி செயற்பாடுகளின் வீழ்ச்சிக்கும் பரீட்சை பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கும் காரணம் என்ன, இது நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று.

30000 மாணவர்கள் எமது வலயத்தில் இருக்கின்றார்கள். பெரியதொருபலம் 1755 ஆசிரியர்கள், சிறப்பான அனுபவமுள்ள அதிபர்கள் இருக்கின்றார்கள் இது ஒரு பெரியபலம். இவ்வளவு பலத்தை வைத்துக்கொண்டு நாம் ஏன் இந்த நிலையில் உள்ளோம்? இது தொடர்பில் விளக்கம் ஒவ்வொரு தனித்தனி பாடசாலைகளுக்கும் போய்ச்சேரவேண்டிய விடயம் என்றார். (125)

# கடைப்பிடிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

தொற்றும் நோய்கள் மற்றும் விசர்நாய்க்கடி நோயினை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை சார்க் அமைப்பின் ஏனைய நாடுகள் கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளன.

கடந்த 12ஆம் திகதி மாலை தீவில் நடைபெற்ற சார்க் வலய நாடுகளின் அமைச்சர்கள் மாநாட்டின் போது இதற்கான தீர்மானம் மேற் கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்போது, அமைச்சரினால் தொற்று நோய் மற்றும் விசர்நாய்க்கடி நோய் என்பனவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பான யோசனை முன் வைக்கப்பட்டது.

அத்துடன் இலங்கை இந்த நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக சமர்ப்பித்த யோசனை ஏனைய உறுப்பு நாடுகளால் வரவேற்கப்பட்டன.

இதனிடையே எதிர்வரும் 2014ஆம் ஆண்டு இடம்பெறும் சார்க் நாடுகளின் சுகாதார அமைச்சர்களின் அமர்வினை இலங்கையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பகுதி - II

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01) a) சட்டம், நியாயம் வரைவிலக்கணப்படுத்துக?
b) சட்டம், தொடர்பான கிறீனின் கருத்து யாது?
c) நியாயம் பகிர்வதற்கான நிபந்தனைகள் எவை?
d) சட்டம் நியாயம் வேறுபடுத்துக.

02) a) சட்டத்தின் இயல்புகள் எவை?
b) சட்டம் உருவாக செல்வாக்குச் செலுத்திய காரணிகள் 5 தருக.
c) சட்ட வகை யாது? தேசிய சட்டத்தில் உள்ளடங்கும் சட்டங்கள் எவை?
d) இலங்கை தவிர ஜனநாயக ஆட்சி நிலவும் இரு நாடுகளைப் பெயரிடுக.

03) a) குற்ற வகைகள் எவை?
b) அடிப்படைச் சட்டம் என்றால் என்ன? அதன் உள்ளடக்கங்கள் எவை?
c) 1972, 1978 யாப்பின் அடிப்படை நோக்கங்களை தனித்தனியாகக் குறிப்பிடுக.
d) இலங்கையில் காணப்பட்ட பிரதேச சட்டங்கள் எவை?

04) a) தேச வழமை சட்டத்தின் அடிப்படை ஆதாரங்களைக் குறிப்பிடுக.
b) இஸ்லாமிய சட்டத்தில் உள்ளடக்கிய 4 அடிப்படை அம்சங்கள் எவை?
c) நீதியமைச்சின் பிரதான கடமைகள் எவை?
d) இலங்கையின் தற்போதைய நீதியமைச்சின் பெயர் என்ன?

05) a) சட்ட மா அதிபரின் அதிகாரங்களை நிறைவேற்றும் பிரதிநிதிகள் யாவர்?
b) நீதிமன்ற சுதந்திரத்தில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளும் எவை?
c) நீதிபதியைத் தெரிவு செய்யும் மூன்று முறைகளும் எவை?
d) சட்டவாக்க சபை எது?

06) a) ஜனநாயகம் என்றால் என்ன?
b) ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கனின் கருத்து யாது?
c) ஜனநாயகம் தொடர்பான மூன்று மாதிரிகளும் எவை?
d) ஜனநாயகம் பற்றி யுனஸ்கோவின் கருத்து யாது?

07) a) ஜனநாயக ஆட்சியின் வரலாற்றை சுருக்கமாகக் கூறுக.
b) நவீன ஜனநாயகத்தின் தாயகம் எது?
c) நேரடி ஜனநாயகம் என்றால் என்ன?
d) நேரடி ஜனநாயகம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள் நான்கும் தருக.

08) a) நேரடி ஜனநாயக உத்திகள் நான்கும் எவை?
b) சர்வஜன வாக்குரிமையின் பயன்கள் நான்கும் எவை?
c) ஜனநாயக ஆட்சி முறையின் நான்கு அம்சங்களும் எவை?
d) அரசியல் கட்சி என்றால் என்ன?

09) a) பல கட்சி முறை என்றால் என்ன?
b) ஜனநாயகத்தின் நான்கு தூண்களும் எவை?
c) பேராசிரியர் ஹரல்ட் ஜே.லக்ஸ்கி சுதந்திரம், மனித உரிமை தொடர்பாகக் கூறிய கருத்து யாது?
d) அரசியல் உரிமை ஐந்தும் எவை?

10) a) வரலாற்று ரீதியான புரட்சிகள் எவை?
b) சிவில் உரிமைகள் எவை?
c) தமிழில் வெளிவரும் யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் எவை?
d) இலங்கை முடியரசின் பெயர் என்ன?



# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2012

குடியுரிமைக் கல்வியும் மக்களாட்சியும், பகுதி - I



# கல்வி முரசு

**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

## பகுதி - I

01) அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் உரிமையும் கடமையும் என்பவற்றில் முறைமையே சட்டம் எனக் கூறியவர்?
1) Bout 2) Salamande 3) Green 4) Oxford Ddctionary

02) மசோதா என்ற பதம் குறிப்பது,
1) சட்டம் 2) சம்பிரதாயம் 3) சட்டமூலம் 4) இறைமை

03) சட்ட உருவாக்கத்திற்கு உதவிபுரியும் காரணிகளாக அமைவன,
1) வழக்காறு, மதம் 2) நீதிமன்றச் சட்டம், நியாயம்
3) சட்டவாக்கம், அரசியல் திட்டச் சட்டம் 4) மேற்கூறிய யாவும் சரி

04) சட்டத்தின் வகைகள்,
1) தேசிய சட்டம், உள்வாரியான சட்டம்
2) தேசிய சட்டம், வெளிவாரியான சட்டம்
3) தேசிய சட்டம், சர்வதேச சட்டம்
4) மேற்கூறிய யாவும் சரி

05) தேசிய சட்டத்தை எத்தனை வகைப்படுத்த முடியும்?
1) 05 2) 03 3) 07 4) 04

06) தேசிய பொதுச் சட்டத்தின் வகைகள்,
1) சிவில் சட்டம், அடிப்படைச் சட்டம் 2) சிவில் சட்டம், உரிமைச் சட்டம்
3) சிவில் சட்டம், குற்றவியல் சட்டம் 4) மேற்கூறிய எதுவுமில்லை

07) தற்போது இலங்கை அரசியலில் அமுலில் உள்ள யாப்பு?
1) 1972 2) 1947 3) 1972, 1978 4) 1978

08) சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கிய யாப்பு எது?
1) 1978 2) 1947 3) 1972 4) 1972, 1978

09) 1972 அரசியல் யாப்பில் மிக அதிகாரம் கூடியவர்?
1) ஜனாதிபதி 2) பிரதமர் 3) தேசாதிபதி 4) ஆளுநர்

10) நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கிய யாப்பு?
1) 1972 2) 1978 3) 1985 4) 1878

11) தற்போது நடைமுறையில் உள்ள பிரதிநிதிகள் தெரிவுமுறை?
1) தொகுதி வாரியான பிரதிநிதித்துவமுறை 2) விகிதாசார பிரதிநிதித்துவம்
3) இனவாரியான பிரதிநிதித்துவம் 4) மேற்கூறியவை

12) மக்கள் இறைமையை செயற்படுத்தும் அதிகாரம் உடையவர்கள்,
1) பாராளுமன்றம், ஜனாதிபதி
2) பாராளுமன்றம், நீதித்துறை
3) பாராளுமன்றம், நீதியரசர்
4) பாராளுமன்றம், ஜனாதிபதி, நீதித்துறை

13) அரச சட்டவர்க்கம், சட்டநிர்வாகம் ஆகிய அரச அலுவலர்களில் மிகவும் பிரதான இடம் வகிப்பவர்கள்?
1) நீதியமைச்சர் 2) உயர்நீதியரசர் 3) சட்டமா அதிபர் 4) மேற்கூறிய யாவும் சரி

14) நீதிமன்ற நிர்வாகம் செய்பவர்?
1) நீதியமைச்சர் 2) பிரதம நீதியரசர் 3) நீதிபதி 4) ஜனாதிபதி

15) பிரதம நீதியரசரை நியமிப்பவர்?
1) ஜனாதிபதி 2) பிரதமர் 3) நீதிபதிகள் 4) நீதித்துறை

16) "சட்ட ஆட்சி" பற்றி கூறியவர்?
1) ஏ.வி.டைசி 2) காணர் 3) கிறீன் 4) பெவுலட்

17) இலங்கை சட்ட சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை?
1) 225 2) 196 3) 250 4) 296

18) தேச வழமைச் சட்டம் அறிமுகமான ஆண்டு?
1) 1707 2) 1792 3) 1972 4) 1918

19) இலங்கை தேசியக் கொடியில் வாளேந்திய சிங்கம் குறிப்பது?
1) வீரம் 2) சௌபாக்கியம் 3) பொறாமை 4) மகிழ்ச்சி

20) இலங்கை ஜனாதிபதியின் ஆட்சிக் காலம்?
1) 5 வருடம் 2) 6 வருடம் 3) 10 வருடம் 4) 12 வருடம்

21) "மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற மக்கள் ஆட்சி ஜனநாயகம்" இக்கருத்து வெளியிடப்பட்ட ஆண்டு?
1) 1963 2) 1980 3) 1863 4) 1763

22) ஜனநாயக ஆட்சி எத்தனையாம் ஆண்டு ஆரம்பமானது?
1) கி.பி. 4 2) கி.மு. 4 3) கி.பி. 18 4) கி.பி.19

23) நவீன ஜனநாயகத்தின் தாயக நாடு எது?
1) இந்தியா 2) பாகிஸ்தான் 3) கிரேக்கம் 4) இஸ்ரேல்

24) திரும்பி அழைத்தல் (Recall) ஜனநாயக உத்தியைக் கையாளும் நாடு எது?
1) இலங்கை 2) இந்தியா 3) சுவிஸ்சர்லாந்து 4) பிரான்ஸ்

25) சட்டவாக்க சபை எது?
1) நீதிமன்றம் 2) அலரிமாளிகை
3) பாராளுமன்றம் 4) இளைஞர் பாராளுமன்றம்

26) பல கட்சி முறை என்ற பதம் குறிப்பது?
1) நாட்டில் பல கட்சி காணப்படல்
2) தேர்தலில் பல கட்சி போட்டியிடுதல்
3) பல கட்சி இணைந்து ஆட்சியைக் கைப்பற்றல்
4) சட்ட ரீதியாக பல கட்சிகள் பதிவு செய்திருத்தல்

27) ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படுவது?
1) உரிமை 2) தேர்தல் 3) நல்லாட்சி 4) ஊடகம்

28) "வெளித்தடைகள் அற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்தல் சுதந்திரம்" இக்கருத்தினை முன்வைத்த அறிஞர்?
1) ஆபிரகாம் லிங்கம் 2) ஆர்.டீ.பண்டார
3) ஹரல்ட் ஜே.லஸ்க்கி 4) ஜி.டி.எச்.போல்ட்



29) ஆங்கிலப் புரட்சி நிகழ்ந்த நூற்றாண்டு?
1) கி.பி. 1768 2) கி.பி. 1789 3) கி.பி. 1688 4) கி.பி. 1917

30) "மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை சமத்துவமான உரிமைகளுக்கு உரித்துடையவன்" முன்வைத்த சபை?
1) ஐக்கியநாடுகள் சபை 2) நீதிமன்ற சபை
3) பிரான்ஸ் தேசிய சபை 4) கூட்டுறவுச் சபை

31) அரசின் பிரதான நிறுவனம் அடங்கும் தொகுதி?
1) கல்வி, சுகாதாரம், மருத்துவம் 2) சட்டம், நீதி, நிர்வாகம்
3) சட்டம், கல்வி, பொருளாதாரம் 4) நீதி, பாராளுமன்றம், கல்வி

32) இலங்கை குடியரசின் பெயர் யாது?
1) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 2) இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு
3) ஐக்கிய தேசிய முன்னணி 4) இலங்கை அரசு

33) ஜனநாயக ஆட்சி வெற்றி பெற்றமைக்கான காரணமாக அமையாதது?
1) இரு கட்சி முறை காணப்படல்
2) முன்னேறிய பொருளாதாரம் நிலவுதல்
3) மக்கள் அரசியல் அறிவுடையவராகக் காணப்படல்
4) ஊடகங்களை ஒடுக்குதல்

34) தேசிய அரசு தோன்றிய நூற்றாண்டு?
1) கி.பி. 18 2) கி.பி. 19 3) கி.பி. 17 4) கி.மு. 18

35) ஜனநாயகத்துக்கு எதிரான சவாலாக அமையாதது?
1) தொழில் அரசியல் வகுப்பினரின் தோற்றம்
2) தேர்தல் ரீதியாக நடாத்துவதிலுள்ள சிக்கல்
3) அரசியல் பொருளாதாரப் பிரச்சினை
4) மேற்கூறிய எவையுமில்லை

36) உலகின் முதல் பெண் பிரதமரும், இலங்கையின் முன்னாள் பிரதமராக இருந்தவரும் யார்?
1) சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க 2) திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா
3) சிரந்தி ராஜபக்ஷ 4) அனுரா பண்டாரநாயக்கா

37) தற்போதைய பிரதமரின் பெயர் யாது?
1) ரட்ண ஸ்ரீ விக்கிரம நாயக்க 2) பசில் ராஜபக்ஷ
3) டி.எம்.ஜெயரட்ண 4) மகிந்த ராஜபக்ஷ

38) இலங்கையின் தேசியக் கொடியில் பச்சை நிறம் குறிப்பது?
1) தமிழர் 2) சிங்களவர் 3) முஸ்லிம் 4) பறங்கியர்

39) இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி?
1) மகிந்த ராஜபக்ஷ 2) ஜே.ஆர்.ஜெயவர்த்தன
3) டி.எஸ்.சேனாநாயக்க 4) சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க

40) ஏ-9 வீதி குறிப்பது?
1) கொழும்பு - யாழ்ப்பாணம் 2) கொழும்பு - கண்டி
3) யாழ்ப்பாணம் - கண்டி 4) காரைநகர் - யாழ்ப்பாணம்

விசேட வினாத்தாள் - 2012 - கல்விமுரசு

# கணவனை இழந்த பெண்கள் மீதான தவறான கண்ணோட்டம் ஒழியவேண்டும்

## – 25 வயதுப் பெண்ணின் ஆதங்கம்

(கஜா)

கணவனை இழந்த பெண்களை சமூகம் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதை நிறுத்த வேண்டும் என போரினால் கணவனை இழந்த பெண்ணொருவர் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 25 வயதேயான மேனகா சிவசுதன் என்பவரே இவ்வாறு குறிப்பிட்டார்.

ஒரு பிள்ளையின் தாயான இவர், 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தனது கணவரை மட்டுமன்றி, இரண்டு சகோதரர்களையும் இழந்துள்ளார். தற்போது இவர் தனது குழந்தையுடன் யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாயிலுள்ள இவரது தாயார் வீட்டில் வசித்து வருகின்றார்.

யுத்தத்தின்போது புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் தாம் சாப்பாட்டுக்கே வழியின்றி பெரிதும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்ததாகவும், வெளிநாட்டிலுள்ள உறவுகள் பண உதவி செய்து வருவதால் வறுமை ஒரு பிரச்சினையாகத் தெரியாத போதும், சமூகத்தின் தவறான சிந்தனைகள் தனக்குப் பாரிய பிரச்சினையாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

கணவன் மற்றும் சகோதரர்கள் எவருமின்றி தனது தேவைகளைத் தனித்துநின்று பூர்த்தி செய்யவேண்டியுள்ளதால், பல இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. வெளியே செல்லும் போது பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. நான் ஒரு இளம் பெண்ணாக இருப்பதால் சில ஆண்கள் என்னிடம் தவறாக நடந்து கொள்கின்றனர். இது ஒரு புறமிருக்க, என்னோடு படித்த மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்னைப் பார்ப்பதற்கு வீட்டிற்கு வருவார்கள். இதனை எமது சமூகம் சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறது, தவறாகப்பேசுகின்றது. இது என்னை மேலும் மேலும் உள ரீதியாகப் பாதிக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தன்னைப் போன்று இன்னும் பல இளம் விதவைப்பெண்கள் இவ்வாறான சூழ்நிலையிலேயே வாழ்ந்து வருவதாக சுட்டிக்காட்டிய மேனகா, தயவு செய்து எங்களையும் சாதாரண ஒரு பெண்ணாகப் பாருங்கள். ஏன் சந்தேகக்கண்ணோடு பார்க்கிறீர்கள்? நாங்கள் மனரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். மேலும் மேலும் எங்களைக் காயப்படுத்தாதீர்கள். தயவு செய்து எங்களுடைய மனநிலையைப் புரிந்து நடந்து கொள்ளுங்கள் என அவர் எல்லோருடைய சார்பிலும் சமூகத்திடம் கேட்டுக்கொண்டார். (சி)

# பண்டத்தரிப்பு நூலகத்தில் புத்தக றாக்கைகள் இல்லை

## – நூலகர் கவலை


(அனு)

புத்தக றாக்கைகள் இன்மையால் புத்தகங்களுக்குரிய பகுதி பிரிக்கப்படாது ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனால் வாசகர்கள் தமக்குரிய புத்தகங்களைத் தேடி எடுப்பதில் சிரமப்படுவதாக பண்டத்தரிப்பு நூலக நூலகர் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு பட்டினசபையின்கீழ் இயங்கி வரும் இந்த நூலகம் 1974 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.


245இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட இந்த நூலகத்தில் 5,200ற்கும் மேற்பட்ட புத்தகங்கள் காணப்படுகின்றபோதும், அவற்றை சரியான முறையில் பாதுகாத்து, தரம் பிரித்து அடுக்கி வைப்பதற்கான அலுமாரிகள், றாக்கைகள் இன்மையால் அனைத்துப் புத்தகங்களையும் ஓரிடமாக அடுக்கி வைக்கப்படுகின்றன, இதனால் வாசகர்கள் சிரமத்தின் மத்தியில் தமக்குத் தேவையான புத்தகங்களைத் தேடி வாசிக்கின்றனர் என்றார்.

மேலும் இந்த நூலகத்தில் தினமுரசு, வலம்புரி, உதயன், தினக்குரல் ஆகிய யாழ்ப்பாணப் பத்திரிகைகள் உட்பட 10 பத்திரிகைகள் உள்வாங்கப்படுவதாகவும், இந்தப் பத்திரிகைகளை முறையாக பேணுவதற்கும் போதிய இடவசதிகள் இல்லை,



கடமையாற்ற ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதோடு, மூன்று பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். அத்துடன், இந்த நூலகத்தில் கணினி வசதிகள் மற்றும் குடிநீர்ப் பிரச்சினை என்பன காணப்படுகின்றது என்றும் நூலகர் தெரிவித்தார். (சி)

# தொழிலாளர் பற்றாக்குறையால் நிறுத்தப்பட்ட அப்பள உற்பத்தி



(அனு)

தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக பண்டத்தரிப்பு-பிரான்பற்றுக் கிராமத்தில் இயங்கி வந்த அப்பளக்கைத்தொழில் நிலையம் ஒன்று அண்மைக்காலமாக மூடப்பட்டுள்ளது.

35ஆயிரம் ரூபா முதலீட்டுடன் 2009ஆம் ஆண்டு இந்தக் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறும் உரிமையாளரான அல்பேட்வில்லியம் சறோஜினிதேவி, தம்மிடம் 4 தொழிலாளர்கள் மட்டுமே வேலை செய்ததாகக்குறிப்பிட்டார்.

இந்தக்கைத்தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு போதியளவு தொழிலாளர்கள் இல்லாததாலும், உற்பத்தி செய்கின்ற அப்பளங்களை நுகர்வோர் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்கின்றமையினாலும், இலாபத்தை விட நட்டமே அதிகமாக உள்ளது. இதனால் தற்போது நாம் அப்பளம் தயாரிப்பதை நிறுத்தியுள்ளோம் என்றார்.

இதேவேளை, அப்பள உற்பத்தி மூலம் இவர்களுக்கு இலாபம் கிடைக்காததால், இந்த அப்பளக்கைத்தொழில் நிலையத்தில் வேலை செய்யும் ஒருவருக்கு நாளொன்றுக்கு 200 ரூபா மட்டுமே ஊதியமாக வழங்கப்பட்டது. இதனாலேயே எவரும் இங்கு வேலைசெய்ய முன்வருகிறார்கள் இல்லை என இங்கு வேலை செய்த தொழிலாளி ஒருவர் கூறினார். (சி)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு சீன நோயாளி மரணப் படுக்கையில் கிடந்தான். கையிலும் மூக்கிலும் வாயிலும் குழாய்கள் பொருத்தப்பட்டிருந்த பரிதாப நிலை. ஒரு வெள்ளைக்காரச் சாமியார் அவனிடம் வந்து அருகில் நின்று அவனுக்காகப் பிரார்த்தனை செய்தார். செய்துவிட்டு, “நீ ஏதாவது சொல்ல வேண்டுமா தம்பி” என்று கேட்டார். அவன் “கிச்சுகியாங் மிச்சுகியாங்” என்றான் தீனமான குரலில். சாமியாருக்குச் சீனமொழி தெரியாது. இன்னும் கொஞ்சம் பிரார்த்தனை செய்யச் சொல்கிறான் என்று எண்ணி மறுபடியும் பிரார்த்தனை செய்துவிட்டு, அவனை நோக்கி அன்பாக, “சரிதானா தம்பி?” என்றார். அவன் மேலும் தீனமாக “கிச்சுகியாங் மிச்சுகியாங்” என்றான். தான் பிரார்த்தனை செய்தது அவனுக்குக் கேட்கவில்லை என்று ஊகித்துக்கொண்ட சாமியார், மூன்றாம் முறை உரக்கவே பிரார்த்தனை செய்தார். செய்துமுடித்துவிட்டு, “கேட்குதா தம்பி?” என்றார். அவனிடமிருந்து பதில் வரவில்லை. அவன் இறைவன் திருவடியை அடைந்துவிட்டிருந்தான். வருத்தத்தோடு வெளியே வந்த சாமியார், “கிச்சுகியாங் மிச்சுகியாங்” என்றால் என்ன அர்த்தம்? என்று பலரிடம் விசாரித்தார். ஆங்கிலமும் சீனமும் தெரிந்த ஒருவர் சொன்னார்: “நீங்கள் என் ஒக்ஸிஜன் குழாயை மிதித்துக் கொண்டு நிற்கிறீர்கள் என்று அர்த்தம்.”

*** *** ***

மனச்சோர்வு நீங்க என்ன செய்யலாம் என்று அறிவதற்காக உளவியல் மருத்துவரை அணுகினார் ஒருவர். அவரும் பல்வேறு வழிமுறைகளை எல்லாம் சொன்னார். கடைசியாக, “மனச்சோர்வு நீங்குவதற்கு, ஆராய்ச்சியாளர்கள் சொல்லி வைத்திருக்கிற வழிமுறைகளை எல்லாம் உங்களிடம் இப்ப சொல்லியிருக்கிறேன். இதுக்குப் பதிலாக நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும்” என்றார் மருத்துவர். “என்ன?” என்று கேட்டார் வந்தவர். “இந்த வழிமுறைகளை எல்லாம் கடைப்பிடித்துப் பார்த்துவிட்டு, அதிலே பலன் இருந்தால் எனக்கு மறக்காமல் கடிதம் போடுங்க” என்றார். “எதுக்கு டொக்டர்?” என்றார் இவர். “ஏனென்றால் அதுக்குப் பிறகுதான் அதையெல்லாம் நான் முயற்சி பண்ணிப் பார்க்க வேண்டும்” என்றார் டொக்டர்.

*** *** ***

“தினமும் காலையும் மாலையும் வந்து பொலிஸ் ஸ்டேஷன்ல கையெழுத்துப் போட்டுட்டுப் போகணும் தெரியுதா?”

“சரிங்கய்யா... அப்புறம் வழக்கம்போலத் திருடப் போகலாங்களா...?”

*** *** ***

டாக்ஸியில் பின் சீற்றில் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்த பயணி ஏதோ கேள்வி கேட்பதற்காக ட்ரைவரின் தோளைத் தட்டினார். அலறி அடித்த ட்ரைவர், நிலை தடுமாறி காரைக் கொண்டுபோய் பஸ்ஸின் மேல் இடிக்கச் சென்று சமாளித்து ஒரு கடை வாசலைத் தொட்டபடி பிரேக் பிடித்து காரை நிறுத்தினார். நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் ட்ரைவர் சொன்னார், “இதோ பாருங்க. இன்னொரு முறை இப்படிச் செய்யாதீங்க. நான் மிகவும் பயந்துவிட்டேன்.” “என்னை மன்னியுங்கள்! தொட்டுக் கூப்பிட்டதற்கு இப்படி பயப்படுவீர்களென்று நான் நினைக்கவில்லை” என்றார் பயணி. “பரவாயில்லை. உண்மையில் இது உங்களுடைய தவறு இல்லை. இன்றுதான் நான் முதன்முதலாக டாக்ஸி ட்ரைவராக பொறுப்பேற்றிருக்கிறேன். கடந்த 25 ஆண்டுகளாக உயிரற்றவர்களை எடுத்துச் செல்லும் அமரர் ஊர்தியை ஓட்டிக் கொண்டிருந்தேன். அதனால் தான் திடீரென தோளைத் தொட்டவுடன் பயந்துவிட்டேன்” என்றார் ட்ரைவர்.

*** *** ***

**லென்னி புரூஸ்:** நல்லவேளை யேசு கிறிஸ்து 2000 வருடத்திற்கு முன்னால் சிலுவையில் அறையப்பட்டு செத்தார். யேசு கிறிஸ்து 20 வருடங்களுக்கு முன்னால் இறந்திருந்தால், கத்தோலிக்க பள்ளிச்சிறுவர்கள் தங்கள் கழுத்துக்களில் சிலுவைக்குப் பதிலாக மின்சார நாற்காலியை அல்லவா அணிந்து கொண்டு திரிய வேண்டியிருக்கும்!

*** *** ***

**ஒருவர்:** டாக்டர்! நான் மது, மாது, பாட்டு கூத்து எல்லாம் விட்டுவிட்டால் நிறைய நாட்கள் வாழ்வேனா?

**டாக்டர்:** அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. வாழ்வது அதேகாலம்தான். ஆனால் ரொம்பநாள் வாழ்வது போல தோன்றும் அவ்வளவுதான்.

# உள்நாட்டு பாதுகாப்பு விடயத்தில் இணைந்து செயற்பட மத்திய, மாநில அரசுகளுக்கு பிரதமர் வேண்டுகோள்



(டில்லி)

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் அனைத்து மாநில முதல்வர்கள் பங்கேற்கும் மாநாடு புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தியாவில் மாநில முதல்வர்கள் அனைவரும் ஒன்றாக பங்கேற்கும் மாநாடு ஆண்டிற்கொருமுறை நடத்தப்படுகிறது.

இந்த மாநாட்டில் உள்நாட்டு பாதுகாப்பு குறித்து விவாதிக்கப்படும் என்று அரசு அறிவித்தது. ஆனால், மாநாட்டில் தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைப்பது என்ற மத்திய அரசின் சர்ச்சைக்குரிய முடிவு குறித்து விரிவான விவாதம் நடத்த வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா, மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி உட்பட பல மாநில முதல்வர்கள் இந்த கோரிக்கையை வலியுறுத்தினர். இதை பரிசீலித்த மத்திய அரசு, தேசிய தீவிரவாத தடுப்பு மைய விவகாரம் தொடர்பாக விவாதிக்க மே 5ஆம் திகதி முதல்வர்கள் மாநாடு நடத்தப்படும் என்று அறிவித்தது.

இந்நிலையில், டில்லியில் உள்நாட்டு பாதுகாப்பு நிலவரம் குறித்து விவாதிக்க முதல்வர்கள் மாநாடு நடந்தது. அதில் மன்மோகன் சிங் மேலும் உரையாற்றுகையில்; உள்நாட்டு பாதுகாப்பில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயற்பட வேண்டும். ஜம்மு காஷ்மீரில் சட்டம் ஒழுங்கு முறையில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. பொலிஸ்துறையை நவீன மயமாக்கும் மாநில அரசுகளின் முயற்சிகளுக்கு மத்திய அரசு உதவி செய்யும் எனத் தெரிவித்தார்.

## தனியார் மயமாக்குதலுக்கு எல்.ஐ.சி. ஊழியர்கள் எதிர்ப்பு

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA

(குற்றாலம்)

பொதுத்துறையினை தனியார் மயமாக்குதலை மத்திய அரசு மாற்றிக் கொள்ள வேண்டும் என அகில இந்திய எல்ஜசி முகவர்கள் சங்க கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அகில இந்திய எல்ஜசி முகவர்கள் (லிக்காய்) சங்கத்தின் மாநில கூட்டம் குற்றாலத்தில் நடந்தது. அதில் எல்ஜசி முகவர்களைப் புறக்கணித்து நேரடி வர்த்தகத்தில் ஈடுபடுவதைக் கண்டித்தும், நேரடி வர்த்தகத்தை எதிர்த்தும் அதற்கான தனிக்கிளைகள் உருவாக்குவதை எதிர்த்தும் இந்தியா முழுவதும் எல்.ஐ.சி. முகவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதும், பொதுத்துறையினை தனியார் மயமாக்கும் திட்டத்தினை மத்திய அரசு மாற்றிக் கொள்ள வேண்டும். 1972 முகவர் சட்டத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடாது. எல்.ஜ.சி முகவர்களுக்கு சலுகைகளைக் குறைப்பதை எதிர்த்தும், பங்கு சந்தையால் ஏற்படும் இழப்பை ஈடு செய்து எல்ஜசியின் நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்தவும், எல்.ஐ.சி முகவர் சங்கத்தின் ஆலோசனையை பரிசீலிக்குமாறு எல்.ஐ.சி நிறுவனத்தையும், மத்திய நிதித்துறையையும் கேட்டுக் கொள்வது உட்பட பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.


# இந்தோனேஷியாவிலிருந்து தமிழகத்திற்கு 14 இலட்சம் தொன் நிலக்கரி இறக்குமதி




தமிழ்நாட்டில் உள்ள அனல்மின் நிலையங்களுக்கு 14 இலட்சம் தொன் நிலக்கரி இந்தோனேஷியா வில் இருந்து இந்த மாத இறுதியில் இறக்குமதி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் மொத்த மின் உற்பத்தியை விட மின்தேவை அதிகமாக உள்ளது.

தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தி 8,000 மெகாவோல்ட் ஆகும். காற்றாலை, நீர்மின்நிலையங்களில் நிரந்தரமாக மின் உற்பத்தி செய்ய முடியாது. நிரந்தரமாகக் கிடைப்பதே அனல் மின் உற்பத்திதான். அதிலும், நிலக்கரிப் பற்றாக்குறை ஏற்படும் போது, அனல் மின்உற்பத்தி குறைந்து விடும்.

தமிழ்நாட்டில் எண்ணூர், வடசென்னை, மேட்டூர், தூத்துக்குடி ஆகிய 4 இடங்களில் அனல் மின் நிலையங்கள் உள்ளன. இவற்றின் மூலம் மொத்தம் 2,700 மெகா வோல்ட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இது தவிர, வள்ளூரில் சோதனை ஓட்டம் முடிந்து, விரைவில் மின் உற்பத்தி தொடங்கவுள்ளது.



இதேபோல், மேட்டூரில் சோதனைப் பணிகள் தொடங்கியுள்ளன. இதனால் அனல் மின்நிலையங்களுக்கு நிலக்கரி தேவை அதிகரித்துள்ளது. ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்படி, பழைய அனல்மின் நிலையங்களுக்கு போதுமான நிலக்கரியை இந்திய நிலக்கரி கழகம் வழங்குகிறது. இதைவிட, நிலக்கரி தேவை அதிகமாக உள்ளதால், இந்தோனேஷியாவில் இருந்து இந்த மாத இறுதிக்குள் 14 இலட்சம் தொன் நிலக்கரியைக் கொள் முதல் செய்ய உள்ளது.

# 17 ஆண்டுப் போராட்டத்தின் பின் போலியோ இல்லாத இந்தியா

(புதுடில்லி)


இந்தியாவில் 17 ஆண்டுகள் போராட்டத்திற்கு பின்னர் போலியோ முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது. போலியோ இல்லாத நாடாக உலக சுகாதர நிறுவனமும் இதனை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தியாவில் கடந்த 2009 இல் 741 பேருக்கு இந்தப் பாதிப்பு இருந்தது . 2011 ஜனவரி மாதம் மேற்குவங்கத்தில் ஒரே ஒரு நபர் போலியோவால் பாதிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டார். ஓராண்டாக போலியோ பாதிப்பு இல்லை, தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



மக்களை அச்சுறுத்தி வந்த போலியோ முடிவுக்கு வந்திருக்கிறது. இந்த கொடூர நோய்த்தாக்கத்தை ஒழிக்க பல ஆயிரம் கோடிகளை செலவழித்து, பல முகாம்கள் நடத்தி மத்திய மாநில அரசுகள் பெரும் சிரத்தையுடன் இந்தப் பணியை முடித்திருக்கிறது. சமீபத்தில் நடந்த ஒரு விழாவில் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லா மல் சேவை மனப்பான்மையுடன் இந்தச் சேவையில் பங்காற்றிய 25 இலட்சம் பேருக்கு பிரதமர் நன்றி தெரிவித்து கொண்டார்.

# மதமாற்றம் செய்ய முயன்ற பாதிரியார் கைது



(விழுப்புரம்)

விழுப்புரம் அருகே மதமாற்றம் செய்ய முயன்ற பாதிரியாரை பொலிஸார் கைது செய்தனர். விழுப்புரம் அடுத்த கோலியனூர் கிழக்கு பாண்டி வீதியைச் சேர்ந்த ஜோன் உதயகுமார், (வயது - 38). இவர் விழுப்புரம் அருகே உள்ள சமத்துவபுரம் தேவாலயத்தில் பாதிரியார்ராக உள்ளார். 14ஆம் திகதி காலை அதே பகுதியைச் சேர்ந்த சுமதி, (வயது -30) என்பவரை தேவாயலத்திற்கு அழைத்துள்ளார். வர மறுத்ததால் திட்டி, தடியால் தாக்கியுள்ளார். அவர் மதம்மாற்றம் செய்ய முயற்சித்ததாக அளிக்கப்பட்ட புகாரின் பேரில், விழுப்புரம் பொலிஸார் வழக்குப் பதிந்து ஜோன் உதயகுமாரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

# அம்பேத்காரின் பிறந்தநாள் விழா



(திருநெல்வேலி)

பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் அம்பேத்கரின் 122 ஆவது பிறந்த நாள் விழா கடந்த 14ஆம் திகதி (14 ஏப்ரல் 1891 - 6 டிசம்பர் 1956) கொண்டாடப்பட்டது. நெல்லை சந்தியில் உள்ள அம்பேத்கரின் திருஉருவச் சிலைக்கு மாநில செயற்குழு உறுப்பினர் தேவேந்திரன் மாலை அணிவித்தார். நிகழ்ச்சியில் கட்சித்தொண்டர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பதி லட்டில் தங்கம்



(நகரி)

திருப்பதி வெங்கடேச பெரு மாள் கோவில் லட்டு பிரசாதத்தில், தங்க நகை இருந்ததைக் கண்ட பக்தர் ஒருவர் ஆச்சரியமடைந்தார்.திருமலை கோவிலில் தினமும், 2 இலட்சம் மேற்பட்ட லட்டுகள் தயாரித்து, பக்தர்களுக்கு விற்பனை செய் யப்படுகிறது. சித்தூர் மாவட்டம் பி.கொத்தகோட்டா நகரில் ரங்கசமுத்திரம் சாலையில் வசிக்கும் சூரேரெட்டியப்பா, கடந்த இரு நாட்களுக்கு முன்பு திருமலைக்கு சென்றார். சாமி தரிசனத்திற்குப் பின், இவர் லட்டு பிரசாதங்களை வாங்கி வந்தார்.

இதில் ஒரு லட்டை, அதே நகரில் வசிக்கும் தனது நண்ப ரான சுபர்ணாச்சாரிக்கு வழங்கினார். இவர்கள் இந்த லட்டு பிரசாதத்தை திண்பதற்காக உடைத்துப் பார்த்தபோது, லட்டின மையப் பகுதியில் வட்ட வடிவிலான, அரை கிராம் எடை கொண்ட தங்கத் திருகாணி இருப்பதைக் கண்டனர். திருமலையிலிருந்து வாங்கி வந்த லட்டு பிரசாதத்தில் தங்கம் கிடைத்தது எங்களின் அதிர்ஷ்டம் என தம்பதியினர் தெரிவித்தனர். கடந்த காலங்களில் பக்தர்கள் வாங்கிச் சென்ற லட்டு பிரசாதங்களில் இரும்பு ஆணிகள், கரப்பான் பூச்சி இருந்ததை கண்டு பக்தர்கள் அதிர்ச்சியடைந்தனர். அதே லட்டு பிரசாதத்தில் இப்போது தங்கம் இருந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# தற்கொலை செய்தவர்களுக்கு ஆத்ம சாந்திக்காக திருமணம்

(சென்னை)

புதுச்சேரியில் தற்கொலை செய்து கொண்ட காதல் ஜோடிக்கு திருமணம் செய்து வைத்து, ஒரே இடத்தில் சடலங்கள் புதைக்கப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

புதுச்சேரியை சார்ந்த லிங்குசாமி (வயது- 28), இவர் தனியார் வாகனமொன்றில் ஓட்டுநராக பணிபுரிந்தார்.

இவரும் அதே பகுதியை சேர்ந்த கண்ணகி (வயது - 20) என்பவரும் கடந்த இரண்டு ஆண்டுகளாக காதலித்து வந்தனர். இவர்களுடைய காதலுக்கு இரு வீட்டாரும் எதிர்ப்புத் தெரிவித்ததால் மனமுடைந்த காதலர்கள் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டனர்.

இவர்களின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடந்தபோது, காதல் ஜோடிகளின் நண்பர்கள், உறவினர்கள், தற்கொலை செய்து கொண்ட காதல் ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைக்கும்படி இரு வீட்டாரிடமும் கேட்டுக் கொண்டனர். இதையடுத்து கண்ணகியின் உடல் லிங்குசாமியின் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டு அங்கு இருவருக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

பின்பு, இருவரின் சடலங்களையும் ஒன்றாக ஊர்வலமாக எடுத்துச் சென்று இடுகாட்டில் அடக்கம் செய்தனர். இவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி, மேற்கொள்ளப்பட்ட திருமணச் சடங்கு உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பொதுமக்களை சோகத்தில் ஆழ்த்தியது.

# அமெரிக்காவில் பயங்கரச் சூறாவளி



அமெரிக்காவின் ஒக்லஹாமா நகரில் ஏற்பட்ட பயங்கரச் சூறாவளிப் புயலில் சிக்கி 5 பேர் பலியாகி உள்ளனர்.

அமெரிக்காவில் கடந்த சனிக்கிழமை கன்சாஸ், அயோவா, நெப்ரெஸ்கா, ஒக்லஹாமா உட்பட பல்வேறு பகுதிகளை சூறாவளிப் புயல் தாக்கியது.

இதனால் இந்தப் பகுதிகளில் மரங்களும், மின் கம்பங்களும் சாய்ந்தன. பல வீடுகள் சேதமடைந்தன. முன்னெச்சரிக்கையாக மக்கள் பலர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப் பட்டனர்.

ஒக்லஹாமாவின் உட்வார்டு பகுதியில் புயலில் சிக்கி இரண்டு குழந்தைகள் உட்பட ஐந்து பேர் பலியாயினர். அயோவாவின் க்ரெஸ்டன் பகுதியில் ஒரு மருத்துவமனை இந்தப் புயலில் சேதமடைந்தது.

# ஆப்கானில் அடுத்தடுத்து 7 இடங்களில் குண்டு வெடிப்பு

உலகச் செய்திகள்

ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து 7 இடங்களில் தொடர் குண்டுவெடிப்பு நடந்ததால், தலைநகர் காபூலில் பரபரப்பு ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டன் ஆகிய தூதரகங்களில் அடுத்தடுத்து 7 முறை தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இதில் எத்தனை பேர் பலியாயினர் என்பது குறித்த விவரம் இதுவரை தெரியவில்லை. இதனால் காபூல் நகரில் உள்ள மற்ற தூதரகங்களுக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு தலிபான்கள் பொறுப் பேற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் வெளிநாட்டினை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடந்துள்ளது என்றும், நாடாளுமன்றத்தினைத் தகர்ப்பதற்காக இந்தத் தாக்குதல் நடந்துள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


# ஏமனில் 183 அல்-கொய்தா தீவிரவாதிகள் பலியாகினர்



ஏமனின் தெற்குப் பகுதியில் உள்ள லோடரைக் கைப்பற்றுவதற்காக அல்கொய்தா தீவிரவாதிகள் தொடர்ந்து 5 நாட்களாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த 5 நாட்களில் நடந்த தீவிரவாதத் தாக்குதல்களில் மட்டும் 183 தீவிரவாதிகள் உட்பட 222 பேர் பலியானதாக அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் லோடரைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் தீவிரவாதிகள் நாச வேலையில் ஈடுபட்டனர். அப்போது பொலிஸார், துணை இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த பயங்கர துப்பாக்கிச் சண்டையில் 183 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

மேலும் பல பகுதிகளில் நடந்த சண்டையில் இராணுவத்தினர் 14 பேரும், மக்கள் 24 பேரும் பலியாயினர். இதேவேளை உள்ளூர் அல்கொய்தா தலைவர் அப்தல் ரயுப் என்பவரை வெள்ளிக்கிழமை இராணுவத்தினர் சிறைபிடித்துள்ளனர். மேலும் அபியான் மாகாணத்தில் லோடர் மற்றும் முதியா தவிர பிற பகுதிகள் அல்கொய்தாவின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



பெரு நாட்டின் லிமா நகரில் குவிந்த இசைக் கலைஞர்கள், கஜோன்ஸ் என்ற பெட்டி வடிவ இசைக் கருவியை ஒரே நேரத்தில் இசைத்து கின்னஸ் சாதனை படைத்தனர்.

# ஆப்கான் தாக்குதலுக்கு பாகிஸ்தான் கண்டனம்



ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட ஆயுததாரிகளின் தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. தலைநகர் காபூல் உள்ளிட்டு ஏனைய பகுதிகளில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களுக்கு பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரப்பானி கார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஸ்திரத் தன்மையும், அமைதியும் நிலவ வேண்டும் என்பதே பாகிஸ்தானின் முக்கிய நோக்கம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நோக்கத்தை அடைவதற்கு ஆப்கானிஸ்தானுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தமது நாடு வழங்கும் எனவும் ஹினா ரப்பானி கார் குறிப்பிட்டுள்ளார்.


ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மற்றும் பிற பகுதிகளில் மேற்குலக நாடுகளின் தூதரகங்கள் மீது தலிபான் ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். இதேவேளை, இந்தத்தாக்குதல் சம்பவங்களில் எவ்வித உயிர்ச்சேதங்களும் பதிவாகவில்லை என நேட்டோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். அத்துடன் தங்களது பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாக அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

# எண்ணெய்ப் பிராந்தியத்தில் சூடான் குண்டுத் தாக்குதல்

சர்ச்சைக்குரிய ஹெக்லிக் எண்ணெய் பிராந்தியத்தில் சூடான் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருவதாக தென்சூடான் அரசாங்கம் அறிவித்துள்ளது. தென்சூடான் இராணுவத்தினர் குறித்த பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததை அடுத்து நடத்தப்பட்ட இந்தத்தாக்குதல்களால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே குறித்த பிராந்தியத்தில் இருந்து தென்சுடான் படையினர் வெளியேறாத வரை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட மாட்டாது என சூடான் அறிவித்துள்ளது. எகிப்து வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த பின்னர் சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷிர் இதனைத் தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு தென்சூடான் தனிநாடாக சுதந்திரப் பிரகடனம் செய்த பின்னர், இரு தரப்பினருக்கும் இடையில் பல்வேறு விடயங் களில் முரண்பாடுகள் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென் ஆபிரிக்க ஜனாதிபதி ஆறாவது முறையாக திருமணம்



தென் ஆபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா(வயது- 70) அடுத்த வாரம் ஆறாவது முறையாக திருமணம் செய்து கொள்கிறார். தென் ஆபிரிக்க ஜனாதிபதி ஜுமாவுக்கு தற்போதைய நிலையில் மூன்று மனைவியர் உள்ளனர்.

ஏற்கனவே இவர் 1998ஆம் ஆண்டில் ஒரு மனைவியை விவாகரத்து செய்துள்ளார். மற்றொரு மனைவி தற்கொலை செய்து கொண்டார். இவர் கடந்த 2009ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு இரண்டு முறை திருமணம் செய்து கொண்டுள்ளார். இந்நிலையில் அடுத்த வாரம் குளோரியா போங்கிலி என்ஜிமா என்ற பெண்ணை திருமணம் செய்து கொள்ளவுள்ளார்.

ஏற்கனவே இந்தப்பெண்ணுடன் பழகி வரும் ஜுமா தென் கொரியாவில், கடந்தாண்டு நடந்த ஜி20 மாநாட்டுக்கு என்ஜிமாவுடன் சென்றார். என்ஜிமாவுக்கு ஏற்கனவே மூன்று வயதில் ஒரு மகன் இருக்கிறான்.

அடுத்த வாரம் ஆறாவது முறையாக ஜுமா திருமணம் செய்து கொள்ளப் போவதை ஜனாதிபதியின் தகவல் தொடர்பாளர் மேக் மகராஜ் உறுதிப்படுத்தியுள்ளார். ஜுமாவுக்கு தற்போது 20 குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரபல ஹிந்தி நடிகரின் வீடு பாரம்பரிய சின்னமாகின்றது



பாகிஸ்தானின் பெஷாவர் நகரைச் சேர்ந்த ஹிந்தி நடிகர் திலீப்குமாரின் பிறந்த வீட்டை பாரம்பரியச் சின்னமாக அறிவிக்க பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.

கடந்த 1922ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம திகதி திலீப்குமார் பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் நகரில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் முகமது யூசுப் கான். அவர் பிறந்த வீடு பெஷாவர் நகரின் பிரசித்தி பெற்ற கிஸ்ஸ கவானி பஜார் பகுதியில் உள்ளது.

கதை சொல்பவர்களின் பஜார் என்பது அதன் பொருள். முற்காலத்தில் மத்திய ஆசியப் பகுதிகளில் பயணம் செய்த வியாபாரிகள் கூடும் முக்கிய இடமாக இருந்ததால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

வசதி மிக்க பழ வியாபாரியான இவருடைய தந்தை தன்னுடைய மைத்துநர் யூசுப் குரேஷிக்கு 1943ஆம் ஆண்டில் இந்த வீட்டைக்கொடுத்த அடுத்த வருடமே அவர் அதை விற்றுவிட்டார்.

இந்த வீட்டின் இப்போதைய உரிமையாளர் 2005 இல் அதை வாங்கினார்.

பாகிஸ்தான் அரசு இந்த வீட்டைக் கையகப்படுத்துவதற்கு இழப்பீடாக தான் ரூபா5 கோடி கேட்டதாகவும், அரசு ரூபா3 கோடி தருவதற்கு ஒத்துக்கொண்டிருப்பதாகவும் வீட்டு உரிமையாளர் இக்ரமுல்லா கான் கூறினார்.

அரசு இவ்வீட்டைப் பாரம்பரியச் சின்னமாக மாற்ற பெரும் தொகையைத் தர முடிவு செய்துள்ளதால் பலரும் வீட்டுக்கு உரிமை கொண்டாடி வருகின்றனர். ஆயினும் தானே உண்மையான உரிமையாளர் என்பதற்கான பத்திரங்களை வைத்துள்ளதாகக் கூறும் இக்ரமுல்லா கான், திலீப்குமார் திரைப்படங்கள் எதையும் பார்த்ததில்லை என்கிறார்.

தான் பிறந்த வீட்டைப் பாரம்பரியச் சின்னமாக மாற்ற பாகிஸ்தான் அரசு தீர்மானித்திருப்பதில் திலீப்குமார் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். பிரபல ஹிந்தி நடிகரும் இயக்குநருமான ராஜ் கபூரும் பெஷாவர் நகரில்தான் பிறந்தார். இவருடைய பிறந்த வீட்டையும் நினைவிடமாக மாற்றுவதற்காக பாகிஸ்தான் அரசு முயற்சி செய்து வருகிறது. இன்றைய பிரபல ஹிந்தி திரைப்படக் கதாநாயகன் ஷாருக் கானின் உறவினர்கள் பலர் பெஷாவர் நகரில் வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# 40 ஆண்டுகளுக்கு பின் அகற்றப்பட்ட காலில் பாய்ந்த துப்பாக்கிக் குண்டு

இங்கிலாந்தைச் சேர்ந்த றொபேர்ட் மிச்செல்(வயது-63) என்பவர் இங்கிலாந்து கடற்படையில் அதிரடிப்படை வீரராக பணிபுரிந்தார். கடந்த 1970ஆம் ஆண்டுகளில் நடந்த போர்களில் பங்கேற்ற இவருக்கு, காலில் துப்பாக்கிக்குண்டு பாய்ந்தது. ஆனால் துப்பாக்கிக் குண்டுகளை அறுவைச் சிகிச்சை மூலம் றொபேர்ட் அகற்றவில்லை.

காலில் ஏற்பட்ட லேசான வலியுடன் தனது காலத்தை கழித்து வந்தார். இந்நிலையில் வலி அதிகமாகவே டேவன் நகரில் உள்ள மருத்துவமனைக்குச் சென்றார். பின்பு அவரைப் பரிசோதித்த மருத்துவர்,றொபேர்ட் மிச்செல் காலில் இருக்கும் துப்பாக்கிக்குண்டை அகற்ற அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து 40 ஆண்டுகளுக்கு பிறகு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு துப்பாக்கிக் குண்டு அகற்றப்பட்டது.

# நந்தன வருட இராசி பலன்கள்

## கும்பம்



அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: கு, கூ, கோ, ஸி, ஸீ, ஸே, ஸோ, தா உள்ளவர்களுக்கும்)

சூரிய புதல்வன் மாறிவிட்டால் சுகங்கள் எல்லாம் தேடி வரும்!

'மக்கள் சக்தியே மகத்தான சக்தி' என்று நட்பு வட்டத்தை பெருக்கிக் கொள்ள பிரியப்படும் கும்ப ராசி நேயர்களே!

'கர' வருடம் முடிந்து 'நந்தன' வருடம் தொடங்குகிறது. ஆண்டின் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சனி வக்ரம் பெறுகிறார். 6இற்கு அதிபதி சந்திரன் 11இல் சஞ்சரிக்கிறார். பஞ்சம ஸ்தானாதிபதி புதன் நீச்சம் பெறுகிறார். சுக ஸ்தானாதிபதி சுக்ரன் மட்டும் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார்.

எனவே சுகமும், சந்தோஷமும் வந்து சேரும். துடிப்போடு செயற்பட முற்படுவீர்கள். அஷ்டமத்து சனியின் வக்ர இயக்கம் உங்கள் செயற்பாடுகளில் தாமதத்தை உருவாக்கலாம்.

சனி வக்ரம் பெறுவது உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகளை கொடுக்கத்தான் செய்யும். மருந்து, மாத்திரைகளை அதிகம் உட்கொண்டு உடம்பை கெடுத்துக் கொள்ளாமல் தகுந்த மருத்துவ ஆலோசனைகளைக் கேட்டு குணப்படுத்திக் கொள்வதே நல்லது. செவ்வாய் உங்கள் ராசியை பார்ப்பதால் சகோதர ஒற்றுமை பலப்படும். புதிய திருப்பங்கள் ஏற்பட்டாலும், வாகன மாற்றமும், இடமாற்றம், ஊர்மாற்றம், வீடு மாற்றங்கள் போன்றவை வாயில் தேடி வருவதற்கான சூழ்நிலை உண்டு.

அஷ்டமத்து சனிக்கு பரிகாரமாக திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, பெரிச்சிக்கோவில் போன்ற ஸ்தலங்களுக்கும் சென்று முறையாக அன்ன தானம், வஸ்திர தானம், சொர்ண தானம் ஆகியவற்றைக் கொடுத்து, சனி சந்நிதியில் கவசம் பாடி முறையாக வழிபட்டு வந்தால் முன்னேற்றங்கள் சிறப்பாக அமையும்.

ராகு-கேதுக்களுக்கும் ப்ரீதி செய்து, சர்ப்ப சாந்தி செய்வது நட்பை பலப்படுத்தும்.

**சமூக சேவை செய்வதை இலட்சியமாக கொண்டவர்கள்**

சுறுசுறுப்பாக பணிபுரிபவர்கள் நீங்கள். எதையும் மாறுபட்ட குணத்தில் சிந்திப்பீர்கள். உங்கள் இலட்சியம் உயர்வாக இருந்தாலும், பாதி வாழ்க்கைக்கு மேல்தான் பலன் கிடைக்கும். காரணம், உங்கள் ராசிநாதன் சனி ஆவார். பொது வாழ்வில் ஈடுபட்டு, பொறுப்புகளை ஏற்று, சமூக சேவை செய்யும் எண்ணம் உங்களுக்கு இயற்கையிலேயே இருக்கும்.

சாமர்த்தியசாலிகளாக நீங்கள் விளங்கினாலும், சனியின் ஆதிக்கம் அதிகரிக்கும் போது, ஏமாற்றத்தையும் சந்திக்க நேரிடலாம். சொந்த, பந்தங்களின் உறவை ஏராளவோடு வைத்து கொள்வீர்கள்.

குடும்ப ஸ்தானாதிபதியாக குருவும், சுகாதிபதியாக சுக்ரனும் இருப்பதால் இவை இரண்டின் அமைப்பை பொறுத்தே உங்களுக்கு வாழ்க்கைத் துணை அமையும். குரு, சுக்ர ஆதிக்கம் பார்த்து வரனை தேர்ந்தெடுத்தால் தான், வாழ்க்கை சிறப்பாக இருக்கும். உங்களுக்கு இந்தப் புத்தாண்டு எப்படி இருக்கும்? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி மூன்று வரை**

ஆண்டின் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சனி சஞ்சரிக்கிறார். சுகஸ்தானத்தில் கேது. எனவே ஆரோக்கியத்திலும் அக்கறை தேவை. நீங்கள் நன்மை செய்வதாக நினைந்து செய்த காரியம் வேறுவிதமாக மாறலாம்.

குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. திடீர் விரயங்கள் திக்கு முக்காட செய்யும். குடும்ப பெரியவர்களின் ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்துங்கள். ஒவ்வொரு சனிக்கிழமையும் ஆஞ்சநேயரையும், சனிபகவானையும் வழிபடுங்கள்.

**வாகன யோகம் தரும் குருப்பெயர்ச்சி**

நவக்கிரகங்களில் நல்லவர் என்று அழைக்கப்படுவர் குருபகவான். அவர் உங்கள் ராசிக்கு நான்காம் இடத்தில் சஞ்சரித்து அர்த்தாஷ்டம குருவாக சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக, பழைய வாகனங்களை பழுது பார்க்கும் சூழ்நிலையோ, புதிய வாகனங்கள் வாங்கி மகிழும் வாய்ப்போ கிடைக்கும். தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை.

2, 11இற்கு அதிபதியாக குரு விளங்குவதால், தனவரவில் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். பழகிய கூட்டாளிகளே ஏமாற்றி விட்டார்களே என்று கவலைப்படுவீர்கள். இந்த காலத்தில் குரு திசை, குரு புத்தி நடப்பவர்கள், வியாழக்கிழமை பிறந்தவர்கள், அர்த்தாஷ்டம குருவிற்கு உரிய பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

குரு, கேதுவுடன் கூடியிருப்பதால் சர்ப்ப தோஷ பரிகாரங்களும், ராகு-கேது ப்ரீதியும் செய்வதன் மூலமே நீங்கள் தொல்லைகளில் இருந்து அகல முடியும்.

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. இதன் விளைவாக, சென்ற வருடத்தில் ஏற்பட்ட தொழில் இழப்புகளை ஈடுகட்ட புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக்கொண்டு, விரும்பிய துறையை தேர்ந்தெடுத்து, முன்னேறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவர்.

**செவ்வாய்-சனி சேர்க்கை காலம்!**

ஆனி 9ஆம் திகதி முதல் ஆடி 29ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு எட்டாமிடத்தில் செவ்வாயும், சனியும் இணைகிறார்கள். இது அவ்வளவு நல்லதல்ல. இதுபோன்ற காலங்களில் எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது. உடல் ஆரோக்கியம் சம்பந்தமாக குடும்ப உறுப்பினர்கள் ஒருவர் மாற்றி ஒருவருக்கு தொல்லை வரலாம். பெற்றோர் வழியில் மனக்கசப்பு தரும் செய்திகள் வரலாம்.

அங்காரக வழிபாடும், காக வாகனத்தான் வழிபாடும் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்து கொடுக்கும்.

**துயரங்களை போக்குமா துலாம் ராசி சனி!**

ஒன்பதில் சஞ்சரிக்கும் சனி ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திட்டு போகிறார். பொன், பொருள்கள் உங்களுக்கு சேரும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் உருவாகும். அத்தனைக்கும் மேலாக, பொருளாதார நிலை ஒரு படி உயர்ந்து உன்னத நிலையை கொடுக்கும். அந்த நிகழ்வு ஆவணி 27இல் நிகழவிருக்கிறது.

**வக்ர குரு வளர்ச்சியை கூட்டுமா?**

புரட்டாசி 26ஆம் திகதி முதல் தை 24ஆம் திகதி வரை ரிஷபத்தில் சஞ்சரிக்கும் குரு வக்ரம் பெறுகிறார். உங்கள் ராசியை பொறுத்தவரை வக்ரம் பெறுவது நல்லதல்ல. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். தன லாபம் வருவதில் தடைகள் உருவாகலாம்.

பயணங்களை திடீர் திடீரென மாற்றி அமைப்பீர்கள். உத்யோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் இட மாற்றம், ஊர் மாற்றங்கள் வரலாம். இல்லம் கட்டி குடியேறுவதிலும் தாமதம் ஏற்படும்.

**பாம்பு கிரகங்களின் பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?**


கார்த்திகை 17ஆம் திகதி உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தில் கேதுவும், ஒன்பதாமிடத்தில் ராகுவும் சஞ்சரிக்க போகிறார்கள். இதன் விளைவாக, பூர்வீக சொத்துக்களில் இலாபம் கிடைக்கும்.

மூன்றில் சஞ்சரிக்கும் கேது முன்னேற்றத்தில் சில முட்டுக் கட்டைகளை கொடுக்கலாம். குறிப்பாக, சகோதரர்கள் சச்சரவுகளை கொடுக்கலாம். பஞ்சாயத்துக்கள் பாதியிலேயே நிற்கலாம். அரசியல்வாதிகளுக்கு புதிய பொறுப்புகள் வரும். கோவில் காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள்.

புற்று கோவில்களுக்கும், புராதன கோவில்களுக்கும் சென்று சர்ப்ப சாந்தியை செய்தால் அற்புதமான வாழ்க்கை அமையும்.

**வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1ஆம் திகதி முதல் ஆனி 6ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4ஆம் திகதிமுதல் பங்குனி 31ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் ராசி அடிப்படையில் ராசிநாதனாகவும், பனிரெண்டுக்கு அதிபதியாகவும் சனி விளங்குகிறார். பனிரெண்டுக்கு அதிபதி வக்ரம் பெறுவது நன்மை தான்.



'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். 'வெற்றி' என்ற மூன்றெழுத்தை குறிக்கோளாக கொண்டு செயற்படுவீர்கள். வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும்.

அதே நேரத்தில் ராசிநாதனாகவும் சனி விளங்குவதால், திடீரென உடலில் நோய்கள் தோன்றலாம். எனவே மருத்துவ ஆலோசனைகளை பெற ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகும். இந்த காலத்தில் சனி பகவானை வழிபடுவதோடு, வார வழிபாடாக அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**மங்கையர்களுக்கான மகத்தான பலன்கள்!**

நந்தன வருடம் கும்ப ராசியில் பிறந்த பெண்களுக்கு, வருட தொடக்கத்தில் அஷ்டமத்து சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர், திடீரென குணங்கள் மாறலாம். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் பாதியிலேயே நின்று போகலாம். பெரியவர்களின் ஆலோசனைகளை அங்கீகரித்து கொள்வது நல்லது. மக்கட் செல்வங்களால் மனக்கவலை அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்து செல்வதன் மூலமே ஒற்றுமை பலப்படும். குரு பெயர்ச்சிக்கு பின்னால் தாய் வழி பகைகள் உருவாகலாம். ராகு, கேது பெயர்ச்சிக்கு பிறகு நல்ல காரியங்கள் இல்லத்தில் நடை பெறுவதற்கான அறிகுறி தோன்றும். சனி மற்றும் புதன் திசை, புத்தி நடப்பவர்கள் தக்க பரிகாரத்தை செய்து கொண்டால், வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

(தொடரும்...)

# டெங்கு தொற்றுவோர் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் காலாண்டுப் பகுதியில் டெங்குத் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக முக்கிய காரணம் தற்போது நிலவும் காலநிலை மாற்றமே என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மழை காரணமாக நீர் பல இடங்களில் தேங்கி இருப்பதன் காரணமாக டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நிரந்தர ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி', மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு

(கொழும்பு)

நிரந்தர ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி ஒன்றை அமைக்க மக்கள் விடுதலை முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தில் இது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டதாக முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

ஏகாதிபத்திய தலையீடு காணப்படுவதாக சில அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மக்கள் மத்தியில் கூறிவருகின்ற போதும் அது அரசியல் நோக்கம் கருதியே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிரந்தர ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி ஒன்றை அமைக்க, மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தலைமையில் குழுவொன்று நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

# வடக்கின் மீள்குடியமர்வு யாழ். செயலகத்தில் ஆராய்வு



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் மீள் குடியேற்றப்பட்டுள்ள மக்களது தேவைகள், குறைபாடுகள் மற்றும் நிவாரண வழங்கல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆய்வு ரீதியிலான கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது இன்னமும் மீளக்குடியேற்றம் மேற்கொள்ளப்படாத பகுதிகள் குறித்தும் பாவனைக்கு விடப்படாத தனியார் மற்றும் பொதுக் கட்டடங்கள், வீடுகள் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன் வழங்கப்படாதிருக்கும் நிவாரணங்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், யாழ். மாவட்ட செயலாளர் இமெல்டா சுகுமார், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வானிலையில் குழப்பம்; மழை வீழ்ச்சிக்கு வாய்ப்பு

இலங்கையின் மேலான வளிமண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் வானிலைக் குழப்பம் காரணமாக வடக்கு கிழக்கு வடமத்திய, ஊவா மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இரவு வேளைகளில் இடி, மின்னலுடன் கூடிய மழை ஆங்காங்கே இன்றும் நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால் வடக்கு கிழக்கு, தெற்கு, தென்கிழக்குக் கரையோரங்களில் மழை ஏற்படக்கூடும். இதன்போது ஓரளவான காற்றும் வீசககூடும் எனவே இடி மின்னல்களின் போது பொதுமக்கள் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறும் வேண்டப்பட்டுள்ளனர்.

மேலும் நேற்று முன்தினமும் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிவரையும் யாழ்ப்பாணத்தில் 12.2 மில்லிமீற்றர் மழைப் பொழிவு ஏற்பட்டிருப்பதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் அதிகாரி புஸ்பநாதன் தெரிவித்துள்ளார். (பா)


# நூல் வெளியீட்டுவிழா

புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானத்தில் சிவக்கன்று மருதப்பு சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட திருநாவுக்கரசு நாயனார் குருபூசையின் நூற்றாண்டு விழாவும் "அப்பர் அருளமுதம்" நூல் வெளியீட்டு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மேற்படி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பொன். வைரமுத்து தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் மஞ்சுளா சதீசன், உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களான பேராசிரியர் கா.குகபாலன் பேராசிரியர் மா.வேதநாதன், பேராசிரியர் சி.வேல்நம்பி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

"அப்பர் அருளமுதம்" என்ற நூலினை தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர், ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி வெளியிட்டு வைப்பார். சண்முகநாதன் (சுவிஷ்) முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார். (10)

# மும்பையைச் சுருட்டியது டெல்லி




டெல்லி டேர் டெவில்ஸ் அணியின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் மும்பை அணி 92 ஓட்டங்களுக்குள் சுருண்டதால் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது டெல்லி அணி. மும்பையில் நேற்று நடபெற்ற இப்போட்டியில் நாணயச் சுளற்சியில் வெற்றிபெற்று முதலில் கழத்தடுப்பை டெல்லி தேர்வு செய்தது. இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது அவ்வணி 5 ஓட்டங்களைப் பெறுவதற்குள்ளாகவே ஆரம்ப ஜோடி பிரிக்கப்பட்டது.

பின்பு வந்தவர்களும் சிறப்பாக ஆடாததனால் அவ்வணி 19.2 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 92 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிக பட்சமாக ஹர்பஜன் - 33, றோகித் சர்மா - 29 ஓட்டங்களைப் பெற ஏனையோர் 8 இற்குக் குறைந்த ஓட்டங்களையே பெற்றனர். பந்துவீச்சில் நடீம் மோர்கல், அக்ர்கர், உமேஸ் யாதவ், ஆகியோர் தலா இரண்டு, பதான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 93 ஓட்டக்கங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய டெல்லி மூன்று விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 14.5 ஓவரில் வெற்றியிலக்கை அடைந்தது. அவ்வணி சார்பாக ஓஜா - 13, செவாக் - 32, ஜெயவர்த்தன - 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆ.பி.சிங் - 2, ஓஜா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக நடீம் தெரிவானார்.

## இந்திய எம்.பிக்கள்...

இதனால் வடக்குக் கிழக்கு உட்பட அனைத்து தமிழ் மக்களும் பாரியளவிலான அழிவுகளை சந்தித்தனர். இவ்வாறானதொரு பேரழிவுகளை மீண்டும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இந்தியா உருவாக்கக் கூடாது.

வன்னி மக்களின் விடயங்களை ஆராய்வதாக கூறி உள்நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்த இலங்கை வரும் இந்திய நாடாளுமன்றக் குழு முயற்சிக்கக் கூடாது. நாட்டில் பெரும் பின்னடைவுகளை சந்திக்க மூலகாரணமாக இருந்த விடுதலைப் புலிகளுடனான போர் ஏற்பட இந்தியாவின் தலையீடு முக்கியமானதாக அமைந்திருந்தது. இதனை அனைவரும் அறிவர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் என்பது உள்நாட்டு விவகாரம். இதனை ஆராய வெளிநாடுகள் முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இலங்கை வரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உள்நாட்டு விடயங்களில் தலையிடவோ, அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்கவோ முயற்சிக்ககூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அறிக்கைகள் மூலம்...

அதைவிடுத்து ஊடகங்களிடம் வாய்க்கு வந்தபடி அறிக்கைவிட்டு வருவது முறையற்ற செயல். தமிழ்க் கூட்டமைப்பு இப்போது வங்குரோத்து அரசியல் நடத்திவருகின்றது. அதனால்தான் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மே தினத்தைக் கொண்டாட தீர்மானித்துள்ளது.

பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக அரசாங்கம் எப்போதுமே தயாராகவே உள்ளது. பொய்யான அறிக்கைகளை விடுவதை விடுத்து பேச்சுக்கான திகதி குறித்து அரச தரப்பு பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும். அதைவிடுத்து ஊடகங்களிடம் திகதியைப் பற்றிக்கேட்பது பொருத்தமற்றது எனவும் அமைச்சர் தெரிவித்தா.

## காணாமற்போயிருந்த...

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்கள் புனர்வாழ்வு பெற்று விடுதலையானவர்கள் இரண்டு இலட்சம் ரூபாவை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனக் கூறி, ஆவணங்களில் கையெழுத்திட வேண்டும் எனத் தெரிவித்து தன்னை அழைத்துச சென்றதாக சுதர்ஷன் தெரிவித்துள்ளார். அவ்வாறு அழைத்துச் செலலும் வழியில், தன்னை வான் ஒன்றில் ஏற்றிய இந்த நபர்கள், குச்சவெளி பிரதேசத்தில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நபர் ஒருவர் குறித்து தன்னிடம் விசாரணை நடத்தியதாகவும் சுதர்ஷன் பொலிஸாரிடம் கூறியுள்ளார். அழைத்துச் சென்ற நபர்கள் தன்னை நன்கு கவனித்து கொண்டதுடன், விசாரணைகளின் பின்னர் கண்களைக் கட்டி, அழைத்து வந்து, அனுராதபுரம் சந்தியில் இறக்கிவிட்டுச் சென்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து முதலிக்குளம பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கடத்தியவரைக் கண்டதாக...

நபரை பொலிஸ் நிலையத்தில் கண்டதாக தெரிவித்ததாக அவர் கூறுகிறார். ஓர் அரசியல்வாதி மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் என்ற வகையில், அவர் பொதுப்படையாக கருத்துக்களை கூறக்கூடாது. இது ஓர் அவமதிப்பாகும். பெயரை எம்மிடம் தாருங்கள். அப்போது நாம் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என கோத்தாபய ராஜபக்ஷ கூறினார்.

பொறுப்புவாய்ந்த ஓர் பிரஜை என்ற வகையில் அவர், மேற்படி பொலிஸ் உத்தியோகஸ்தரின் பெயரை பொலிஸ் மா அதிபரிடம் தெரிவித்திருக்க வேண்டும். அவர் அதை செய்தாரா? குறைந்த பட்சம் இப்போதாவது அப்பெண்ணின் பெயரை எமக்குத் தருமாறு நான் சவால் விடுகிறேன். அப்போது எம்மால் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

அவர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவதன் மூலம் ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகத்துக்கு விளையாடுகிறார். 1987-88 இல் அவரின் கட்சி ஆட்சியிலிருந்தபோதுதான் சட்டத்துக்குப் புறம்பான வகையில் அதிக எண்ணிக்கையான கொலைகள் இடம்பெற்றன என்பதை நான் நினைவுபடுத்த வேண்டுமா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

## கோத்தாபய...

அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்புச் செயலாளர் ஓர் அரச ஊழியர் ஆவார். எனவே மரியாதை முறைமைப் படியில் அவர் மிக கீழ் நிலையிலேயே உள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அறிக்கைக்கு சவால்விடும் அதிகாரம் அவருக்கு இல்லை. குரல் அற்ற மக்களுக்காக குரல் கொடுப்பது எமது கடமை என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாம் கருத்துக்களை வெளிப படுத்துகிறோம் என லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கூறினார்.

குறித்த பெண்ணின் பெயரை வழங்குவதில் தான் மகிழ்ச்சியடைவதாக லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி. கூறினார். பாதுகாப்பு அமைச்சரும் முப்படைகளின் தளபதியுமான இந்நாட்டின் ஜனாதிபதி கோரினால் எந்த தகவலையும் வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைவேன் என அவர் தெரிவித்தார்.

## நிலக்கண்ணி வெடித்து...

ஒன்று சேர்ந்து நேற்றுக் காலை கிளாலிக்குத் தேங்காய் பிடுங்கச் சென்றுள்ளனர். இவர்களில் இருவர் தென்னை மரத்தில் ஏற முற்பட்ட வேளை நிலத்தில் புதையுண்ட நிலையிலிருந்த கண்ணிவெடி வெடித்துச் சிதறியுள்ளது. இச் சம்பவத்தில் ஸ்ரீதரன் பேர்னார்ட் (வயது-20) ரமணன் (வயது -18) ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவர் காலில் படுகாயமடைந்த நிலையிலும், மற்றவர் முகத்தில் படுகாயமடைந்த நிலையிலும் "ஹலோ றஸ்ற்" கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எஸ்)

## நலன்புரி நிலைய மக்களை...

பயணத்திட்டம் பற்றிய நிகழ்ச்சி நிரல்களை விளக்கிக் கூறினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்து பேசுவது குறித்து அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது அத்துடன், எதிர்வரும் 21 ஆம் திகதி சிறிலங்கா ஜனாதிபதியுடன் விருந்துபசாரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது பற்றியும் இதன்போது கூறப்பட்டது.

ஜனாதிபதியுடன் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை விருந்துண்ணுவதற்குப் பதிலாக, 20 ஆம் திகதி மாலை அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்யும்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுததுள்ளனர். அத்துடன், ரயில்பாதைத் திட்டப்பணிகளை பார்வையிடும் நிகழ்ச்சியை இரத்துச் செய்துவிட்டு மெனிக்பாம் முகாம்களில் உள்ள தமிழ் மக்களைச் சந்தித்துப் பேச அனுமதிக்க வேண்டும் என்றும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை இலங்கைக்கு வரும் இந்திய எம்.பிக்கள் குழு மேலும் பலவீனமாகியுள்ளது. இக்குழுவிலிருந்து சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய எம்.பிக்கள் குழு இலங்கை வரவுள்ளது. இந்தக் குழுவிலிருந்து திரினமூல் காங்கிரஸும், ஐக்கிய ஜனதாதளமும் நேற்று விலகி விட்டன. திரினமூல் சார்பில் சுசாரு ரஞ்சன் ஹல்தாரும், ஐக்கிய ஜனதாதளம் சார்பில் சிவானந்த திவாரியும் வருவதாக இருந்தது. ஆனால் இருவரும் போகவில்லை. இதனால் குழுவின் எண்ணிக்கை தற்போது 10 ஆக சுருங்கிப் போய் விட்டது.

இந்த பத்துப் பேரில் தற்போது தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக உள்ளது. மற்றவர்கள் வட மாநில எம்.பிக்கள் ஆவர். இந்த நிலையில் இந்திய எம்.பிக்கள் குழு நேற்று மாலை தனது பயணத்தை ஆரம்பித்தது.

# பலஸ்தீனம் தனி நாடாவதற்கு இலங்கையின் ஆதரவு தொடரும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

ஒவ்வொரு வருடமும் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் பலஸ்தீன் தனி நாடு தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தி வருவதாகவும் பலஸ்தீன் தனி நாடு அமைவதற்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிக்கும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பலஸ்தீன ஜனாதிபதி முஹமட் அபாஸ் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இரவு இலங்கை வந்தடைந்தார்.

பலஸ்தீன ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ரெயிட் என்.ஏ.மலிக் உள்ளிட்ட குழுவினரும் இலங்கை வந்திருந்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பலஸ்தீன் ஜனாதிபதி முஹமட் அபாஸ் ஆகியோர் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் பேச்சு நடத்தினர்.

இதன்போது, அரசியல், பொருளாதார, சுற்றுலா மற்றும் உயர் கல்வி ஆகிய நான்கு துறைகள் தொடர்பாக இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இரண்டு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டன.

இதனையடுத்து, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் பலஸ்தீன் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ரெயிட் என். ஏ.மலிக் ஆகியோருக்கிடையிலும் இரு தரப்பு பேச்சுவார்த்தை வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது. இதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய பலஸ்தீன் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ரெயிட் என்.ஏ.மலிக்,

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் விரிவடையும். அத்துடன் வலய மற்றும் சர்வதேச ரீதியில் இரு நாடுகளுக்கிடையிலான உறவும் மேலும் அதிகரிக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் பலஸ்தீன் தனி நாடு அமைவதற்கு உதவியாக அமையுமென எதிர் பார்க்கிறீர்களா என ஊடகவியலாளரொருவர் அமைச்சர் பீரிஸிடம் வினவியதற்கு,

பலஸ்தீன் தனி நாடு அமைவதற்கு இலங்கை ஏற்கனவே ஆதரவளித்துள்ளது. இந்த ஆதரவு எதிர்காலத்தில் தொடர்ந்து வழங்கப்படும்.

இந்த ஆதரவிற்காக ஒப்பந்தங்கள் கைச்சாத்திட வேண்டிய அவசியமில்லை. குறித்த ஒப்பந்தங்கள் நாடுகள் என்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடாவிட்டாலும் இலங்கை தொடர்ந்து பலஸ்தீனத்திற்கு ஆதரவளிக்கும் என அமைச்சர் பீரிஸ் பதிலளித்தார்.

அத்துடன், அமெரிக்கா அனுசரணையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு எதிராக பஸ்தீன் உட்பட அரபு நாடுகள் செயற்பட்டமைக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# 16 வயது யுவதியுடன் தங்கியிருந்த 67 வயது நபருக்கு விளக்கமறியல்

(வவுனியா)

16 வயதான யுவதியொருவருடன் ஹோட்டலொன்றில் தங்கியிருந்ததாக குற்றச்சாட்டுக்குள்ளான 67 வயதான ஆணொருவரையும் ஹோட்டலில் தங்குவதற்கு அனுமதியளித்த குற்றச்சாட்டில் கைதான ஹோட்டல் உரிமையாளரையும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிபதி அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

அத்துடன், குறித்த யுவதியை வைத்தியப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் நீதிபதி பணித்தார்.

இலங்கையைச் சேர்ந்த கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட 67 வயதான ஆணொருவரும், 16 வயதான யுவதியொருவரும் வவுனியாவிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்தபோது வவுனியா பொலிஸாரினால் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர். வயது வித்தியாசத்தை கவனிக்காது இவர்கள் இருவரையும் ஹோட்டலில் தங்குவதற்கு அனுமதியளித்த குற்றச்சாட்டில் ஹோட்டல் உரிமையாளர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

இவர்கள் தந்தை, மகளெனக் கூறி ஹோட்டல் விருந்தினர் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை பொலிஸாரினால் கண்டறியப்பட்டதாகவும் இது குறித்து சந்தேகமடைந்த பொலிஸார், இவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது தந்தை, மகள் உறவில்லையெனத் தெரியவந்ததாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து இலத்திரனியல் பாலியல் சாதனங்களும், மருந்துப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த சனிக்கிழமை வவுனியா நோக்கி கனேடியப் பிரஜையுடன் குறித்த யுவதியும், அவரது உறவினரொருவரும் வந்த நிலையில் குறித்த உறவினர் இடைவழியில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு திரும்பியுள்ளார். இந்த நிலையில் இவர்கள் இருவரும் வவுனியாவிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்ததாகவும் வவுனியா பொலிஸார் கூறினர்.

# தீர்மானத்தில் மாற்றமில்லை

மே 31 ஆம் திகதி முதல் இலங்கைக்கு கொண்டுவரப்படும் வாகனங்கள் அனைத்தையும் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கூடாக இறக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் மாற்றம் எதுவுமில்லை என இலங்கை துறைமுக அதிகார சபை நேற்று தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் வாகனங்களை இறக்குவதற்கான பிரத்தியேக நிலையம் மற்றும் வாகனங்களை களஞ்சியப்படுத்துவதற்கான இடப்பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக, வாகனங்களை ஏற்றிவரும் கப்பல்கள் நீண்ட தாமதத்தை எதிர்நோக்குவதாக இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சரக்கு கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதால் இறக்குமதியாளர்கள் அதிக சரக்கு கட்டண சுமையை எதிர்கொள்வதாகவும் துறைமுக அதிகார சபையின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வானிலை தரவு உபகரணத்தை திருடியவர்கள் விளக்கமறியலில்



(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் பொருத்தப்பட்டிருந்த வானிலை தரவு சேகரிப்பு உபகரணத்தைத் திருடிய சம்பவத்தில் தொடர்புடையவர் எனத் தெரிவித்து கைதான ஐந்து சந்தேகநபர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.


குறித்த சந்தேகநபர்கள் மாத்தறை பிரதான நீதவான் உதேஷ் ரணத்துங்க முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தச் சந்தேகநபர்கள் ஐவரும் நேற்று முன்தினம் மாலை தெவிநுவர மீன்பிடித் துறைமுகத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இவர்கள் வானிலை தரவு சேகரிப்பு உபகரணத்தை திருடியுள்ளதாக சந்தேகிப்பதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

திருடப்பட்டதாக கூறப்படும் குறித்த உபகரணம் கடந்த மாதம் 24 ஆம் திகதி இந்திய அதிகாரிகள் வழங்கிய தகவல்களுக்கு அமைய, கந்தர பொலிஸாரினால் கண்பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மகேந்திரபுரத்துக்கு மின்சாரம்



(யாழ்ப்பாணம்)

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள எழில்ஊர், மகேந்திரபுரம் ஆகிய கிராமங்களுக்கு மின்சார விநியோகம் செய்வதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.பொறுப்பாளர் ரி.றீகனின் தலைமையில் நேரடி மேற்பார்வையில் மேற்படி மின்விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இதனால் இப்பகுதியில் மீள் குடியமர்த்தப்பட்டிருக்கும் பொதுமக்கள் மின்சார வசதியைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.



# இலங்கைத் தமிழர்கள் மீது தி.மு.க.விற்கு அக்கறையில்லை

## அமைச்சர் நாராயணசாமி குற்றச்சாட்டு

(சென்னை)

தி.மு.க.வுக்கு இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறையில்லை என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

நாராயணசாமி நேற்று முன்தினம் காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் டில்லிக்கு புறப்பட்டுச் சென்றார். அப்போது விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அவர் பேட்டி அளித்தார்.

டில்லியில் இருந்து இலங்கைக்குச் செல்லும் நல்லெண்ண குழுவில் தி.மு.க. சார்பில் டி.கே.எஸ். இளங்கோவன் எம்.பி. செல்வார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. டி.கே.எஸ். இளங்கோவனும் இந்தப் பயணம் இலங்கை வாழ் தமிழர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று கருத்து தெரிவித்திருந்தார்.

ஆனால் கடைசி நேரத்தில் இலங்கை செல்லும் நல்லெண்ணக் குழுவில் இருந்து தி.மு.க. இடம் பெறாது என்று அறிவித்தது வருத்தம் அளிக்கிறது. இந்தச் செயல் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழர்கள் மீது அவர்கள் அக்கறை கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது என நாராயணசாமி தெரிவித்தார்.

# செங்கல்பட்டு முகாம் அகதிகள் விடுதலை கோரி உண்ணாவிரதம்



தமிழகத்தின் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை அகதிகள் தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 32 பேரில் பத்துப் பேரே இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

தாம் இலங்கை போரில் இருந்து பாதுகாப்புக் கோரியே தமிழகத்துக்கு வந்ததாகவும், தமக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது என்றும் அவர்களில் சிலர் கூறியுள்ளனர். தமது குடும்பத்தினர் போரினால் பாதிக்கப்பட்டு மிகவும் துன்பத்தில் இருப்பதால், அவர்களை தாம் பராமரிக்க வேண்டியிருப்பதாகவும் ஆகவே பிணையிலாவது தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.